
# ராமகிருஷ்ண மிஷன்
# நூற்றாண்டு விழா
# 1897-1997

## ராமகிருஷ்ண மிஷன்
## ( இலங்கைக் கிளை )
## சிறப்பு மலர் - 1998



270.6
ராமகி



சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா மண்டபம், கொழும்பு

## முன்பக்க அட்டைப்பட விளக்கம்

பகீரதன் தனது முன்னோர்கள் நற்கதி அடைவதற்காக வானுலக கங்கையை பூமிக்குக் கொண்டு வந்தான். கங்கைக்கு வழிகாட்டுவதற்காக அவன் சங்கை ஊதியபடியே முன்னால் சென்றான். தொடர்ந்து சென்றாள் கங்கை. அதுபோல் இன்றைய சந்ததியினருக்கு இந்து மதத்தை சுவாமி விவேகானந்தர் கொண்டு வருகிறார். கங்கைப் பிரவாகத்தில் காணப்படுவது கங்காதேவியின் வாகனமாகிய மகரம். அதன் முதுகில் நாம் காண்பது ராமகிருஷ்ண மிஷனின் சின்னமாக சுவாமி விவேகானந்தர் வடிவமைத்தது.

# ராமகிருஷ்ண மிஷன்

# நூற்றாண்டு விழா

# 1897 – 1997

## சிறப்பு மலர்

## 1998


ராமகிருஷ்ண மிஷன்

(இலங்கைக் கிளை)

Published by
Ramakrishna Mission
No. 40, Ramakrishna Road
Colombo - 6
Sri Lanka

PHONES PBX 654-1144
654-1180
654-5391
654-9581
654-9681
Fax : 654-4346

RAMAKRISHNA MATH
P.O. BELUR MATH, DIST.HOWRAH
WEST BENGAL : 711 202

# MESSAGE

I am glad to know that the Ramakrishna Mission, Sri Lanka, will be bringing out a souvenir to commemorate the centenary of the Ramakrishna Mission.

The establishment of the Ramakrishna Mission by Swami Vivekananda opened a new horizen not only in the age-old spiritual thoughts of our country but also brought about a new movement in the field of cultural and socio-economic development. The activities of the Mission are pioneering efforts for the regeneration of the masses. The Ramakrishna Mission, however, is not a social welfare organization, but it has basically a spiritual outlook with social commitments and universal appeal. The aim of this organization is to help people free themselves from suffering and bondage by realizing their divine nature and awaken them to serve their fellow beings in the spirit of worship. These ideals are implied in the motto that Swamiji gave to the Ramakrishna Mission: atmano moksharthang jagaddhitaya cha. "For one's own liberation and for the welfare of the world".

Furthermore, Ramakrishna Mission stands for universal harmony – harmony of religions, harmony of races and culture, harmony of science and spirituality, harmony of man and nature. Lasting peace can be established in the world only through such harmony.

May the blessings of Sri Ramakrishna, the Holy Mother and Swamiji be showered on everyone associated with this centre so that it may continue its activities more effectively for the benefit of the masses in the years to come. I wish the publication of the souvenir a grand success.

Swami Bhuteshananda

(Swami Bhuteshananda)
President
(Ramakrishna Math and Ramakrishna Mission)

Date : May 11, 1998

# ராமகிருஷ்ண மிஷன்


## சின்னமும் விளக்கமும்



அலைவீசும் தண்ணீர் கர்மத்தையும், தாமரை பக்தியையும், உதய சூரியன் ஞானத்தையும், சுற்றிக்கொண்டிருக்கும் பாம்பு யோகத்தையும் எழுப்பப்பட்ட குண்டலினி ஆற்றலையும், அன்னம் பரமாத்மாவையும் குறிக்கிறது. எனவே இந்தப் படத்தின் திரண்ட கருத்து கர்மம், ஞானம், பக்தி, யோகம் ஆகிய நான்கின் இணைப்பால் பரமாத்மாவின் காட்சியைப் பெறுவதாகும்.

*- சுவாமி விவேகானந்தர்*

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வதர்ம ஸ்வரூபிணே ।
அவதார வரிஷ்டாய ராமக்ருஷ்ணாய தே நம: ॥

அறத்தை நிலைநாட்டியவரும் எல்லா தர்மங்களின் வடிவினரும் குருவுக்கெல்லாம் குருவும் ஆகிய ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்குகிறேன்.

# முன்னுரை

1897-ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி சுவாமி விவேகானந்தர் ராமகிருஷ்ண சங்கத்தை நிறுவினார்.

சமுதாய மேம்பாட்டிற்கு இந்து சமயம் தனது பூரண பங்களிப்பை அளிக்கத் தவறியதன் காரணத்தினால், கடந்த சில நூற்றாண்டுகளாக, பாரத சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளும், ஒற்றுமையின்மையும், ஏழ்மையும், அடிமைத்தனமும், இன்னும் வேறு பல தீமைகளும் மலிந்து போய்விட்டிருந்தன. இத்தகைய ஒரு இருண்ட காலப்பகுதியிலே தோன்றி, மக்களது உள்ளத்திலே தன்னம்பிக்கையையும், ஆன்ம விழிப்பையும், தேச பக்தியையும் ஊட்டி, தாழ்வுற்றிருந்த பாரத சமுதாயம் மீண்டும் தலை நிமிர்ந்து பெருமையுடன் வாழ வழிகாட்டியவர்தான் சுவாமி விவேகானந்தர்.

இறைவழிபாடு ஆலயத்திற்குள்ளேயே முடங்கிவிட்ட காரணத்தினால்தான் இந்து சமுதாயம் நலிவுற்றது என்பதைக் கண்டறிந்த அவர், 'மக்கட்தொண்டே மகேசன் சேவை' என்று முழங்கி, இறைவழிபாடு மானிட சேவையாக மலர வழிகாட்டியுள்ளார். இதுவே ராமகிருஷ்ண சங்கத்தின் அடிப்படை தத்துவமும் ஆகும்.

அவர் தொடங்கி வைத்த இச்சங்கம், மனித வாழ்க்கையின் பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், உலகளாவிய ரீதியில் இன்று சேவையாற்றி வருகின்றது. இந்து சமய வரலாற்றில் இச்சங்கம் ஒரு புதிய பரிமாணத்தையே தோற்றுவித்துள்ளது எனலாம்.

இன்று நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த நிலையில் உள்ள இச்சங்கத்தின் விரிவான பணிகளைக் குறித்து மக்கள் அறிய வேண்டும் என்ற நோக்கிலே இந்த நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

இம்மலரை மக்கள் வாங்கிப் படித்து 'மக்கட் தொண்டே மகேசன் சேவை' என்னும் சுவாமி விவேகானந்தரின் தாரக மந்திரத்தினால் எழுச்சி பெற்று, இச்சமுதாயத்திலே நல்ல மாற்றங்களைக் கொண்டுவர உழைக்கவேண்டும் என்பதே எங்கள் அவா.

**சுவாமி ஆத்மகனானந்தா**

**உபதலைவர்**

**ராமகிருஷ்ண மிஷன்**

**(இலங்கைக் கிளை)**

# பொருளடக்கம்


1. சங்க ஜனனி 7

2. ராமகிருஷ்ண சங்கத் தோற்றம் 9

3. ராமகிருஷ்ண மிஷனும்
   ராமகிருஷ்ணரின் துறவிச் சீடர்களும் 16

4. ராமகிருஷ்ண இயக்கம் :
   குறிக்கோளும் செயல்பாடும் 33

5. ராமகிருஷ்ண மிஷனின் உலகளாவிய பணிகள் :
   ஒரு கண்ணோட்டம் 45

6. இலங்கையில் சுவாமி விவேகானந்தர் 68

7. ராமகிருஷ்ண மிஷன், கொழும்பு :
   சில பரிமாணங்கள் 69

8. ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு :
   சில பணிகள் 77

9. Centenary Celebrations of Ramakrishna Mission
   All India Devotees' Convention 87

   Dawn of A New Era 88

10. Centenary Celebrations of Ramakrishna Mission
    All India Youth Convention 90

    Self-Development and National Development 91

# சங்க ஜனனி

புத்த கயையில் அன்னை ஸ்ரீசாரததாதேவி பிரபலமான ஒரு மடத்தைக் காண நேர்ந்தது. அது சிறந்த வசதிகளுடன் கட்டப்பட்டிருந்தது. உணவுக்கும் பிற தேவைகளுக்கும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதைக் கண்ட அன்னையின் மனத்தில் வேதனை மிகுந்த காட்சி ஒன்று எழுந்தது – குருதேவரை நம்பி, அவரே தெய்வமென்று தங்கள் படிப்பையும் சொத்து சுகங்களையும் உற்றார் உறவினரையும் துறந்து வந்த அவரது சீடர்களாகிய தம் பிள்ளைகள் நாடு முழுவதும் அலைந்து கொண்டிருந்தனர். இந்தக் காட்சி அன்னையின் கண்களில் நீரை நிறைத்தது. தம் பிள்ளைகளுக்கும் இதுபோல் மடங்கள் ஏற்பட வேண்டும் என்று தாய்மை உணர்வு பீறிட்டுப் பொங்க, கண்களில் நீர் பெருகப் பிரார்த்தனை செய்தார். அன்னையின் அந்தப் பிரார்த்தனைதான் இன்றைய ராமகிருஷ்ண மடங்கள் அனைத்திற்கும் வித்தாக அமைந்தது.

இதைப்பற்றி பின்னாளில் அன்னை கூறினார் : 'ஓ! இதற்காக நான் குருதேவரிடம் எவ்வளவு கண்ணீர் விட்டுப் பிரார்த்தனை செய்தேன் தெரியுமா ? அதன் பிறகுதான் அவரது அருளால் இந்த மடம் (பேலூர் மடம்) தோன்றியுள்ளது. குருதேவர் மறைந்த பின்னர் அவரது துறவிச் சீடர்கள் தங்கள் வீடு வாசல் அனைத்தையும் துறந்து ஒரு வாடகை வீட்டில் தங்கினார்கள். பின்னர் தவ வாழ்க்கையில் ஈடுபட்டவாறே, தனித்தனியாக இங்கும் அங்கும் அலைந்து திரிந்தார்கள். இது என்னை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்கியது. நான் குருதேவரிடம், "ஓ பகவானே! நீர் வந்தீர். இவர்கள் சிலருடன் விளையாடல் புரிந்தீர். பிறகு மறைந்தும் விட்டீர். அதனுடன் எல்லாம் முடிந்துவிட வேண்டியதுதானா? அதுதான் முடிவு என்றால் நீர் பூமிக்கு வந்து ஏன் இத்தனை வேதனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்! தெருக்களில் பிச்சையெடுத்துச் சாப்பிட்டுவிட்டு, மரத்தடியில் படுத்துக் கிடக்கும் துறவியர் எத்தனையோ பேரை பிருந்தாவனத்திலும் காசியிலும் பார்த்திருக்கிறேன்! அத்தகைய சாதுக்களுக்கு இந்த நாட்டில் குறைவே கிடையாதே! உமது பெயரில் அனைத்தையும் துறந்த என் பிள்ளைகள் உணவுக்காகப் பிச்சையெடுப்பதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. உம்மிடம் எனது பிரார்த்தனை இதுதான்: உமது பெயரைச் சொல்லிக்கொண்டு உலகைத் துறப்பவர்களுக்குச் சாதாரண உணவும் உடையும் கிடைக்க வேண்டும். அவர்கள் உமது உபதேசங்களையும் லட்சியங்களையும் மையமாகக் கொண்டு ஓரிடத்தில் ஒன்றுகூடி வசிக்க வேண்டும். உலக வாழ்க்கையில் துன்புற்ற மக்கள், அவர்களிடம் வந்து உமது அமுதமொழிகளைக் கேட்டு ஆறுதல் பெறவேண்டும். அதற்காகவே அல்லவா நீர் வந்தீர்! அவர்கள் அலைந்து திரிவதைக் காண என்னால் சகிக்க முடியவில்லை'' என்று

பிரார்த்தித்தேன். அதன் பின்னரே நரேன் படிப்படியாக இதையெல்லாம் உருவாக்கினான்'.

எத்தனை பொருள் பொதிந்த பிரார்த்தனை! தாய்மையின் இயல்பான உணர்ச்சிப் பெருக்குடன் எழுந்த பிரார்த்தனைதான்! ஆனால் ராமகிருஷ்ண இயக்கத்தின் உன்னத லட்சியங்களின் விதையும் எவ்வளவு பாங்காக இந்தப் பிரார்த்தனையில் பொதிந்துள்ளது! குருதேவர் தமது இளஞ்சீடர்களைத் துறவிகளாக்கி, பிச்சையேற்று வரப் பணித்தபோது முதல் பிச்சையளித்து, சங்கத்திற்கான பிள்ளையார்சுழி போட்டது அன்னை; இப்போது தமது பிரார்த்தனை மூலம் சங்கத்திற்கு உருக்கொடுப்பதும் அன்னைதான். இவை மட்டுமல்ல; இயக்க வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் அன்னையே வழிகாட்டிச் சென்றார். இக்காரணம் பற்றியே அவர் 'சங்க ஜனனி' அதாவது சங்கத்தின் தாய் என்று போற்றப்படுகிறார். அன்னையை சங்க ஜனனி என்று முதன்முதலில் அழைத்தது சுவாமி விவேகானந்தர் ஆவார். 1897-இல் ராமகிருஷ்ண மிஷனை நிறுவிய அதே கூட்டத்தில் இதனை அறிவித்தார் அவர்.


(சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து வெளியீடாகிய
'அன்னை ஸ்ரீசாரதாதேவி' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது).

**குருதேவர் எண்ணற்ற கருத்துக்களின் இருப்பிடமாக இருந்தார். அவை இந்த மடத்தின் (ராமகிருஷ்ண மிஷனின்) மூலமே உலகெங்கும் பரவப் போகிறது. யுகயுகமாக இது இவ்வாறே நடைபெறப் போகிறது.....**

**அதற்காகத்தான் (சாதாரணமானவர்களும் ஆன்மீக வாழ்வில் ஈடுபடுவதற்காகத்தான்) என் நரேன் (சுவாமி விவேகானந்தர்) இத்தகைய பணிகளை (நிவாரணப் பணி போன்றவற்றை) அறிமுகப்படுத்தியிருக்கிறான். நமது சங்கம் இந்தப் பாதையில்தான் போகும்.... காலப்போக்கில் அதன் அற்புத விளைவுகளை நீங்கள் காண்பீர்கள்.**

***- அன்னை ஸ்ரீசாரதாதேவி***

## அன்னை ஸ்ரீசாரதாதேவி



யதாக்னேர் தாஹிகா சக்தி: ராமக்ருஷ்ணே ஸ்திதா ஹி யா ।
ஸர்வ வித்யா ஸ்வரூபாம் தாம் ஸாரதாம் ப்ரணமாம்யஹம் ॥

தீயில் வெம்மை உறைவதுபோல் ராமகிருஷ்ணரில் உறைபவளும் அனைத்து அறிவு வடிவினளும் ஆகிய சாரதைத் தாயை வணங்குகிறேன் !

# ராமகிருஷ்ண சங்கத் தோற்றம்

## சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளில்

**“எனது வாழ்வும் பணியும்” என்னும் சொற்பொழிவிலிருந்து:**

சிந்தித்துப் பாருங்கள் : பத்துப் பன்னிரெண்டு இளைஞர்கள் மக்களுக்குப் பெரிய கருத்துக்களை விளக்கி, அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக உறுதி பூண்டிருப்பதாகக் கூறியபோது அந்த மக்கள் வாய்விட்டுச் சிரித்தனர். கேலி செய்தனர். சிரித்ததுடன் நிற்காமல் எங்களுக்கு கொடுமைகளையும் செய்தனர். அத்துடன் நின்றதா? இல்லை, எங்கள் பெற்றோர்கள் எங்கள் கன்னத்தில் அறையவும் விழைந்தனர். துன்பங்கள் பெருகப்பெருக எங்கள் உறுதி தீவிரமடைந்தது. ■

எங்கள் குருதேவரின் மனைவியான இந்தப் பெண்மணி மட்டுமே (அன்னை ஸ்ரீசாரதாதேவியார்) இளைஞர்களாகிய எங்களுக்கு, எங்கள் கருத்துக்களுக்கு ஆதரவு காட்டியவர்; அனுதாபப்பட்டவர். ஆனால் அவரோ ஆதரவற்றவராக இருந்தார். எங்களைவிட ஏழையாக இருந்தார். அதனால் என்ன? நாங்கள் பணியில் குதித்து விட்டோம். இந்த உயரிய கருத்துக்கள் இந்திய நாட்டை விவேகம் பொருந்திய பாதையில் அழைத்துச் செல்லும், எவ்வளவோ நாடுகளுக்கும் இனங்களுக்கும் பொன்னான காலத்தைத் தோற்றுவிக்கும் என்று நான் நிச்சயமாக நம்பினேன். நான் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக நம்பினேன். ■

........ இப்படியே இளைஞர்களாகிய நாங்கள் பணியைத் தொடர்ந்தோம். எங்களைச் சுற்றி வாழ்ந்த மக்களிடமிருந்து நாங்கள் பெற்றதெல்லாம் உதையும் சாபங்களும்தான். உணவுக்காக நாங்கள் வீடுவீடாக ஏறிப் பிச்சை எடுக்க வேண்டியிருந்தது. எல்லாம் எங்களுக்கு மறுக்கப்பட்டது. எப்போதாவது ஓரிரு ரொட்டிகள் கிடைத்தன. தங்குவதற்கு, இடிந்து போன பழைய வீடு ஒன்று எப்படியோ கிடைத்தது. படமெடுத்துச் சீறும் பாம்புகள் அங்கே ஏராளம். அதைவிட மலிவாக வேறு வீடு கிடைக்காது என்ற காரணத்தால் நாங்கள் அங்கே குடிபுகுந்தோம். ■

நான் பெருமையடித்துக் கொள்ளவில்லை. ஆனால் கவனியுங்கள். அந்த இளைஞர்கள் கூட்டத்தின் (சகோதர சீடர்கள்) கதையைக் கூறினேன். இன்று அவர்களது பணியை அறிந்து அவர்களை வாழ்த்தாத ஊரோ, ஆணோ, பெண்ணோ இந்தியாவில் இல்லை. நாட்டில் பஞ்சம் நேரும்போது இந்த இளைஞர்கள் பணி செய்யவும் தங்களால் இயன்றவரை எத்தனையோ மக்களைத் துயரத்திலிருந்து விடுவிக்கவும் முயல்கிறார்கள். இவர்கள் பணி செய்யாத பஞ்சம் என்பது இல்லை. இந்தப் பணி மக்கள் நெஞ்சில் பாய்கிறது. ■

**உரையாடல் மற்றும் கடிதங்களிலிருந்து:**

இந்த யுகத்தின் அவதார புருஷரான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த இடத்தில் (பேலூர் மடம்) எழுந்தருளி ஆசீர்வதிப்பாராக! இதை ஓர் ஈடிணையற்ற இயக்கமாக, உலகில் இருக்கின்ற எல்லா மதங்களும் எல்லா சமயக் கருத்துக்களும் ஒன்றாக இணைந்து, உலக மக்களுக்கு நன்மையும் அமைதியும் தருகின்ற ஒரு புண்ணிய ஸ்தலமாகச் செய்வாராக... ■

இந்த மடத்திலிருந்து பொங்கியெழப் போகின்ற தெய்வீகப் பெருவெள்ளம், மனித குலம் முழுவதையும் பேரின்பத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்தே தீரவேண்டும். இது நமது நம்பிக்கை ! நாம் நமது பலத்தையெல்லாம் திரட்டி வரிந்து கட்டிக் கொண்டு இந்த லட்சியத்தை அடைவதற்காகப் பாடுபட வேண்டும். யாரெல்லாம் இதில் நம்பிக்கை வைக்கிறார்களோ, அவர்கள் பகவானின் கருணையினால், அதற்கு வேண்டிய ஆற்றலும் வலிமையும் பெறுவார்கள்...■

ஒவ்வொரு இடத்திலும் நமது கிளை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும், இது எளிதான வேலைதானே! நீங்கள் எங்கெல்லாம் போகிறீர்களோ, அங்கெல்லாம் ஒரு கிளையைத் தொடங்கிவிடுங்கள். இந்த ரீதியில் நமது வேலை நடைபெறும். எங்கே ஐந்துபேர் ஸ்ரீராமகிருஷ்ணரை ஏற்றுக் கொள்கிறார்களோ அங்கே ஓர் அமைப்பை நிறுவிவிட வேண்டும். இவ்வாறு முன்னேறுங்கள்... ■

இந்த மடத்தை ஆன்மீகச் சாதனைகள் மற்றும் அறிவுப் பண்பாட்டு மையமாக மலர்த்த வேண்டும் என்பது என் விருப்பம். இங்கிருந்து எழும் சக்தி உலகம் முழுவதும் பாய்ந்து பரவும். மனிதர்களின் வாழ்க்கைப் போக்கையே மாற்றும். இந்த இடத்திலிருந்து ஞானம், பக்தி, யோகம், கர்மம் இவற்றை சமரசப்படுத்துவதற்கான இலட்சிய ஊற்றுக்கள் பொங்கிப் பெருகும். உண்மையான ஆன்மீகத் தாகம் கொண்டவர்கள் அனைவரும் நாளடைவில் இங்கே வந்து கூடுவார்கள்... ■

முதலில் அன்னதானம், பிறகு வருவது வித்யா தானம். அடுத்து வருவது மிக உயர்ந்த தானமாகிய ஞானதானம். இந்த மூன்றையும் நாம் இந்த மடத்தின் வாயிலாகச் செய்யவேண்டும்... ■

இறைவனின் திருவுளம் இருக்குமானால் இந்த மடத்தை ஒரு மகா சமரச நிலையமாக ஆக்குவோம். நம் பகவான் எல்லா கொள்கைகளின் சமரச வடிவமாக விளங்கினார். இந்த சமரசக் கருத்தை இங்கே நாம் நிலைபெறச் செய்தோமானால் அவர் இந்த உலகில் நிலைபெற்று வாழ்வார். எல்லா மதங்களிலும் எல்லா நெறிகளிலும் உள்ளவர்களும், பிராமணர் முதல் சண்டாளர்கள் வரையில் அனைவரும் இங்கு வருமாறும், அவரவர் லட்சியத்தை இங்கே காணுமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்... ■

ஸ்ரீராமகிருஷ்ணர் எனக்கு இட்ட கட்டளை, தமக்காக எல்லாவற்றையும் துறந்த தமது சீடர்களை ஒன்றுசேர்த்து, ஓர் இயக்கத்தை அமைக்க வேண்டும் என்பதுதான்... ■

இத்தகைய ஒரு பேரியக்கம் முளைவிட்டுள்ளது. பொங்கிவர இருக்கின்ற பேரலைகளின் மெல்லிய ஓசைகள் கேட்கிறது என்று நீங்கள் நினைக்கவில்லையா ? அந்த மையம், வழிகாட்டிச் செல்கின்ற அந்தத் தெய்வமனிதர் இந்தியாவிலே தோன்றினார். அவரே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்; அவரைச் சுற்றி இந்தக் கூட்டம் மெதுவாக ஒன்றுசேர்ந்து வருகிறது. அவர்கள் இந்தப் பணியைச் செய்து முடிப்பார்கள்... ■

ஸ்ரீராமகிருஷ்ணர் பரந்த கொள்கையைக் கொண்டிருந்தது போலவே இந்த மடமும் அத்தகைய பரந்த கொள்கையின் மையமாக விளங்கும். இங்கிருந்து எழுந்து பரவும் சமரசப் பேரொளி வெள்ளம் உலகனைத்தையுமே நிறைக்கும்... ■

**சுவாமிஜி தனது சகோதர சீடருக்கு எழுதிய கடிதம்**


அல்மோரா
24 ஜூலை 1897

அன்பார்ந்த அகண்டானந்தா,

உனது கடிதம் கிடைத்தது. விவரங்கள் கண்டு மகிழ்ச்சி, ஆதரவற்றோர் இல்லத்தைப்பற்றிய உனது கருத்துக்கள் சிறந்ததே. ஸ்ரீகுரு மஹராஜ் விரைவில் அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வார் என்பது நிச்சயம். ஒரு நிரந்தர மையத்தை உருவாக்க முயற்சி செய். பணத்தைப்பற்றிய கவலை வேண்டாம். நான் நாளை அல்மோராவிலிருந்து சமவெளிப் பகுதிக்குப் புறப்படுகிறேன். உற்சாகமுள்ள இடங்களில் எல்லாம் பஞ்ச நிவாரணத்திற்காக பணம் வசூல் செய்வேன், கவலை வேண்டாம். நமது கல்கத்தா மடம் அமைந்துள்ள முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மடம் அமையும் போதுதான் எனது ஆசை நிறைவுபெறும். பிரச்சார வேலையும் நின்றுவிட வேண்டாம். ஆனால் பிரச்சாரத்தைவிட முக்கியம் கல்வி. கிராம மக்களுக்குச் சொற்பொழிவு முதலியவை மூலமாக மதம், வரலாறு முதலியவற்றைக் கற்பிக்க வேண்டும். முக்கியமாக வரலாறு கற்பிக்க வேண்டும். நமது கல்விப் பணியில் உதவ இங்கிலாந்தில் சபையொன்று உள்ளது. இந்தச் சபை மிகச் சிறந்த முறையில் தன் பணியைச் செய்துவருவதை அதன் அறிக்கைகளிலிருந்து அறிகிறேன். இந்த வகையில் பல இடங்களிலிருந்தும் முறையாக உதவி வந்து சேரும். பயப்படாதே, உதவி வரட்டும். அதன்பிறகு வேலை செய்யலாம் என்று நினைப்பவர்களின் மூலமாக எந்தச் செயலும் நடைபெறாது. உதவி வந்தே தீரும் என்று செயல்களத்தில் குதிப்பவர்களே சாதிப்பவர்கள்.

எல்லா சக்தியும் உன்னிடம் உள்ளது, நம்பு. அது வெளிப்படாமல்

## சுவாமி விவேகானந்தர்



நம: ஸ்ரீயதிராஜாய விவேகானந்த ஸூரயே ।
ஸச்சித் ஸுக ஸ்வரூபாய ஸ்வாமினே தாபஹாரிணே ॥

துறவி வேந்தரும், உண்மை அறிவு இன்ப வடிவினரும், எல்லா துயரங்களையும் போக்குபவரும் ஆகிய விவேகானந்த ரிஷியை வணங்குகிறேன் !

போகாது. எனது உளம்கனிந்த அன்பையும் ஆசீர்வாதத்தையும் ஏற்றுக்கொள், பிரம்மச்சாரிக்கும் தெரிவி. அனல் பறக்கின்ற கடிதங்களை அவ்வப்போது மடத்திற்கு எழுது, அவர்களும் எழுந்து வேலை செய்யட்டும். ஜெய் குருதேவ் !

அன்பார்ந்த

**விவேகானந்த**

## சுவாமிஜி ராமகிருஷ்ண மிஷனைத் துவக்கிவைத்தல்

சுவாமிஜி, காலம் சென்ற பலராம் போஸின் வீட்டில் சில நாட்களாகத் தங்கி இருக்கிறார். அவரது விருப்பப்படி ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்கள் ஏராளம் பேர் மாலை மூன்று மணிக்கு அங்கே கூடி இருந்தனர். சுவாமி யோகானந்தரும் இருந்தார். ஒரு சங்கத்தை அமைப்பதற்காக சுவாமிஜி இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். வந்தவர்கள் தங்களுக்குரிய இடத்தில் அமர்ந்ததும் சுவாமிஜி பேசத் தொடங்கினார் :

'பல நாடுகளில் நான் பயணம் செய்ததன் விளைவாக, ஒரு கூட்டமைப்பு இல்லாமல் எந்த ஒரு பெரிய செயலும் செய்ய முடியாது என்ற எண்ணம் என் மனதில் வேரூன்றியிருக்கிறது. நம்முடையதைப் போன்ற ஒரு நாட்டில் ஜனநாயக அடிப்படையிலோ பொது வாக்களிப்பு முறையிலோ ஓர் அமைப்பை உடனடியாக ஆரம்பிப்பது நடைமுறையில் அவ்வளவு எளிதல்ல என்றே நான் எண்ணுகிறேன். இந்த விஷயத்தில் மேலை நாட்டினர் மிகுந்த பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்கள். பொறாமைக் குணமும் அவர்களிடம் நம்மைவிடக் குறைவாக இருக்கிறது. அவர்கள் திறமையை மதிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக என் விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே நான் ஊர்பேர் தெரியாத ஒருவன். என்றாலும் என்னை எவ்வளவு அன்போடு வரவேற்றார்கள், உபசரித்தார்கள்! நமது நாட்டிலும் பாமர மக்களிடம் கல்வி பரவும்போது அவர்களிடம் அத்தகைய தாராள மனமும் அனுதாப உணர்வும் வளரும்; தங்கள் மதப் பிரிவுகள் அல்லது கட்சிகள் என்ற குறுகிய வட்டத்திற்கு வெளியில் பார்க்கவும், சிந்திக்கவும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். அப்போதுதான் ஜனநாயக ரீதியில் வேலை செய்வது சாத்தியமாகும். எனவே இப்போது ஆரம்பிக்கும் இந்த அமைப்பிற்கு, பூரண அதிகாரமுள்ள அதிகாரி ஒருவர் அவசியம். ஒவ்வொருவரும் அவரது கட்டளைக்குப் பணிய வேண்டும். அதன்

பிறகு உரிய தருணம் வரும்போது பொது வாக்களிப்பு முறையில் அமைப்பை நடத்தலாம்.

'யாருடைய திருப்பெயரால் நாங்கள் துறவற வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறோமோ, யாரை லட்சியமாக ஏற்று, இல்லற வாழ்க்கை என்னும் உங்கள் நிலையில் இருந்தவாறே செயல்களத்தில் நீங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களோ, மறைந்த இருபது ஆண்டுகளுக்குள்ளேயே யாருடைய புனிதமான பெயரும் அசாதாரண வாழ்வும் மேலை மற்றும் கீழை நாடுகள் முழுவதும் அற்புதமாகப் பரவிக் கொண்டிருக்கிறதோ அவரது பெயராலேயே இந்தச் சங்கத்தை அமைப்போம். நாங்கள் அந்தப் பிரபுவின் தாசர்கள், நீங்கள் எல்லோரும் இந்தப் பணியில் உதவுபவர்களாக இருங்கள்'.

அங்குக் கூடியிருந்த கிரீஷ் சந்திரகோஷும், ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்ற இல்லற பக்தர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. சங்கத்திற்கு 'ராமகிருஷ்ண மிஷன்'என்று பெயரிடப்பட்டது. அதன் குறிக்கோள் முதலானவை கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டன.

**குறிக்கோள்** : மனிதகுல நன்மைக்காக ஸ்ரீராமகிருஷ்ணர் எந்த உண்மைகளைப் போதித்தாரோ, அவரது பெருவாழ்வில் எந்த உண்மைகள் செயல்முறை விளக்கம் பெற்றனவோ அந்த உண்மைகளைப் பிரச்சாரம் செய்தல். உடல்ரீதியாக, மனரீதியாக, ஆன்மீகரீதியாக மனிதனுக்கு எது உன்னதியைத் தருமோ, அந்த வகையில் அவனுக்கு உதவுதல்.

**அடிப்படை** : உலகில் எத்தனை மதங்கள் உள்ளனவோ, அவையனைத்தும் அழிவற்ற ஒரே சனாதன மதத்தின் வெவ்வேறு வடிவங்களே என்று கண்டு, அனைத்து மதத்தினருக்கும் இடையில் நல்லுறவை நிலைநிறுத்த ஸ்ரீராமகிருஷ்ணர் போதித்ததைச் செயல்படுத்தல்.

**செயல்முறை** : மக்களின் லௌகீக மற்றும் ஆன்மீக உன்னதிக்கான கல்வி தர வல்லவர்களை உருவாக்குதல், சிற்பம் மற்றும் அதுபோன்ற கலைகளில் மக்களுக்கு ஆர்வத்தை வளர்த்தல், வேதாந்தம் மற்றும் பல்வேறு நெறிகள் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெருவாழ்வில் எவ்வாறு விளக்கம் பெற்றனவோ, அதனை மனித குலத்திற்கு எடுத்துக்கூறுதல்.

**இந்தியப் பணி :** இந்தியாவின் நகரந்தோறும் சென்று கல்வி கற்பிக்க விழைகின்ற இல்லறத்தார் மற்றும் துறவியரின் கல்விக்கான ஆசிரமங்களை அமைத்தல் ; அவர்கள் நாடுதோறும் சென்று மனித சமுதாயத்திற்குக் கல்வி அளிப்பதற்கான வழிமுறைகளை வகுத்தல்.

**வெளிநாட்டுப் பணி :** இவ்வாறு பயிற்சி பெற்றவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி அங்கே ஆசிரமங்களை உருவாக்குதல்; அந்த ஆசிரமங்களை இந்திய ஆசிரமங்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ளச் செய்தல்; புதிய பல ஆசிரமங்களை நிறுவுதல்.

சுவாமிஜி சங்கத்தின் பொதுத் தலைவரானார். மற்ற அலுவலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஞாயிறுதோறும் மாலை நான்கு மணிக்கு பலராம் போசின் வீட்டில் கூட்டம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. நேரம் கிடைத்தபோதெல்லாம் இந்தக் கூட்டங்களில் சுவாமிஜி கலந்துகொண்டார்.

அன்றைய கூட்டம் முடிந்து எல்லோரும் அங்கிருந்து சென்றதும் சுவாமிஜி யோகானந்தரிடம், 'இப்போது இவ்வாறு வேலை தொடங்கிவிட்டது. ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுளத்தால் இது எந்த அளவிற்கு வெற்றி பெறுகிறது என்பதைப் பார்ப்போம்' என்றார்.

(சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை
வரலாற்றிலிருந்து தொகுக்கப்பட்டது)

*பெறுதற்கரிய இந்த மானிடப் பிறவியைப் பெற்றும் இப்பிறவியிலேயே இறைவனை அறிய முயலாது போனால் அவன் வீணில் பிறந்தவனே ஆவான்.*

— **ஸ்ரீராமகிருஷ்ணர்**

இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். இல்லறக் கடமைகளைச் செய்யும்போதே பிரார்த்தனைக்கும் ஒருவன் நேரம் ஒதுக்க வேண்டும்.

— **அன்னை ஸ்ரீசாரதாதேவி**

வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது தேவை.

— **சுவாமி விவேகானந்தர்**

# ராமகிருஷ்ண மிஷனும்
# ராமகிருஷ்ணரின் துறவிச் சீடர்களும்

## சுவாமி பிரம்மானந்தர்

தோற்றம் : 21-1-1863

மகா சமாதி : 10-4-1922



வங்காளத்து ஜமின்தாரரான ஆனந்த மோகன் கோஷ் என்பவருக்கு மகனாக பிறந்தார் ராக்கால். அவரது இளமைப் பெயர் ராக்கால் சந்திரகோஷ் என்பதாகும். கிருஷ்ண பக்தி மிக்க தாய் கைலாஸ காமினியைத் தம் ஐந்தாம் வயதில் இழந்தார். ராக்கால் குழந்தைப் பருவத்திலிருந்தே தெய்வ பக்தி மிகுந்தவராக விளங்கினார். நரேனுடன் (சுவாமி விவேகானந்தர்) தோழமை பூண்டு பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார். ராக்காலை முதன்முதலில் ஸ்ரீராமகிருஷ்ணர் சந்தித்ததும் அங்கே அவர் தமது 'மானசீகப் புத்திரன்' இவனே எனக் கண்டுகொண்டார். முற்பிறப்பில் ராக்கால் கண்ணபிரானது தோழனே என்பதையும் கண்டறிந்தார். பதினெட்டு வயதான ராக்கால் குருதேவருடன் மூன்று வயதுக் குழந்தை தன்னுடைய தகப்பனாரிடம் விளையாடுவது போல் விளையாடுவார். ராக்கால் குருதேவருக்கு நல்ல முறையில் பணியாற்றி வந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்குப் பலவகைச் சாதனைகளையும் யோக ரகசியங்களையும் போதித்தார். அதனால் அவர் விரைவில் ஞானக் களஞ்சியமாக மாறினார்.

ஒரு நாள் குருதேவர் நரேனிடம், "ராக்காலிடம் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஆளக்கூடிய அறிவும் திறமையும் இருக்கிறது" என்றார். அது முதல் குருதேவரின் சீடர்கள் ராக்காலை 'ராஜா' என்றே அழைத்து மரியாதை செய்தனர். பிற்காலத்தில் 'ராஜா மகராஜ்' என்றே அனைவராலும் மதிக்கப்பட்டார். குருதேவரின் மகாசமாதிக்குப் பிறகு அவரது சீடர்கள் துறவறம் பூண்டபோது, "சுவாமி பிரம்மானந்தர்" என்ற திருநாமத்தைப் பெற்றார் ராக்கால்.

சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ண இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பணம் திரட்டிக்கொண்டு தாய்நாடு திரும்பினார். அவற்றை பிரம்மானந்தரிடம் கொடுத்துவிட்டு, "சரியான இடத்தில் தகுந்த மனிதரின் பொறுப்பில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நிம்மதியாக இருக்கிறேன்" என்றார். இதிலிருந்து அவர் சக துறவிச் சீடர்களுக்குச் சிறந்த நண்பனாகவும் வழிகாட்டியாகவும் விளங்கினார் என்பதை அறியலாம்.

சுவாமி பிரம்மானந்தரே ராமகிருஷ்ண மிஷனுக்கும், மடத்திற்கும் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குருதேவரால் நித்ய சித்தர் என்றும், ஈஸ்வர கோடிகளில் ஒருவர் என்றும் அவர் போற்றப்பட்டவர்.

சுவாமிகள் தோட்டப் பராமரிப்பில் மிகுந்த ஈடுபாடு மிக்கவர். வடஇந்தியாவில் பல க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றிருக்கிறார். தென்னாட்டிலும் தம் புனிதப் பயணத்தை நடத்தியிருக்கிறார். அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே மக்களின் மனதில் தோன்றும் ஐயங்கள் மறைந்துவிடும். மனிதர்கள் செய்யும் வேலைகள் யாவும் கடவுள் பக்தியின் பின்னணியில் அமையாவிடில் வீண் தற்பெருமைக்கும், மதச் சீரழிவிற்கும் வழிகோலும் என்பதை வலியுறுத்தி வந்தார்.

பூரி, ஹரித்துவார் போன்ற க்ஷேத்திரங்களில் உயர் பரவச நிலையில் இருந்தார். அவர் சென்னைக்கு வந்தபோது, சசி மகராஜ் பக்தர்களிடம், "குருதேவரை நீங்கள் பார்த்ததில்லை அல்லவா? இதோ அவரது மானசீக புத்திரனைக் கண்டு அக்குறையை நீக்குங்கள்" என்றார். அவரது தென்னாட்டு விஜயத்தில் அவரைக் கவர்ந்த ராமநாம பஜனை இன்றும் மடத்தின் எல்லாக் கிளைகளிலும் ஏகாதசிதோறும் நடக்க ஏற்பாடு செய்தார்.

சென்னை, பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற இடங்களில் ராமகிருஷ்ண மடத்திற்கு அடிக்கல் நாட்டினார். மதுரையில் மீனாக்ஷியம்மனின் அனுபூதியைப் பெற்றார். அவ்வாறே அவர் சென்ற கோவில்களில் எல்லாம் அக்கோயிலில் உறையும் மூலவரைப் பிரத்யக்ஷமாக தரிசித்தார். ராமேஸ்வரம் சென்று திரும்பினார்.

1922 ஏப்ரல் 10 ஆம் தேதி குருதேவரைச் சென்றடைந்தார்.

## அவருடைய உபதேசங்களுள் சில

தினமும் சிறிது நேரம் ஜபம் செய். தியானம் பழகு, ஒரு நாள்கூட நிறுத்தக் கூடாது. துருதுருவென்று அலையும் குழந்தையைப் போன்றது மனம். அதைத் திரும்பவும் நல்வழிக்குக் கொண்டுவர அதைக் கடவுளிடம் ஈடுபடுத்த வேண்டும். முதலில் கசப்பான மருந்தைப் போன்று இருந்தாலும் பின்னர் அமிர்தத்தையுண்ட பலன் கிட்டும். பரீட்சையில் தேற எவ்வளவு பாடுபடுகின்றனர்! கடவுளை அறிவது அதைவிட எளிதானது. கடவுளை அமைதியான மகிழ்ச்சி கொண்ட உள்ளத்துடன் அழைக்க வேண்டும்.

ஜபம், தியானம் ஆகியவை மனத்திற்கான உணவுகள். இவற்றைச் செய்வதே மனிதனுடைய தேவைகளுள் முதன்மையானது ஆகும்.

*அழிவிலா அமைதியையும் ஆனந்தத்தையும் நாடுபவர்கள் ஒரு மனதாகக் கடவுளைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.*

— **சுவாமி விவேகானந்தர்**

# சுவாமி சிவானந்தர்

தோற்றம் : 1854

மகாசமாதி : 20-2-1934



வங்காளத்தில் வாழ்ந்த ராம்கனை கோஷாலருக்கும் அவரது மனைவி வாமசுந்தரி தேவிக்கும் 1854-ஆம் ஆண்டு பிறந்தார் தாரக்நாத். தாரகேசுவரத்திலுள்ள சிவாலயத்தில் தவமியற்றி பெற்றதால் தாரகநாத் என்று பெயரிட்டிருந்தார்கள்.

தாரகநாத் இளமைமுதலே கல்வியில் அதிக விருப்பம் இல்லையென்றாலும், தியான வாழ்க்கையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 1881-இல் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்தித்து அவர்பால் ஈடுபட்டார். குருதேவர் ஒருசமயம் தாரகநாதரை அருகில் அழைத்துத் தமது திருவடியை அவர் மீது வைத்து பேரருளைப் புகட்டினார். பின்னர் ஒரு தடவை தாரக்கின் நாக்கில் குருதேவர் ஏதோ எழுத அவர் தெய்வீக உணர்ச்சிநிலை அடையப் பெற்றார். 'நீ இந்தப் பிறவியிலேயே கடவுள் தரிசனம் பெறுவாய்' என்று முதல் சந்திப்பிலேயே குருதேவர் கூறினார்.

திருமணம் செய்துகொண்ட போதிலும் அவரது இயல்பான தூய்மையாலும், குருதேவரின் அருளாலும், மனைவியின் இசைவாலும் சற்றும் வழுவாத பிரம்மசரியத்தில் நிலைத்தார். இதனால்தான் அவரை 'மஹா புருஷர்' என சுவாமி விவேகானந்தர் அழைத்தார். துறவறம் பூண்ட பின்னர் 'சுவாமி சிவானந்தர்' என்னும் திருநாமம் பெற்றார். சுவாமிஜியின் கட்டளைப்படி இலங்கை சென்று பிரசாரம் செய்தார். கல்கத்தாவில் பிளேக் நோயால் கஷ்டப்பட்ட மக்களின் பிணி போக்குவதில் பெரும் பங்கேற்றுத் திறம்படச் செய்தார்.

சுவாமி பிரம்மானந்தரின் மகாசமாதிக்குப் பிறகு 1922-இல் மடத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காசி, பம்பாய், நாகபுரி, உதகை என்னும் இடங்களில் ஆசிரமங்களை ஆரம்பித்ததில் முக்கிய பங்கு வகித்தார்.

சுவாமி சிவானந்தர் தென்னக அன்பர்களை பெரிதும் நேசித்தார். அவரிடம் மந்திர தீட்சை பெற்று அவரின் ஆசி பெற்ற சுவாமி விபுலானந்தர், சுவாமி சித்பவானந்தர், சுவாமி ருத்ரானந்தர், சுவாமி தபஸ்யானந்தர், திரு அவினாசிலிங்கம் செட்டியார் போன்ற பெரியவர்கள் தென்னகத்தில் ராமகிருஷ்ண மிஷனின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர்களாவர்.

கடைசிக்காலத்தில் சுவாமிகள் ஞானாலயமாகவும், கருணைக்கடலாகவும் விளங்கினார். வேறுபாடுகளை ஒழித்து அனைத்துயிர் மீதும் அன்பைப் பொழிந்துவந்த இவர் 1933-இல் பக்கவாதத்திற்கு ஆளானார். பேச்சை இழந்தார். அப்போதும் அவர் பக்தர்களுக்கு அருள்புரிவதில் சிறிதும் தயக்கம் காட்டவில்லை. அன்பே சிவமாக வாழ்ந்து 1934-இல் பிப்ரவரி 20-ஆம் நாள் மகாசமாதி அடைந்தார்.

# சுவாமி பிரேமானந்தர்

தோற்றம் : 10-12-1861

மகாசமாதி : 30-7-1918



ராமகிருஷ்ணர் தமது சீடர்களுள் ஆறு பேரை மட்டும் நித்திய சித்தர்கள் என்றும் ஈசுவரகோடிகள் என்றும் குறிப்பிட்டார். அத்தகைய பேறுபெற்றவர்களுள் ஒருவர் சுவாமி பிரேமானந்தர். அவரது இளமைப் பெயர் பாபுராம். வங்காளத்தில் ஆன்ட்பூரில் பாபுராம் பிறந்தார். தந்தையார் பெயர் தாராபிரசன்ன கோஷ், தாயார் மாதங்கினிதேவி.

பாபுராமிற்கு சிறுவயதிலேயே துறவறம் பூணும் ஆவல் ஏற்பட்டது. பள்ளித் தோழனான ராக்காலுடன் அடிக்கடி தக்ஷிணேசுவரம் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். பாபுராமின் முகத்தில் காணப்பட்ட தெய்வீகக்களையைக் கண்டு அகம் மகிழ்ந்தார் குருதேவர். நரேந்திரரோடு அவரைப் பழகச் செய்தார். ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவடிகளை பாபுராம் சிக்கெனப் பிடித்தார். குருதேவர், பாபுராமிடம் முழுத்தூய்மையையும் அவரிடம் ஒளிர்ந்த ஸ்ரீமதி ராதையின் அம்சத்தையும் கண்டார். 'பாபுராமின் மஜ்ஜைகூடத் தூய்மையானது' என்று குருதேவர் ஒருமுறை கூறினார். பாபுராமைத் தக்கமுறையில் உருவாக்கினார். குருதேவரிடம் கொண்ட அன்புறவால் அவரது அனுபூதிச் செல்வம் முழுவதையும் பெற்றார். பாபுராம் துறவறமேற்று "சுவாமி பிரேமானந்தர்" ஆனார்.

சசி மகராஜ் சென்னையில் மடம் நிறுவச் சென்றபோது சுவாமி பிரேமானந்தரே குருதேவரின் தினசரி பூஜையை நடத்தினார். பின்னர் பேலூர் மடத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு இளம் பிரம்மசாரிகளுக்கும் துறவிகளுக்கும் ஞானப்பயிற்சி அளித்து வந்தார். தமது அருள்நெறி ததும்பும் அருள்வாக்குகளால் எண்ணற்ற உள்ளங்களை உய்வடையச் செய்தார். அவரது உண்மை அன்பு, நெறி தவறியவர்களையும் நல்ல மார்க்கத்திற்குத் திருப்பியது.

சுவாமி பிரேமானந்தர் மாணவர்கள், ஆண்கள், பெண்கள், இதர மதத்தினர் ஆகிய அனைவரையும் வேறுபாடின்றி தெய்வ வடிவங்களாகக் கருதிவந்தார். அன்பின் வழியில் அவர்களை நல்வழிப்படுத்தினார். முடிந்தவரை தொண்டையும் துறவையும் பின்பற்றுமாறு அனைவரையும் வேண்டுவார். தாய் குழந்தைகளிடம் அன்பு காட்டுவதுபோல் அன்பு செய்தாலும், ஆங்காங்கே தவறு கண்டால் கண்டிக்கவும் தயங்கமாட்டார். வடமொழிக் கல்வி பேலூர் மடத்தில் சிறப்பிடம் பெறுமாறு செய்தார் இவர். பெண்கள் காலத்துக்குத் தக்கபடி கல்வி பெற்றுச் சிறப்புடன் வாழ வேண்டும் என்று சொல்லுவார். அமர்நாத் யாத்திரை சென்று திரும்பியபின் கிழக்கு வங்காளம் முழுவதும் சுற்றி மக்களின் மனதில் பக்தியை வளர்த்தார்.

கிழக்கு வங்காளத்தில் ஒரு கிராமத்தில் மக்கள் குடிநீருக்காக மிகவும் அவதிப்பட்டார்கள். சுவாமி பிரேமானந்தர் உடனடியாக உள்ளூரிலிருந்த மோசமான குட்டையைச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டார். அப்போது சுவாமி பிரேமானந்தர் தம் உயிரையும் உடல்நலனையும்

பொருட்படுத்தாமல் சேவையாற்றினார். 1918-இல் ஜுலை 30-ஆம் தேதி குருதேவர் தம் அருமைச் சீடரைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். அவரது மகாசமாதிபற்றி அறிந்ததும் அன்னை சாரதா தேவியார், "பாபுராம், என் உயிரினும் மேலானவன்; பேலூர் மடத்து சக்தி, பக்தி, ஞானம் எல்லாம் அவனிடத்தில் திரண்டிருந்தன. இப்போது அவையெல்லாம் கங்கையோடு கலந்துவிட்டன" என்று கூறி அழுதார். சுவாமி விவேகானந்தரின் புத்திமதிப்படி தனக்கென சொந்தமுறையில் கடைசிவரை சீடர்களை அவர் ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

**சுவாமி பிரேமானந்தரின் ஒரு பொன்மொழி :**

ஏழைகள், பலவீனர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், அறிவிலிகள் ஆகியோரை உன்னுடையவர்களாக்கிக்கொள். ஆனால் அதே சமயம் உங்களை நான் எச்சரிப்பது யாதெனில், சமூகத்தின் ஒரு சாராரை நேசிக்க விரும்பும் நீங்கள் மற்றவர்களை, அதாவது பணக்காரர்களை வெறுக்கக் கூடாது.

இறைவன் வீற்றிருக்க வேண்டிய சிம்மாசனத்தில் ஒன்றுக்கும் உதவாத ஓர் அடிமையை அமர வைத்திருக்கிறோம். அகங்காரம்தான் இந்த அடிமை. நம் எதிரிகளுள் மிகவும் மோசமான எதிரி இந்த 'நான்' தான்.

– சுவாமி ராமகிருஷ்ணானந்தர்

*ஆசைக்கு அடிமைப்பட்ட மனிதனைப்போல் ஒரு பரிதாபகரமானவன் கிடையாது. எத்தனை அவமானங்களுக்கு அவன் உள்ளாகிறான்! இருந்தும் அதிலிருந்து அவன் மீள்வதில்லை.*

**– சுவாமி துரியானந்தர்**

*தன்னலம் கருதா பணியினால் மனம் தூய்மை அடைகிறது. தூய மனத்தில் ஞானமும் பக்தியும் உதயமாகின்றன.*

**– சுவாமி சாரதானந்தர்**

# சுவாமி யோகானந்தர்

பிறப்பு : 1861

மகாசமாதி : 28-3-1899



சுவாமி யோகானந்தரின் இளமைக்காலப் பெயர் யோகீந்திரநாத் சௌத்ரி. எளிமை, அன்பு, அடக்கம், இரக்ககுணம் ஆகிய நற்பண்புகள் கொண்ட யோகின் முதன் முதலில் ஸ்ரீராமகிருஷ்ணரை ஒரு தோட்டக்காரர் என்று எண்ண நேர்ந்தது. பின்னர் அவரையே தமது ஞானாசிரிய ராகக் கிடைக்கப் பெற்றார். குருதேவர் ஈசுவரகோடிகள் என்றும் நித்திய சித்தர்கள் என்றும் அழைத்த அறுவருள் இவரும் ஒருவர்.

யோகின் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு தக்ஷிணேசுவரம் சென்று துறவு பூண விரும்புவதை அவர் பெற்றோர் அறிந்தனர். எனவே அவரது மனதை மாற்ற வேண்டுமென்று தந்திரமாகத் திருமணம் செய்விக்க முயன்றனர். அவருக்குத் தாயிடம் பக்தியும் மரியாதையும் அதிகமிருந்தது. எனவே அவரது மனத்திருப்திக்காகத் திருமணம் செய்து கொண்டார். எனினும் தான் ஏதோ அடாத செயல் செய்துவிட்டதாக எண்ணிக்கொண்டு குருதேவரைப் பார்க்கச் செல்லுவதை நிறுத்திவிட்டார்.

குருதேவர் தமது சீடனின் ஐயத்தைப் போக்கி, அவனுக்கு அருள திருவுள்ளம் கொண்டார். அவரது அருளால் அவரது மனைவியும் கணவனது துறவற வாழ்க்கைக்கு ஊக்கமளிக்கும் கருவியாக மாறினாள். 'பக்தனாய் இரு; ஆனால் முட்டாளாக இருக்காதே' என்று குருதேவர் இவரிடம்தான் கூறினார்.

குருதேவரானாலும் சரி, நரேன் ஆனாலும் சரி, யோகின் தன் மனதில் உள்ள விஷயங்களை ஒளிவுமறைவின்றிக் கூறிவிடுவார். குருதேவரே ஆணையிட்டாலும்கூட அவரது மனம் கரப்பான் பூச்சியைக்கூடக் கொல்லும் அளவிற்குத் துணியாது. பின்னர் துறவறமேற்றபோது சுவாமி யோகானந்தர் என்னும் திருநாமம் பூண்டார்.

குருதேவர் மகாசமாதியடைந்த பின்னர் தூய அன்னையாரை குருதேவரைப்போல் எண்ணி வழிபட்டு, சேவை புரிந்து வந்தார். அவர் தூய அன்னையாரின் சேவையில் ஈடுபட்டதுடன், தமக்குக் கிடைத்த சிறு தொகைகளைக்கூட அன்னையாருக்காகச் செலவழித்து வந்தார். விவேகானந்தர் அயல்நாடு சென்று திரும்பியபொழுது மாபெரும் வரவேற்பிற்கு ஏற்பாடு செய்தவரும் இவரே.

கடுமையான தவவாழ்க்கையால் உடல் நலிவுற்றுவந்த வேகத்தில் இவரது உள்ளொளி பெருகி வந்தது. 1899 மார்ச் 28-ஆம் தேதி இப்பூவுலகை நீத்தார். தூய அன்னை அவர் மறைவைக் கேட்டு மிகவும் துயருற்றார். குருதேவரின் சீடர்களுள் முதன்முதலில் அவரது திருவடியைச் சென்றடைந்தவர் சுவாமி யோகானந்தர் ஆவார்.

# சுவாமி சாரதானந்தர்

தோற்றம் : 23-12-1865

மகாசமாதி : 19-8-1927



பக்தியும் ஆசாரமும் வாய்ந்த அந்தணக் குடும்பத்தில் பிறந்தார் சரத்சந்திர சக்கரவர்த்தி. பிறக்கும் போதே, குழந்தை சனிக்கிழமை மாலையில் பிறந்துள்ளதே என்று கவலைப்பட்டனர் பெற்றோர். ஆனால் ஆருடமோ அவரது பிற்காலப் புகழைப் பறைசாற்றியது.

சிறு வயதில் மிகவும் சாதுவாக இருந்தார் சரத். எனவே பெற்றோர் தமது பிள்ளை இவ்வளவு மந்தமாக இருக்கிறதே என்று விசனப்பட்டனர். ஆனால் படிக்கும் வகுப்பில் அறிவு மிக்கவனாகவும், முதல் இடத்தைப் பெறும் மானாவனாகவும் இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைந்தனர்.

1883-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு நாள் தனது ஒன்றுவிட்ட சகோதரர் சசியுடன் (சுவாமி ராமகிருஷ்ணானந்தர்) குருதேவரை தக்ஷிணேசுவரத்தில் தரிசித்தார். சசி குருவிற்கு மிகச் சிறந்த முறையில் தொண்டு புரிந்த காரணத்தால், துறவு பூண்டபோது ராமகிருஷ்ணானந்தர் என்னும் பெயரைப் பெற்றார். அதுபோல் சரத்சந்திரர் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவிக்குப் புரிந்த தொண்டால் சாரதானந்தர் ஆனார்.

ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகத்திற்காகப் பிற்காலத்தில் பல இடங்களுக்கும் சென்று பொருள் திரட்டுவதற்காகப் பிரச்சாரப் பணி புரிந்தார். மலையிலிருந்து வண்டி உடைந்து விழுந்தபோதும், லண்டனுக்குக் கப்பலில் சென்றபோது புயலால் பிறர் நிலைகுலைந்து தவித்தபோதும், கங்கையில் படகில் சென்றபோது சுழற்காற்றில் அகப்பட்டபோதும் சுவாமி சாரதானந்தர் எதுவுமே நடவாததுபோல் அமைதியாக இருந்த விஷயங்களைக் கேட்கும்போது, அவரது உள்ளத்தின் தெளிவும் புலனடக்கமும் தெளிவாகத் தெரியும்.

சுவாமி சாரதானந்தர் தூய அன்னைக்காக ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று விரும்பினார். பல எதிர்ப்புகளுக்கிடையே வேலையைத் துவக்கினார். கடன் அடைப்பதற்காக 'குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்னும் நூலை வங்காள மொழியில் எழுதினார். அந்த நூல் வங்க மொழியில் சிறந்த பக்தி இலக்கியமாக அமைந்தது. புகழ் அவரை நாடிவந்த போதும் யாவும் குருதேவரின் செயலே என்று அடக்கமாக இருந்துவிட்டார்.

கீதையில் கூறிய 'ஸ்திதப்பிரக்ஞன்' என்பதற்கு மனித உருவம் கிடைக்க வேண்டுமானால் அது சுவாமி சாரதானந்தரே என்று கூறும்படித் திகழ்ந்தார். புகழ்ச்சி, இகழ்ச்சி, மற்றும் வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளிலும் ஒரே மாதிரி வாழ்ந்த மகான் அவர். ஞானம், கர்மம், பக்தி, யோகம் ஆகியவற்றிற்குச் சிறந்த உருவமாக வாழ்ந்தார். ராமகிருஷ்ண மடம் மற்றும் சங்கத்தின் செயலாளராகவும், ஆன்மீக வாழ்வுடைய சிறந்த பண்பாளராகவும் வாழ்ந்து 1927-இல் ஆகஸ்ட் 19-ஆம் நாளன்று இறைவனடி சேர்ந்தார்.

# சுவாமி ராமகிருஷ்ணானந்தர்



தோற்றம் : 13-7-1863

மகாசமாதி : 21-8-1911

வங்கத்தில், பக்தி மிக்க அந்தணக் குடும்பத்தில் சசிபூஷண் சக்கரவர்த்தி பிறந்தார். அவரது தகப்பனார் ஈசுவர சந்திர சக்கரவர்த்தி கண்டிப்பான முறையில் குடும்பத்தின் பரம்பரை ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து வந்தார். தேவி உபாசகரான அவரது மகன் சிறந்த ஞானப்பழமாக விளங்கியதில் வியப்பேது ?

பள்ளியில் படிக்கும்போதே சசியின் அறிவு சுடர்விட்டது. கல்லூரியில் நுழைந்தபோதே ஆங்கிலம், வடமொழி இலக்கியங்கள், கணிதம், தத்துவம் போன்ற துறைகளில் மிகுந்த ஆர்வமும் புலமையும் காட்டிவந்தார்.

1883-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சசி, சரத் மற்றும் சில நண்பர்களுடன் தக்ஷிணேசுவரத்திற்குச் சென்றார். அங்கே குருதேவரின் தரிசனம் கிடைத்தது. சசியிடம் ஆன்மீக வாழ்க்கைக்குரிய ஒளிமயமான உள்ளத்தைக் கண்டு குருதேவர், "குழந்தாய், நீ உருவ வழிபாட்டை விரும்புகிறாயா? அல்லது அருவக் கடவுளை விரும்புகிறாயா?" என்று கேட்டார். உடனே சிறிதும் யோசியாமல் சசி, "ஐயா! கடவுள் இருப்பதைப்பற்றியே ஐயம் கொண்டுள்ள நான் எப்படிக் கடவுளை வழிபடுவது?" என்றார். மனம் திறந்து பேசிய பதிலால் குருதேவர் மனமிக மகிழ்ந்து தக்க தருணத்தில் மந்திர தீக்ஷையளித்தார்.

குருதேவர் இப்பூவுலக வாழ்க்கையை முடித்தபோது அவரது சீடர்கள் வராக நகரத்தில் துறவும் பூண்டனர். சுவாமி விவேகானந்தர், தாம் குருதேவரின் பெயரை ஏற்க விரும்பிய போதும் அந்த பெயரைச் சூடக்கூடிய தகுதி சசிக்குத்தான் உண்டு என்று ராமகிருஷ்ணானந்தர் என்ற பெயரை சசிக்குச் சூட்டினார்.

குருநாதரின் கடைசி மூச்சு இருக்கும்வரை சுவாமி ராமகிருஷ்ணானந்தர் செய்த தொண்டு விவரிக்க இயலாதது. குருதேவர் மறைந்த பிறகும் அவரது அஸ்தி கலசத்தை அவர் பாதுகாத்து வந்தார். அது அவர்வரை உயிருடன் கூடிய குருதேவரே. கோவிலிலிருந்த படத்தை வெறும் குருதேவரின் படம் என்று அவர் நினைத்ததேயில்லை. மழையில் நனையாமல் குடை பிடித்ததையும் பகல் நேரத்தில் வெயில் நாட்களில் விசிறியதையும் கண்டவர் உள்ளத்தில் பக்தியை உண்டுபண்ணும். குருதேவருக்கு அர்ப்பணிக்காத எதையும் அவர் உண்ண மாட்டார்.

தென்னாட்டில் உள்ள எல்லா மடங்களையும் துவக்கிய பெருமை இவருடையதே. வகுப்புகள் நடத்தியும் புத்தகங்கள் எழுதியும் குருதேவரின் பெருமையைப் பரப்பி வந்தார். இன்றும் ராமகிருஷ்ண மடங்களில் இவர் எழுதிவைத்த விதிமுறைகளின்படிதான் பூஜைகள் நடைபெறுகின்றன. சென்னையில் மடத்தை நல்ல முறையில் அமைத்தபின் கல்கத்தா திரும்பினார். தூய அன்னையாரின் திருப்பாதங்கள் தமிழ்நாட்டில் பட சுவாமிகளே காரணம். 1911-இல் ஆகஸ்டு 21-ஆம் நாள் தம் பூத உடலை நீத்தார்.

# சுவாமி நிரஞ்சனானந்தர்



தோற்றம் : சரியான தகவல் இல்லை

மகாசமாதி : மே மாதம் 1904

குருதேவரின் அந்தரங்க அடியார்களில் ஒருவர் என்றும் ஈசுவர கோடிகளில் ஒருவர் என்றும் போற்றப்படும் பாக்கியசாலிகளுள் சுவாமி நிரஞ்சனானந்தரும் ஒருவர். நிரஞ்சன் என்று அழைக்கப்பட்ட இவர் இளமையில் ஆவிகளுடன் பழகும் கூட்டத்தாரோடு சேர்ந்திருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் தெய்வீகத் திருவருள்பற்றிக் கேட்டு அவரைக் காண வந்தார் நிரஞ்சன். சிறந்த உடற்கட்டும், அழகும், அஞ்சாத நெஞ்சுறுதியும் வாய்ந்த நிரஞ்சனுக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் சிறந்த அறிவுரைகளைக் கூறி ஆவிகளைப் பற்றி நினைத்து ஆவியாய் அலைவதை விடுத்து கடவுளைப் பற்றியே நினைத்து கடவுளாக ஆகும் நெறியின் மாண்பினை விளக்கினார்.

துறவு பூண்டு, ஞான வாழ்க்கையில் ஈடுபட ஸ்ரீராமகிருஷ்ணரையே குருதேவராக ஏற்றார். குருதேவரை அவதூறாக யாரேனும் பேசினால்கூடப் பொறுக்கமாட்டார். குருதேவரின் இறுதி நாட்களில் சிறந்த சேவை புரிந்தார். வராக நகர் மடத்தில் சேர்ந்து சுவாமி நிரஞ்சனானந்தர் என்ற திருநாமம் பெற்றார். குருதேவரது உருவச்சின்னத்தின் வழிபாட்டில் சசி மகராஜிற்கு இணையானவர். சுவாமி விவேகானந்தருடன் வட இந்திய யாத்திரை சென்றார். காசியில் தங்கி பிக்ஷையேற்று தவம் பழகினார்.

தூய அன்னையாரிடம் இவர் கொண்ட பக்தி ஈடு இணையற்றது. தூய அன்னையாரின் தெய்வீக அருளைப் பலரும் அறியுமாறு செய்த பெருமை சுவாமி நிரஞ்சனானந்தரையே சாரும். அவருடைய சிறந்த நெறிமுறைகளைக் கண்டு துறவு பூண்டவர் எண்ணற்றவர்.

சுவாமி விவேகானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் தூய அன்னையாரிடம் காட்டும் பக்தியைக் கண்டு பின்வருமாறு கூறுவார்: ''நிரஞ்சன் ஆயிரம் தவறுகள் புரிந்தாலும் அவன் தூய அன்னையிடம் கொண்டுள்ள பக்தி ஒன்றைக் கருதியே அனைத்தையும் மன்னித்து விடுவேன்''. இறுதிக் காலத்தில் ஹரித்துவார் சென்று 1904 மே மாதத்தில் இறையருளில் கலந்தார்.

*கடுமையான ஆன்மீக சாதனைகளில் ஈடுபட எல்லோராலும் முடியாது. ஆனால் பிரார்த்தனையால் அனைத்தையும் பெறலாம்.*

— *சுவாமி சிவானந்தர்*

# சுவாமி அகண்டானந்தர்

தோற்றம் : 30-9-1868

மகாசமாதி : 7-2-1937



கங்காதரர் கல்கத்தாவில் பிறந்தவர். இளமை முதலே தீவிரமான ஆசாரசீலர். 1883 அல்லது 1884-ஆம் ஆண்டில் ஹரிநாத் (சுவாமி துரியானந்தர்) என்னும் நண்பருடன் தக்ஷிணேசுவரம் சென்று குருதேவரைத் தரிசித்தார்.

அடிக்கடி குருதேவரைச் சந்தித்து நரேனின் நட்பையும் பெற்றார். காசிப்பூரில் நோயுற்று இருந்த குருதேவருக்குப் பணிவிடை செய்யும் பேறு பெற்ற இவர், துறவு பூண்டு சுவாமி அகண்டானந்தர் ஆனார். 1887-ஆம் ஆண்டு பல தலங்களுக்குச் செல்ல வேண்டும் என்று புறப்பட்டார். இமயத்தில் பல இடங்களுக்குச் சென்றார். திபெத்தை மூன்று முறை கடந்து 1890-ஆம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்பினார்.

பின்னர் சுவாமி விவேகானந்தருடன் அல்மோரா மற்றும் வடஇந்தியாவில் பல இடங்களுக்கும் யாத்திரை சென்று வந்தார்.

சுவாமி விவேகானந்தர் மேல்நாடு சென்று திரும்பி வந்தபிறகு அவரது ஆசியுடன் பஞ்சநிவாரணப் பணியைத் துவக்கினார். அநாதைக் குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் நோக்கத்துடன் ஓர் இல்லமும் துவக்கப்பட்டது. ஆசிரமத்திலிருந்த மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வந்ததுடன் அவர்களுடைய ஆன்மீக வளர்ச்சிக்கும் பாடுபட்டு வந்தார்.

வாயினால் உபதேசிப்பதைவிட நடைமுறையில் எவ்வாறு தொண்டு செய்ய வேண்டும் என்பதைத் தம் எடுத்துக்காட்டான வாழ்க்கை முறைகளினால் அனைவரையும் பின்பற்றச் செய்தார்.

1924-இல் ராமகிருஷ்ண மடத்தின் துணைத் தலைவரானார். 1934-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ராமகிருஷ்ண மடத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

சிறந்த தொண்டு புரிந்ததுடன் தம் எழுத்தாற்றலால் உத்போதன், வசுமதி போன்ற பத்திரிகைகளில் சிறந்த கட்டுரைகளும் எழுதிவந்தார்.

ராமகிருஷ்ண இயக்கத்தின் சிறந்த தலைவரான இவர், தமது 71-வது வயதில் மகாசமாதி அடைந்தார்.

*விரிந்துகொண்டே போவது வாழ்க்கை! குறுகிச் செல்வது மரணம்.*

*— சுவாமி விவேகானந்தர்*

# சுவாமி அத்புதானந்தர்



தோற்றம் : சரியான தகவல் இல்லை.

மகாசமாதி : 20-4-1920

ராக்துராம் ஓர் ஏழை. ஐந்து வயதிலேயே பெற்றோரை இழந்தான். தன் சுற்றத்தாருடன் பிழைப்பைத் தேடி கல்கத்தா வந்தடைந்தான். மிகுந்த கஷ்டங்களை அனுபவித்த பிறகு ராமசந்திர தத்தர் என்பவரின் வீட்டில். ராக்துராமுக்கு ஒரு வேலை கிடைத்தது. ராக்துராம், லாட்டு என்று சுருக்கமாக அழைக்கப்பட்டான். அவனது எஜமானரான ராமச்சந்திர தத்தர் ஸ்ரீராமகிருஷ்ணரின் பரம பக்தர்களுள் ஒருவர்.

ராமச்சந்திரரின் வீடு பக்தர்கள் கூடும் இடமாக இருந்தது. ராம்பாபு ஒருமுறை கூட்டத்தில், "இறைவனைக் கான வேண்டும் என்ற திடமான எண்ணம் இருந்தால் நிச்சயமாக இறைவனை அடையலாம். தனிமையான இடத்திற்குச் சென்று கண்ணீர் விட்டுக் கதறினால் நிச்சயமாக கடவுளை அடைய முடியும்'' என்று சொன்னதை லாட்டு மனதில் நன்கு பதிய வைத்துக் கொண்டான். அதோடு அவைகளை நடைமுறையில் பயின்றும் வந்தான்.

ஏழையாக இருப்பினும் சுய கௌரவமுடன் வாழ்ந்தான். ராமச்சந்திரர் அடிக்கடி ஏதாவது பொருள்களையோ, பழங்களையோ அல்லது இனிப்புப் பண்டங்களையோ லாட்டுவின் மூலம் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அனுப்புவது வழக்கம். இவ்வாறு தக்ஷிணேசுவரத்திற்குச் சென்று குருதேவரைச் சந்திப்பது லாட்டுவிற்கு மிகவும் பிடித்திருந்தது. குருதேவரும் லாட்டுவிடம் இறைவனை நாடும் விருப்பத்தைக் கண்டறிந்தார்.

குருதேவருடனேயே வாழ வேண்டும் என்பதற்காக வேலையைக்கூட விட்டுவிட்டுப் புறப்பட்டுவிட்டார். குருதேவரும் லாட்டுவைச் சீடனாக ஏற்றுக் கொண்டார். ஒரு நாள் மாலையில் லாட்டு தூங்கிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட குருதேவர் ''லாட்டு! இவ்வாறு தூங்கிக்கொண்டிருந்தால் எப்போது தியானம் செய்வாய்?'' என்று கண்டித்தார். அவ்வளவுதான். அன்று முதல் பகலில் சிறிது நேரம் மட்டும் உறங்குவார். இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்து தியானம் பழகிவந்தார்.

குருதேவரின் சீடர்களில் பள்ளிக்குச் சென்று கல்வி பயிலாத இவர் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் அற்புத லீலைகளில் ஒன்றாகத் திகழ்ந்ததால், துறவு பூண்டபோது சுவாமி அத்புதானந்தர் என்ற நாமத்தைப் பெற்றார். தாம் கல்வி கற்கவில்லை என்றாலும் பண்டிதர்கள் கூறும் விஷயங்களை எளிதில் புரிந்துகொள்வார். தூய அன்னையாருக்குப் பணிவிடை செய்தும் வந்தார்.

தம் உடம்பைப் பற்றிய கவலையே அவருக்குக் கிடையாது. கடைசிநேரம் நெருங்கியபோது பார்வையை இரு புருவங்களுக்கும் இடையே நிறுத்தி, உணர்வுகளைப் புற உலகிலிருந்து உள்ளே இழுத்துக் கொண்டார். 1920-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ஆம் தேதி மகாசமாதி அடைந்தார்.

## சுவாமி துரியானந்தர்

தோற்றம்: 3.1.1863

மகாசமாதி: 21.7.1922



சுவாமி துரியானந்தரின் பூர்வாசிரமப் பெயர் ஹரிநாத் சட்டோபாத்தியாயர். இவரது பெற்றோர் இவர் சிறு பிராயத்தினராக இருந்தபோதே மறைந்தனர். மூத்த சகோதரரால் வளர்க்கப்பட்ட இவரால் உயர் கல்வி பெற முடியவில்லை.

முற்பிறவியில் செய்த புண்ணியம் இவரை குருதேவரிடம் கொண்டு சேர்த்தது. சிறு வயது முதற்கொண்டே பெண்களைக் கண்டால் இவர் ஒதுங்கி விடுவார். ஆனால் குருதேவர் ஒரு நாள் இவரைக் கண்டித்து பெண்களைத் தேவியின் வடிவத்தில் பார்க்குமாறு உபதேசித்தார்.

குருதேவரிடம் தீக்ஷை பெற்று, நரேனின் தலைமையில் துறவு பூண்டு 'சுவாமி துரியானந்தர்' எனப் பெயர் பெற்றார். சிறந்த அறிவாளி. 'ராமகீதை' அவருக்குப் பிடித்த விஷயம். விவேகானந்தரால் பாராட்டப் பெற்றவர். விவேகானந்தரின் ஆணைப்படி அமெரிக்கா நாட்டிற்குச் சென்று இவர் புரிந்த தொண்டு மேல் நாட்டினரையே பிரமிக்க வைத்தது.

'கங்கை நீரே எனக்கு மருந்து; நாராயணனே எனது மருத்துவர்' என்று வாழ்ந்து வந்தார். நீரழிவு நோயின் காரணமாக அவரது முதுகில் ராஜபிளவை வந்தது. அதற்காகப் பல முறை ரணசிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒவ்வொரு முறையும் மருத்துவர்கள் வியக்கும் வகையில் எவ்வித மயக்க மருந்தும் அருந்தாமலேயே மனதை அடக்கி ஒருமுகப்படுத்தி அறுவை சிகிச்சை செய்துகொண்டார்.

மிகவும் இளகிய மனமுடைய இவர், இந்தியாவில் எண்ணற்ற மக்கள் ஏழ்மையால் வாடுவதைக் கண்டு மனமுருகுவார். எவ்விதமான நிவாரணப் பணியானாலும் முன் நின்று நடத்தத் தயங்கமாட்டார்.

ஒரு முறை இவர் கண்நோயால் அவதியுற்றார். அப்போது தவறுதலாக அவரது கண்ணில் 'நைட்ரிக் அமிலத்தை' விட்டுவிட்டனர். அனைவரும் மிகவும் பயந்தனர். ஆனால் அவரோ 'எல்லாம் லோகமாதாவின் செயல்' என்று பொறுமையாக இருந்துவிட்டார். கடவுளருளால் கண்ணிற்கு எந்தவித ஊறும் நேரவில்லை.

'நாளைதான் கடைசி நாள்' என்று சொல்லிக் கொண்டேயிருந்தும் உடனிருந்தவர்கள் அதனை உணரவில்லை. அவர் கூறியபடியே 21-7-1922 அன்று 'சத்யம் ஞானமனந்தம் பிரம்ம, பிரக்ஞானமானந்தம் பிரம்ம' என்ற வேத மந்திரங்களைக் கூறச் செய்து அதைக் கேட்டுக் கொண்டே குருதேவரின் மலரடிகளை நாடிச் சென்றுவிட்டார்.

## சுவாமி அத்வைதானந்தர்



தோற்றம் : சரியான தகவல் இல்லை.

மகாசமாதி : 29-12-1909

கோபால் சந்திரகோஷ் கல்கத்தாவிற்கு அருகில் ஜகந்தா என்ற கிராமத்தில் பிறந்தார். கோபால், ஒரு கடையில் பணிபுரிந்து வந்தார். பிரம்மசமாஜ விழா உற்சவத்தில் கோபால் குருதேவரைச் சந்தித்தார். ஆனால் அப்போது அவரது மனம் குருதேவரின் ஆன்மீகச் சிறப்பை உணர்ந்து கொள்ளவில்லை.

கோபாலின் மனைவி மரணமடைந்தாள். அதனால் அவரது மனம் உடைந்தது. நண்பரின் ஆலோசனைப்படி தக்ஷிணேசுவரம் சென்றார். அடிக்கடி சென்று குருதேவரின் அமுதமொழிகளைக் கேட்டு மனத்தெளிவைப் பெற்றார்.

ஒரு முறை குருதேவரிடம் கோபால், சன்னியாசிகள் சிலருக்குக் காவி உடையும் ஜபமாலையும் வாங்கித் தர வேண்டும் என்ற விருப்பம் தமக்கு இருப்பதாகக் கூறினார். அதற்குக் குருதேவர், "அவ்வாறு விருப்பம் இருக்குமாயின் இவர்களை விடவா சிறந்த சன்னியாசிகள் உள்ளனர்?" என்று நரேந்திரன், பாபுராம், யோகின், நிரஞ்சன், போன்ற சீடர்களை நோக்கிக் கூறினார். இவ்வாறு கோபாலின் மூலம் ராமகிருஷ்ண இயக்கத்தின் வித்து ஊன்றப்பட்டது.

குருதேவரை விட வயதில் பெரிய கோபால் துறவு பூண்டு அத்வைதானந்தர் எனப் பெயர் பூண்டார். பேலூர் மடம் துவங்கியபின் நிலபுலன்களைக் கவனித்து வந்தார். தோட்ட வேலை செய்வதில் நிபுணர். அவருக்கு ஈடாக எவராலும் வேலை செய்ய முடியவில்லை.

எல்லோரிடத்திலும் குருதேவரே வீற்றிருக்கிறார் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. அது முதல் எவரையும் குற்றம் கூறுவதை விட்டுவிட்டார்.

கேதார்நாத், பத்ரிநாத், துவாரகை, ராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வந்தார். குருதேவருக்குத் தொண்டு புரிந்தது போலவே தூய அன்னையாருக்கும் தொண்டு புரிந்து வந்தார். அன்னையார் சுவாமி அத்வைதானந்தரிடம் மிகவும் சகஜமாகப் பழகுவார்.

இவ்வாறு தொண்டுபுரிந்து வந்த சுவாமி அத்வைதானந்தர் 29-12-1909 அன்று இறைவனடி சேர்ந்தார்.

*உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மை உடையவனாக இரு.*

*— சுவாமி விவேகானந்தர்*

# சுவாமி திரிகுணாதீதானந்தர்

தோற்றம் : 30-1-1865

மகாசமாதி : 10-1-1911



கல்கத்தாவில் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் சாரதா பிரசன்ன மித்திரர் பிறந்தார். 'ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' எழுதிய மகேந்திரநாத் குப்தர் தலைமை ஆசிரியராக இருந்த பள்ளியில் கல்வி பயின்று வந்தார். பள்ளி இறுதித் தேர்விற்குமுன் தன்னுடைய தங்க கைக் கடிகாரத்தைக் கவனமின்மை காரணமாக இழந்துவிட்டார். அந்த வருத்தம் காரணமாகத் தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். மாணவனின் மனச்சோர்வைப் போக்க தலைமையாசிரியர் சாரதாவை தக்ஷிணேசுவரத்திற்கு அழைத்துச் சென்றார். அதுமுதல் மாணவனின் மனதில் ஞான நாட்டம் வளரலாயிற்று.

குருதேவர் ஒரு நாள் சாரதாவைப் பலர் முன்னிலையில் தம்முடைய காலைக் கழுவுமாறு பணித்தார். முதலில் மறுத்த சாரதா பின்னர் குலப்பெருமையை விட்டு பணி செய்யும் மனப்பான்மையுடன் குருவின் சொற்படி நடந்தார். காசிப்பூரில் நோயுற்ற குருதேவருக்கு சிறந்த பணியாற்றினார். துறவு பூண்ட பின்னர் 'சுவாமி திரிகுணாதீதானந்தர்' என்ற பெயர் பெற்றார்.

பல இடங்களுக்கும் யாத்திரை செய்தார். மிக்க துணிச்சலுடன் கயிலாய மலைக்கும் மானஸரோவருக்கும் சென்று திரும்பினார். ஒரு முறை ரணசிகிச்சைக்கு உட்பட்டபொழுது மயக்க மருந்து எதுவும் இல்லாமல் அரைமணி நேரம் கடுமையான வலியையும் பொறுத்திருந்தார்.

1897-இல் தினாஜ்பூரில் பஞ்சம் ஏற்பட்டபொழுது நிவாரணப் பணியைத் திறம்பட நடத்தினார். உண்ண எதுவும் கிடைக்காவிடில் ஒரு சிறு பழத்துண்டை மட்டும் உண்டு வாழ்வார். 'உத்போதன்' என்ற வங்காள பத்திரிகையை இவர் ஒருவராகவே செம்மையாக நடத்தினார்.

சுவாமி துரியானந்தர் இந்தியா திரும்பியபின் அவருக்குப் பதிலாக சுவாமி திரிகுணாதீதானந்தர் 1903-இல் சான்பிரான்ஸிஸ்கோ சென்றார். அங்கு மாதர்க்கென ஒரு மடத்தையும் நிறுவினார். மேலையுலகிற்கு ஞான விருந்தளிக்கும் வகையில் ஒரு இந்துக் கோயிலையும் கட்டினார். "விடுதலையின் குரல்" என்னும் ஆங்கிலப் பத்திரிகையையும் நடத்தினார். 1910 டிசம்பரில் கிறிஸ்துமஸ் விழாவிற்குப்பின் சான்பிரான்ஸிஸ்கோ இந்துக் கோயிலில் ஞாயிற்றுக்கிழமையன்று வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். மேடையின் அருகிலிருந்த ஒரு புத்தி சரியில்லாத இளைஞன் ஒரு வெடிக்குண்டை எறிய அதனால் அவனும் இறந்தான். சுவாமிகளும் பொறுக்கமுடியாத காயங்களால் மயக்கமடைந்தார். சிகிச்சைக்குப் பின்னர் கண்விழித்ததும் சுவாமி திரிகுணாதீதானந்தர், கேட்ட முதல் கேள்வி : 'அவனுக்கு எதுவும் காயம் இல்லையே?' என்று குண்டு எறிந்தவனைப் பற்றி விசாரித்தார். சிறந்த மருத்துவ வசதிகள் கிடைத்தும் சுவாமிகள் 10-1-1911 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# சுவாமி சுபோதானந்தர்

பிறப்பு : 1867

மகாசமாதி : 1932 டிசம்பர்



சுபோத்சந்திரர் கல்கத்தாவில் பிறந்தவர். பெற்றோர்கள் குழந்தைக்குத் தெய்வ பக்தியையும், வாய்மையின் உயர்வையும் பற்றிக் கற்பித்திருந்தனர். அழகுக்கு அழகு செய்வதுபோல் சிறுவன் 'ஸ்ரீராமகிருஷ்ணரின் போதனைகள்' என்னும் நூலைப் படித்துத் துறவற வாழ்க்கையில் ஈடுபாடு கொள்ளத் தலைப்பட்டான்.

தக்ஷிணேசுவரம் சென்று ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்தித்தார். ஒரு முறை குருதேவர் ஆனந்த பரவச நிலையில் சுபோதரைத் தொட்டு, சுபோதரின் நாவில் ஏதோ எழுதினார். அதன் பயனாக சுபோதர் தம்முள் குண்டலினி சக்தி விழித்துக் கிளர்ந்ததையும், அகண்ட ஜோதிக் கடலில் தேவ தேவியர்கள் உருவங்கள் தோன்றி மறைந்ததையும் கண்டார். புறவுணர்வை இழந்தார். அதுமுதல் தமது புருவ மத்தியில் புதுமையான ஒளி உதித்ததை உணர்ந்து வந்தார்.

வெள்ளையுள்ளமும் நேர்மையும் உடைய அவர் துறவறம் பூண்டு "சுவாமி சுபோதானந்தர்" என்னும் திருப்பெயர் பெற்றார். சுவாமி விவேகானந்தர் அவரது குழந்தை இயல்பைக் கருதி 'குழந்தை' என்று அழைத்து வந்தார். அதனால் சகோதர சீடர்களும் பக்தர்களும் அவரை 'குழந்தை மஹராஜ்', கோகா மகராஜ் என்றே குறிப்பிடுவர்.

பல இடங்களில் ஞான சாதனைகளைப் பழகினார். கேதாரம் முதல் கன்னியாகுமரி வரை பிரயாணம் செய்தார். 1899-இல் ராமகிருஷ்ண சங்கத்தின் 'பிளேக்' நிவாரணப் பணியிலும், 1909-இல் ஒரிசா பஞ்சம் சம்பந்தமான பணியிலும் சிறப்பான தொண்டாற்றினார்.

கிராமங்களில் கூட குருதேவரது கருத்துக்களையும் பெருமைகளையும் பிரசாரம் செய்தார். எந்தவித வேறுபாடும் கருதாமல் விரும்பி வந்தவர்களுக்கு ஞானதீக்ஷை அருளி வந்தார். அவரது சிறந்த தொண்டினைப் பாராட்டி சுவாமி விவேகானந்தர் அவரை என்ன வரம் வேண்டும் என்று கேட்க, அவர், "இறுதிநாள் வரை எனக்குக் காலையில் டீ தவறாது கிடைக்குமாறு அருளுக" என்றனர். என்னே அவரது எளிமை! வாழ்வில் பெற வேண்டிய அனைத்தையும் அவர் பெற்றிருந்தார் என்பதையல்லவா இது காட்டுகிறது! தூய அன்னையார்கூட சுபோதானந்தருக்குத் தேநீர் அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தி வந்தார்.

"பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்றென்றும் இச்சங்கத்தில் வாழ்ந்து அனைவரையும் ஆசிர்வதிப்பாராக" என்று இறுதியாக பிரார்த்தனை செய்து சுவாமி சுபோதானந்தர் 1932 டிசம்பரில் இவ்வுலகை நீத்தார்.

## சுவாமி விஞ்ஞானானந்தர்



தோற்றம் : 28-2-1868

மகாசமாதி : 25-4-1938

பல்கேரியாவிலுள்ள ஓர் அந்தண குடும்பத்தில் ஹரிபிரசன்ன சட்டோபாத்யாயர் பிறந்தார். கல்லூரி மாணவராக இருந்த பொழுது இவர் ஒரு முறை தக்ஷிணேசுவரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சந்தித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் இவரது நாவில் ஏதோ எழுத அதன் பயனாக தியானம் கைகூடப் பெற்றார். குருதேவரிடம் சிறந்த பல அறிவுரைகளைப் பெற்றார். பொறியியற் கல்லூரியில் பட்டம் பெற்று அரசாங்க வேலையில் அமர்ந்தார். விரைவில் பதவி உயர்வும் பெற்றார்.

உள்ளத்தில் ஏற்பட்டிருந்த ஞானதீபம் சுடர்விடச் சுடர்விட வேலையை விட்டுவிட்டு ஆலம்பஜார் மடத்தில் சேர்ந்து துறவு பூண்டார். சுவாமி விஞ்ஞானானந்தர் என்னும் பெயரையும் பெற்றார். பேலூர் மடத்திற்குரிய கட்டடங்களையும் கட்டினார். கங்கைக்குக் கரை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டார். சுவாமி விவேகானந்தரின் விருப்பப்படி பேலூரில் மடத்தை எழுப்புவதற்கு இன்றியமையாத வரைபடத்தையும் செலவின் மதிப்பையும் குறித்து வைத்தார்.

சுவாமி பிரம்மானந்தர், சுவாமி விஞ்ஞானானந்தர் ஒரு 'குப்த யோகி', அதாவது தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாதவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

பல துறைகளிலும் வல்லவர். பொறியியலைப் பற்றி வங்காள மொழியில் ஒரு நூலை எழுதினார். 'தேவி பாகவதம்', 'பிருஹத் ஜாதகம்', 'சூரிய சித்தாந்தம்' என்பவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் எழுதினார். காசி 'ராமகிருஷ்ண சேவாசிரமம்', பேலூர் 'விவேகானந்தர் கோயில்' இவ்விரண்டு கட்டட வேலையையும் சுவாமிகளின் மேற்பார்வையில் கட்டப்பட்டன.

ஊருக்குப் போகவேண்டுமென்றால் புகைவண்டி நிலையத்திற்கு பல மணி நேரம் முன்பாகவே சென்றுவிடுவார். நகைச்சுவையுடன் பேசுவதில் வல்லவர். குழந்தையுள்ளம் படைத்த இவரது பேச்சு எவரது உள்ளத்தையும் புண்படுத்தாது.

தபாற்பெட்டியில் அஞ்சல் அட்டைகளைப் போடச் சொல்லி அனுப்புபவர்களை அது விழுந்த சப்தம் கேட்ட பிறகுதான் வரவேண்டும் என்று வற்புறுத்துவார். இது அவரது நகைச்சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1937-இல் ராமகிருஷ்ண மடம், சங்கம் ஆகியவைகளுக்குத் தலைவரானார். இலங்கை, ரங்கூன் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். உயர் ஞானக் காட்சிகளும் அனுபூதிகளும் பெற்றிருந்தார். ஸாரநாத்தில் புத்தரது காட்சியையும் அலகாபாத்தில் திரிவேணி தேவியின் காட்சியையும் கண்டார். 1938 ஜனவரியில் குருதேவரின் கோயிலைப் பிரதிஷ்டை செய்தார். குருதேவரைக் கண்ணாரக் கண்ட வண்ணமிருந்து 1938 ஏப்ரல் 25 அன்று மகாசமாதி எய்தினார்.

# சுவாமி அபேதானந்தர்

தோற்றம் : 2-10-1866

மகாசமாதி : 8-9-1939



கல்கத்தாவில் பக்திவாய்ந்த குடும்பத்தில் காளிதேவியின் அருளால் அவதரித்தவர் காளிபிரசாத சந்திரர். படிப்பு,, விளையாட்டு, சித்திரக்கலை முதலியவற்றில் திறமை பெற்றவராக விளங்கினார். வடமொழியிலும் ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றுச் சிறந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். பல மத சம்பந்தமான பிரசங்கங்களைக் கேட்பார். ஆறு தரிசனங்களில் பதஞ்சலியின் யோக சாஸ்திரம் அவரது மனதைக் கவர்ந்தது. நிர்விகல்ப சமாதி அடையும் அவா எழுந்தது. ஞானாசிரியரைத் தேடி தக்ஷிணேசுவரம் சென்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்கு மந்திர தீக்ஷை கொடுத்தார். சாதனம் பயின்று பல ஞான அனுபூதிகளைப் பெற்றார். தூய அன்னையாரின் ஆசியாலும், நரேந்திரரது நட்பாலும், பேச்சாலும், சாஸ்திரக் கல்வியிலும், தியானப் பயிற்சியிலும் அதிகமாக ஈடுபட்டார். அதன் பயனாக "காளி தபஸ்வி" என்றும் "காளி வேதாந்தி" என்றும் போற்றப்பட்டார். குருதேவர் மீதும் தூய அன்னையார் மீதும் பல தோத்திரப் பாக்களை இயற்றினார்.

குருதேவரின் இறுதி நாட்களில் சிறப்பான முறையில் அவருக்குத் தொண்டு புரிந்தார். துறவு பூண்டதும் சுவாமி அபேதானந்தர் என்னும் திருநாமம் பெற்றார்.

பாரதம் முழுவதும் சுற்றிப் பல தலங்களில் தங்கி தியானம் பழகியதுடன் ஆங்காங்கே கற்றறிந்த பண்டிதர்களுடன் கலந்து பல சாஸ்திரங்களையும் கற்றார். சுவாமி விவேகானந்தரின் வேண்டுகோளுக்கிணங்கி 1896-இல் லண்டன் சென்று பல சொற்பொழிவுகள் ஆற்றி இந்தியப் பண்பாட்டின் வளத்தையும் உயர்வையும் பிற நாட்டினர் உணருமாறு செய்தார்.

1897-இல் நியூயார்க் சென்றார். சுவாமி விவேகானந்தரின் கட்டளைப்படி நியூயார்க் வேதாந்த சங்கத்தின் பொறுப்பை ஏற்றார். பல இடையூறுகளை தமது பக்தியாலும் விடாமுயற்சியாலும் வென்று இருபத்தைந்து ஆண்டுகள் அங்கே பணி புரிந்தார். 1921-இல் இந்தியாவிற்குத் திரும்பி திபெத் வரை சென்று 1923-இல் பேலூர் மடம் வந்து சேர்ந்தார். கல்கத்தாவில் 'இராமகிருஷ்ண வேதாந்த சங்கம்' ஒன்றை நிறுவி, 'விச்வவாணி' என்னும் வங்காள மொழிப் பத்திரிகையும் தொடங்கினார் . கலைமகளின் அருள் பூரணமாகப் பெற்ற சுவாமி அபேதானந்தர் 1939 செப்டம்பர் 8-ஆம் தேதியன்று குருதேவருடன் இரண்டறக் கலந்தார்.

> எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! நீங்களும் விழித்திருங்கள்!
> மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள்!
>
> \- சுவாமி விவேகானந்தர்

# ராமகிருஷ்ண இயக்கம்

## குறிக்கோளும் செயல்பாடும்

## சுவாமி பஜனானந்தர்

மதமும், கலாசாரமும் பிரிக்க முடியாதவை. எகிப்து, பாபிலோனிய, கிரேக்க, ரோமானிய நாகரிகங்கள் இன்று இல்லை. காரணம் என்ன? அந்த நாகரிகங்களின் பின்னணியில் மதம் இல்லை.

இந்திய நாகரிகம் இவ்வளவு காலம் நிலைத்து நிற்கிறது என்றால் அந்த நாகரிகத்தை தாங்கி நிற்கும் ஹிந்துமதம் உயிர்த்துடிப்புடன் விளங்குவதுதான் காரணம்.

ஹிந்து மதம் உயிர்த்துடிப்புடன் விளங்குவது எதனால் ? தொடர்ந்து தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் ஆற்றலை அது பெற்றிருப்பதால்தான்.

மதத்திற்குப் புத்துயிர் ஒரு தெய்வீக மூலத்திலிருந்தே கிடைக்கிறது. தர்மம் தேய்ந்து அதர்மம் வளரும்பொழுது இறைவனின் ஒரு தனித்தன்மை வாய்ந்த வெளிப்பாடு - அவதாரம் நிகழ்கிறது. அப்பொழுது பழங்கதையாகிவிட்ட சடங்குகளும், காலப்போக்கில் சேர்ந்துவிட்ட தவறான அபிப்பிராயங்களும் அகற்றப்பட்டு, உட்பொதிந்திருக்கும் ஆக்கபூர்வமான ஆற்றல்கள் தூண்டிவிடப்பட்டு மதம் புத்துயிர் பெறுகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தர் இவர்களுடைய பெயர்களுடன் விளங்கும் இயக்கம் ஹிந்து மதத்தைப் புதுப்பிக்கவே வந்துள்ளது. அதை சீர்த்திருத்துவதற்காக அல்ல.

சீர்திருத்த இயக்கம் என்பது சாதாரண மக்களால் தோற்றுவிக்கப்படுகிறது; அது மதத்தின் ஒரு சிறு பகுதியையோ, மற்றும் மக்களில் ஒரு பிரிவினரையோ மட்டுமே பாதிக்கிறது; தவிர மதத்திலுள்ள குற்றங்களைப் பெரிதுபடுத்தி அதிகாரத் தோரணையுடன் சில சட்டதிட்டங்களை மக்கள் மீது திணிக்கிறது. இது அற்ப ஆயுளோடு முடிந்துவிடும் அல்லது இன்னொரு மதப்பிரிவாக உருவெடுக்கும்.

ஆனால் புதுப்பித்துக் கொள்ளுதல் என்பது சுதந்திரமான இயற்கையான வளர்ச்சி. இதில் ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இது அவதார புருஷர்களின் காலத்தில், அவரது அருளால் நிகழ்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய கலாச்சாரம் சந்தித்த சவால்கள்தான் என்ன?

மக்களின் ஏழ்மையும், முன்னேற்றமின்மையும், மேற்கத்திய கலாசார பாதிப்புகளும்தான்.

இந்திய கலாசாரத்தைக் கட்டிக்காக்க சுவாமி விவேகானந்தர் கண்ட வழிதான் ஹிந்து மதத்தைப் புதுப்பிப்பதற்கான முயற்சி. வரலாற்றில் ஒரு முக்கியக் காலக்கட்டத்தில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தர் தொடங்கி வைத்த இந்தப் பணிதான் ராமகிருஷ்ண இயக்கத்திற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவத்தை அளிக்கிறது.

## ஹிந்து மதத்தைக் காக்க, புதுப்பிக்க சுவாமிஜி கண்டறிந்த வழிதான் என்ன?

அனைத்து மத சம்பிரதாயங்களும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். வேதாந்தம் நடைமுறையில் கொண்டு வரப்படவேண்டும். பாமர மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு எல்லாவிதமான முயற்சிகளிலும் அவர்கள் பங்கு பெறும்படிச் செய்ய வேண்டும். மதத்தில் நம்பிக்கை வருவதற்கு மத உணர்வுகள் வலிமையும், வேகமும் பெறுவதற்கு மத உண்மைகளை உள்ளபடியே உணர்ந்த உலக மகா புருஷர் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை முன் உதாரணமாக எல்லோர் முன்பும் வைக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் செயல்படுத்த தன்னலமற்ற, இலட்சியப் பிடிப்புகொண்ட மக்கள் உள்ள ஒரு இயக்கத்தை உருவாக்க வேண்டும். இது ராமகிருஷ்ண இயக்கம் உருவானதற்கான ஒரு காரணம்.

இன்னொரு காரணமும் இருக்கிறது. மக்களை உய்விக்க உலகப் பொதுமதம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியால், அதிலிருந்து பிறக்கும் விளைவுகளால் மதம் காப்பாற்றப்பட வேண்டுமானால் அதில் வேதாந்தக் கருத்துக்கள் இடம்பெற வேண்டும். அனைத்து மத சம்பிரதாயங்களிலும் பொதுவாக இருப்பனவற்றை எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் சிறப்பாக இருப்பனவற்றை மதிக்கக் கற்றுக்கொள்வதே இந்த மதத்தின் ஒரு முக்கிய அம்சம்.

## ராமகிருஷ்ண இயக்கத்தின் ஐந்து பிரிவுகள்

இயக்கம் என்பது பல்வேறு ரசனைக் கொண்ட எண்ணற்ற மக்களைத் தன்னிடம் கொண்டது. இலட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைகளில், மனோபாவங்களில், உணர்வுகளில், செயல்களில் ஒரு விழிப்புணர்வை தோற்றுவிப்பது.

ஒரு தெய்வீக இயக்கம் மிகப் பெரியதொரு அலை போன்றது. எல்லாவற்றையும்

அடித்துச் செல்லக்கூடியது. எல்லையற்ற அன்பும், கருணையும், ஆற்றலும் கொண்டு ஒரு அவதார புருஷரால் தோற்றுவிக்கப்படுவது. இந்த யுகத்தில் எப்படி வாழவேண்டும் என்று அவர் வாழ்ந்து காட்டுகிறார். அவரிடமிருந்து தெய்வீக சக்தி புறப்பட்டு எல்லாத் திசைகளுக்கும் செல்கிறது. அந்த அருட்சக்திக்கு ஆட்பட்டவர்கள் மிகுந்த பிரயாசையின்றி தங்களது ஆன்மீகப் பாதையில் முன்னேறுவார்கள். இந்த யுகத்தின் அவதார புருஷர் யார் ? ஸ்ரீராமகிருஷ்ணர்தான்.

இன்றைய யுகத் தேவைகளை அறிந்து வழிவகுத்துக் கொடுத்திருப்பவரும், இலட்சிய வாழ்வு வாழ்ந்துகாட்டியிருப்பவரும் அவர்தான்.

ராமகிருஷ்ண இயக்கத்தை நடத்துபவரும் அவரே. இயக்கத்திற்கு உற்சாக ஊற்றாகவும் ஆதரிக்கும் சக்தியாகவும் விளங்கும் அவரே இயக்கத்தின் இறுதி இலட்சியமும். அவரது தெய்வீக உடலே இந்த இயக்கம். இயக்கம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதும் அவரையேதான். இயக்கத்தின் ஒருங்கிணைக்கும் சக்தியும் அவரேதான். அவரிடமிருந்து, அந்த மூலத்திலிருந்து தோன்றிய ஐந்து நீரோடைகள், பிரிவுகள் கொண்டதே ராமகிருஷ்ண இயக்கம்.

### ராமகிருஷ்ண மடம் மற்றும் ராமகிருஷ்ண மிஷன்

ராமகிருஷ்ண இயக்கத்தின் பிரதான பிரிவு ராமகிருஷ்ண மடம். முற்றிலும் துறவியர்களைக் கொண்ட அமைப்பு இது. தனக்கென்று ஒரு சம்பிரதாயத்தையும் கொள்கைகளையும் கொண்டது.

1897 ஆம் வருடம் உருவாக்கப்பட்டு, 1990-ஆம் வருடம் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனமாகிய ராமகிருஷ்ண மிஷன் ஒரு சேவை நிறுவனமாகும். துறவிகளின் மேற்பார்வையில் இயங்கி, பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், மருத்துவ மையங்கள், தெய்வீக கலாசார கேந்திரங்களை இது நடத்தி வருகிறது. புயல், வெள்ளம், பஞ்சம், காலரா மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிஷன் ஆற்றிய சேவைகள் அரசு மற்றும் பொதுமக்களது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன் 136 இடங்களில் இயங்கி வருகின்றன.

### சாரதா மடம் :

பெண் துறவியருக்கான அமைப்பு. ஸ்ரீராமகிருஷ்ணரின் தெய்வீகத் துணைவியாரான ஸ்ரீசாரதாதேவியாரை இலட்சியமாகக் கொண்டு பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் அமைப்பு இது. 1953ம் வருடத்திலிருந்து முறையாக பெண்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக தெய்வீகப் பணி ஆற்றிக்

கொண்டிருக்கிறது. ராமகிருஷ்ண இயக்கத்தின் இரண்டாவது பிரிவாக இதனைக் கொள்ளலாம்.

### இல்லற அடியார்கள் :

ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பக்தி கொண்டவர்கள் தெய்வீக ஆர்வம் உடையவர்கள், துறவியர்கள் ஆற்றும் பணிகளுக்கு உறுதுணையாக இருந்து உழைப்பவர்கள். இவர்களைக் கொண்ட இந்தப் பிரிவை ராமகிருஷ்ண இயக்கத்தின் மூன்றாவது பிரிவாகக் கொள்ளலாம்.

### மும்மூர்த்தி பெயர் தாங்கி நிற்கும் நிறுவனங்கள் :

ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவியார், விவேகானந்தர் பெயரில் பல ஆசிரமங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் கட்டுப்பாட்டிற்குள் வராதவை. ஆனாலும் ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் கொள்கைகளில் இந்த பிரிவினருக்கு உண்மையான ஈடுபாடு இருக்கும் வரை ராமகிருஷ்ண இயக்கத்தின் நான்காவது பிரிவாகவே இவர்களைக் கருத வேண்டும்.

### அண்மையில் இருப்பவர்கள்

ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களினால் கவரப்பட்ட எண்ணற்ற மக்கள், மிஷனின் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள், ஆன்மீகப் பாதையில் சிரத்தையுடன் முன்னேறிக் கொண்டிருப்பவர்கள்-இவர்கள் இயக்கத்தின் அண்மையிலேயே இருக்கிறார்கள். இயக்கத்தின் ஐந்தாவது பிரிவாகவே இவர்களைக் கருத வேண்டும்.

இந்த யுகத்தில்,

மதங்கள் பலவும் ஒன்று சேருமிடமாக, எண்ணற்ற ஆன்மீக சாதகர்கள் அடையுமிடமாக, இறைவனை நோக்கிச் செல்லும் பாதையை எல்லோருக்கும் வெளிப்படுத்திக் கொண்டு ஐந்து பிரிவுகளைக் கொண்ட ராமகிருஷ்ண இயக்கம் இயங்கி வருகிறது.

உலகப் பொது மதம் ஒன்று உருவாக வேண்டுமானால் அது ஸ்ரீராமகிருஷ்ணர் காட்டிய வழியினால்தான் உருவாகும். வேறு வழியேயில்லை.

மத இயக்கங்கள் இரண்டு வகைப்படும். மற்றவர்களின் நம்பிக்கையை அழித்து, அவர்களைத் தங்களது ஆதிக்கத்தில் கொண்டு வந்து, எண்ணிக்கையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருப்பது ஒரு வகை. நம்பிக்கையை அழிக்காமல் தனது கொள்கைகளால் மக்களின் மனதை ஈர்த்து துன்பத்திலிருந்தும் அறியாமை

யிலிருந்தும் மக்களை விடுவிப்பது மற்றொரு வகை. ராமகிருஷ்ண இயக்கம் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தது. நவீன யுகத்தில் ராமகிருஷ்ண இயக்கம் ஒரு சிறப்பான பங்கினை வகிக்கிறது. எனவேதான் எட்மண்ட் டேவிஸன் ஸோவர் தனது 'தி இன்எவிடெபிள் சாய்ஸ் (The Inevitable Choice) என்ற புத்தகத்தில் திறனாய்விற்காக ராமகிருஷ்ண இயக்கத்தையே எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ராமகிருஷ்ண இயக்கத்தின் கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கும், மக்களிடம் அதனுடைய செல்வாக்கு வளருவதற்கும் காரணமாக அதில் இருக்கும் அம்சங்கள்தான் என்ன ?

### ராமகிருஷ்ண இயக்கத்தின் மனதைக் கவரும் அம்சங்கள்:

### 1. தெய்வீக அனுபவங்கள் உண்மையே என்று வலியுறுத்தப்படுகிறது.

ஆத்மஞானம் அல்லது இறைவனை நேரடியாக தரிசித்தலே மதத்தின் இலட்சியமாகும். ராமகிருஷ்ண இயக்கம் ஏராளமான மக்களுக்கு இதனைச் சாத்தியமாக்கித் தருகிறது.

ராமகிருஷ்ண இயக்கம் மிகப் பெரிய அளவில் சமூக சேவைகள் செய்தாலும் அவை எல்லாம் ஆன்மீக விடுதலைக்கு ஒரு வழிமுறையாகவே கருதப்படுகின்றன.

### 2. தூய்மையை வலியுறுத்துதல்

தூய்மையும், தன்னலமற்ற தன்மையுமே ராமகிருஷ்ண இயக்கத்தில் வலியுறுத்தப்படுகின்றன. சித்து விளையாட்டுக்களுக்கோ, மந்திர ஜாலங்களுக்கோ இதில் இடமில்லை. நற்குணம் இருந்தாலொழிய ஆன்மீகத்தில் முழுமை பெற முடியாது என்பதே இயக்கத்தின் உறுதியான கொள்கை. காமத்தையும், காசு ஆசையையும் விட்டாலொழிய நற்குணம் பெற முடியாது என்பதால் இயக்கம் தனது அங்கத்தினர்களிடமும், துறவியர்களிடமும், இல்லற அடியார்களிடமும், காமத்தையும் காசு ஆசையையும் துறக்கும்படி வலியுறுத்துகிறது. இதற்காக குகைக்கோ காட்டிற்கோ செல்ல வேண்டியதில்லை. தானமும், சேவையும் செய்தாலே போதும். தனிநபராகட்டும், மடமாகட்டும் தங்களது இன்றியமையாத தேவைகளுக்கு மட்டும் பணத்தை வைத்துக் கொண்டு அதிகமாக இருப்பதை சமுதாயத்திற்கு அளித்துவிட வேண்டும். ராமகிருஷ்ண இயக்கம் வலியுறுத்தும் ஆக்கபூர்வமான தியாகம் இதுதான்.

### 3. ஹிந்துமதத்தில் ஒற்றுமைக்கு இலக்கணமாகத் திகழ்தல்.

ஹிந்து மதத்தின் சிறப்பு அம்சங்கள் அனைத்தையும் ராமகிருஷ்ண இயக்கம் ஏற்றுக்

கொள்கிறது. எல்லா அவதாரப் புருஷர்களையும், தேவதேவியரையும், கடவுளை அடையும் மார்க்கங்களையும் (கர்மம், யோகம், பக்தி, ஞானம்) அது ஒப்புக் கொள்கிறது. ஜாதி, மத, இன, பால் வேறுபாடின்றி அனைவரையும் அது ஏற்றுக்கொள்கிறது.

### 4. மத இணக்கத்திற்கோர் சின்னம்

மத இணக்கம் என்ற கொள்கையை நடைமுறையில் கொண்டு வந்திருக்கும் ராமகிருஷ்ண இயக்கம் உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. மதங்களிடையே வெறும் சகிப்புத்தன்மை மட்டும் இருந்தால் போதாது. ஒன்று மற்றொன்றை ஏற்றுக் கொள்வதும், பரஸ்பரம் பகிர்ந்துகொள்ளும் தன்மையும் இருக்க வேண்டும் என்றே இயக்கம் கூறுகிறது.

"ஒரு கிறிஸ்துவன் ஹிந்துவாகவோ பௌத்தனாகவோ ஆக வேண்டியதில்லை. அப்படியே ஒரு ஹிந்துவோ பௌத்தனோ கிறிஸ்துவனாக வேண்டியதில்லை. மற்றவரிடம் காணப்படும் சிறப்புத்தன்மையை ஏற்றுக் கொண்டு தனது தனித்தன்மையை இழந்துவிடாமல், அவனுக்குரிய இயற்கைபடி வளர வேண்டும்" என்று இயக்கத்தின் வியத்தகு தன்மையான மத இணக்கத்தைப் பற்றிக் கூறுகிறார் சுவாமி விவேகானந்தர்.

### 5. நிலைத்து நிற்கும் ஆற்றல்

இந்த நூற்றாண்டில் துடிப்பும், செயலாற்றலும் கொண்டும் விளங்கும் இயக்கங்களில் ராமகிருஷ்ண இயக்கமும் ஒன்று. இந்தியாவில் அது வேகமாக வளர்ந்து வருகிறது. மேலை நாடுகளில் அது முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. சமீப காலத்தில் மக்களிடம் செல்வாக்கு கொண்ட பல மத ஸ்தாபனங்கள் தோன்றி உள்ளன. அவற்றிலிருந்து ராமகிருஷ்ண இயக்கத்தை வேறுபடுத்திக் காட்டுவது எது ? அது இயக்கத்தின் தீர்க்கப் பார்வையேயாகும். பல நூறு ஆண்டுகள் செயலாற்றும் வகையில் அது அமைந்துள்ளது. நிலைத்து நிற்கக் கூடிய தன்மையை அதனிடம் காண முடிகிறது. காலப்போக்கில் வளரப் போகும் மகத்தான தெய்வீக மறுமலர்ச்சிக்கு அஸ்திவாரமாகத்தான் இன்றைய அதன் பணிகள் கருதப்படுகின்றன.

### 6. ஆக்கபூர்வமான அணுகுமுறை :

எதனோடும் ஒட்டாத, உலகை உதாசீனப்படுத்தும் வேதாந்த சித்தாந்தத்தை பொருள் வாய்ந்ததாக ஆக்கபூர்வமானதாக ஆக்கியது சுவாமி விவேகானந்தர்தான். மாயைக்குப் பதிலாக பிரம்மம் வலியுறுத்தப்பட்டது. சாட்சியான ஆத்மாவிற்குப்

பதிலாக வளமை, பெருமை, முழுமை இவற்றின் இருப்பிடமே ஆத்மாதான் என்று எடுத்துக்கூறப்பட்டது. பக்தி அல்லது இறைவனிடம் அன்பு அந்த மட்டோடு நின்றுவிடாது மக்களிடமும் செலுத்தும் அன்பிற்கும் அதற்கும் வேறுபாடில்லை என்று விரிவாக்கப்பட்டது. வளமை, பயமற்ற தன்மை, மனமகிழ்ச்சி இவையே தெய்வீக நன்மைக்கு அடையாளங்கள் என்ற கூறி பழைய வேதாந்தம் புதிய வேதாந்தமாக மாற்றி அமைக்கப்பட்டது. ராமகிருஷ்ண இயக்கத்தின் ஆக்கபூர்வமான அணுகுமுறை இது. பல்வேறுபட்ட கருத்துக்களையும் அது ஏற்றுக் கொள்ளும் திறன் பெற்று விளங்குகிறது.

7. நவீனத்தன்மை :

ராமகிருஷ்ணரின் நீதிக்கதைகளும் விவேகானந்தரின் தெளிவான கருத்துக்களும் மிக உயர்ந்த வேதாந்த கருத்துக்களும் இன்று பாமர மக்களையும் எட்டி உள்ளன. அந்தந்த பிராந்திய மொழியிலேயே மத விஷயமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இயக்கத்தின் கோவில்களும், ஆசிரமங்களும், தூய்மையாகவும், காற்றோட்டம் கொண்டதாகவும், நவீன வசதிகள் கொண்டதாகவும் உள்ளன. எல்லா செயல்களும் குறித்த நேரத்தில் திறமையுடனும், பாங்குடனும் செய்யப்படுகின்றன. உணவு, உடை, அலுவல்,மற்றும் சமூக சம்பிரதாயங்களில் துறவிகள் தற்காலத்தில் கடைப்பிடிக்கப்படுவதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்தகைய மாறுதல்களால் சந்நியாச தர்மத்திற்கு எத்தகையதொரு கெடுதலும், அவமதிப்பும் நேரிடாதபடி அதே நேரத்தில் சமுதாயத்திலிருந்து பிரிந்திராது, இயக்கத்தின் இலட்சியங்களை மக்களிடையே எடுத்துச் செல்லும் பணியும் தடையில்லாமல் நடைபெறுகிறது.

8. சமுதாய ஆதரவு

இயக்கத்தைச் சேர்ந்த துறவிகளுக்கும், இல்லற அடியார்களுக்குமிடையே கருத்து ஒற்றுமையும், இணைந்து செயலாற்றும் திறனும் இருப்பதோடு அனைவருமே ஒரு தெய்வீக குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது. இது வெறும் நம்பிக்கையால் மட்டுமே ஏற்பட்டது அல்ல. தன்னலமற்ற அன்பே இதற்குக் காரணம். இத்தகைய குடும்ப உறவு முறை ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவியார் காலத்திலேயே தோன்றிய ஒன்று. இன்னும் அது தொடர்கிறது. “நான் இன்னவன்” என்ற பெருமிதத்தோடு, தெய்வீக பலத்துடன், நிலையற்ற இந்த உலகப் பிரச்சினைகளை நிதானமாக எதிர்கொள்ளவும், மரணத்திற்குப் பிறகு வருகின்றதை சந்திக்கும் மனப்பக்குவத்தையும் இல்லற அடியார்கள் இந்த உறவு

முறையால் பெறுகிறார்கள். இந்த உறவு முறையில் குரு-சிஷ்ய மனோபாவம் பெரும் பங்கு வகிக்கிறது.

## 9. சமுதாயப் பாங்கு

மக்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் நம்பிக்கையை பெறும் வகையில் ராமகிருஷ்ண இயக்கத்தில் இருக்கும் கவர்ச்சிகரமான அம்சம் என்ன? அதனுடைய சமுதாயப் பாங்குதான். துறவிகளும், அடியார்களும் நாட்டுமக்களின் சமுதாய நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். இயக்கத்தின் சமுதாயப்பாங்கு அல்லது நோக்கில் உள்ள சில தனித்தன்மைகள் :

1. வேலைப்பற்றிய ஒரு புதிய சித்தாந்தம்: ராமகிருஷ்ண இயக்கம் வேலையை ஒரு வழிபாடாக உயர்த்தி உள்ளது. மனிதனிடம் கடவுளை வழிபடுவது. மனிதனிடம் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாகவே வேலை கருதப்படுகிறது. இதனால் எல்லா வேலைகளும் தெய்வீகமானதாக மாற்றப்படுகின்றன.

2. பொது மக்கள்பால் கவனம்: நலிந்திருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்காக குரல் எழுப்பி அவர்களுக்கு சமூகசேவை செய்யத் தொடங்கியவர் சுவாமி விவேகானந்தர். மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது ராமகிருஷ்ண இயக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

3. சாதியைப் பற்றிய கருத்து: ராமகிருஷ்ண இயக்கம் சாதி, இனவேறுபாடு பாராட்டுவதில்லை. எனினும் வெளிப்படையாக அது சாதி ஒழிப்பு வேண்டும் என்று கோரியதில்லை. காரணம் பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஆகாது என்பதுதான். சாதியற்ற சமுதாயம் என்று அது கூறும் பொழுது கலாசாரத்தில் உயர்ந்திருப்பவர்களை மட்டம் தட்டி மற்றவர்களுடன் சமமாகக் காண்பது என்று பொருள் கொள்ளக்கூடாது. கலாசாரத்தில் தாழ்ந்து இருப்பவர்களை உயர்த்தி அனைவரையும், ஒன்றாக உயர்வாகக் காண்பது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

4. ராமகிருஷ்ண இயக்கம் முற்றிலும் அரசியல் தொடர்பு அற்ற ஒன்றாகும்.

## 10. ஆன்றோர்களின் துணை :

எத்துணை உயர்வான சித்தாந்தமாகட்டும், மறுக்கமுடியாத ஆன்மீக உண்மையாகட்டும், ஆயிரக்கணக்கான மக்களின் ஆன்மீகப் பசியினை அவற்றால் தீர்க்க முடியுமா ? ஆன்றோர்களால்தான் இது சாத்தியமாகும். ஒரு தெய்வீக

இயக்கத்தின் உண்மையான வளமையும், ஆகர்ஷண சக்தியும் அவர்களே ஆவார்கள். அத்தகைய ஆன்மீகப் பெருமக்களை ராமகிருஷ்ண இயக்கம் ஏராளமாகவே அளித்துள்ளது.

ராமகிருஷ்ணரும் அவரது சீடர்களும் வெளிப்படுத்திய ஆன்மீக ஆற்றல் இன்னும் தொடர்கிறது. வாழையடி வாழையாக இயக்கத்தின் துறவிகள் மற்றும் இல்லற அடியார்களின் ஒளி பொருந்திய வாழ்க்கை உதாரணங்களாகும்.

இந்தமகத்தான அம்சங்கள் ராமகிருஷ்ண இயக்கத்தின் அனைத்துப் பிரிவுகளுக்குமே பொருந்தும் என்று சொல்லிவிட முடியாது. எனினும் இயக்கத்தின் பொதுவான தன்மை இதுவென உணர்ந்துகொள்ள இவை உதவும்.

### ராமகிருஷ்ண இயக்கத்தின் கொடை :

புதிய இந்தியாவிற்கும், உலக சிந்தனைக்கும் ராமகிருஷ்ண இயக்கம் வழங்கி உள்ள கொடைதான் என்ன?

இயக்கத்தின் மருத்துவமனைகள், மருத்துவ மையங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், தங்கும் விடுதிகள், கலாசாரக் கேந்திரங்கள் ஆகியவை ஆயிரக்கணக்கான மக்களின் தேவைகளை நாள்தோறும் கவனித்து வருகின்றன. மகத்தான இந்த கொடையினை மக்களும், அரசாங்கமும் நன்றாகவே அறிந்திருக்கின்றனர். இது தவிர நாட்டில் அவ்வப்போது ஏற்படக்கூடிய பஞ்சம், வெள்ளம், கலகம், மற்றும் இயற்கை உற்பாதங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரிவான நிவாரண உதவிகளை ராமகிருஷ்ண இயக்கம் அளித்து வருகிறது. அதன் திறந்த வாயில்கள் வழியே கோடிக்கணக்கான ரூபாய் உதவி இலட்சக்கணக்கான மக்களை அடைந்துள்ளது.

ராமகிருஷ்ண இயக்கத்தினால் உருவான தெய்வீக மறுமலர்ச்சி மேற்கத்திய கலாசார மோகத்திலிருந்து மக்களை விடுவித்துள்ளது. இதனால் விளைந்த மறைமுகமான விளைவே அரசியல் விழிப்புணர்ச்சி. ஸ்ரீ அரவிந்தர், நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் போன்ற பெருமக்களிடம் காணப்பட்ட எழுச்சி.

ஹிந்து மதத்தில் உள்ள பல்வேறு சம்பிரதாயங்களையும் ஒருங்கிணைத்து, தேவையானவற்றை தேவையற்றவையிலிருந்து பிரித்து, நவீன எண்ண ஓட்டத்திற்கேற்ப அதை உருவாக்கி உள்ளது ராமகிருஷ்ண இயக்கம்.

ஹிந்துக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை ஒன்று உள்ளது என்று உணர்த்தி உள்ளது ராமகிருஷ்ண இயக்கம்.

சமுதாய வாழ்க்கை என்னும் நீரோட்டத்தில் ஹிந்து துறவிகளையும் கலக்கும்படிச் செய்துள்ளது ராமகிருஷ்ண இயக்கம்.

மனிதனிடம் பொதிந்திருக்கும் தெய்வீகத் தன்மையை சுட்டிக்காட்டி, கர்மம் செய்வதே கடவுள் வழிபாடு என்று புதிய நடைமுறை வேதாந்தத்தைக் கொண்டு வந்துள்ளது ராமகிருஷ்ண இயக்கம்.

மேலை நாடுகளில் காணப்படும் ஆன்மீக எழுச்சிக்கு ராமகிருஷ்ண இயக்கம் பெரிதும் பங்காற்றி உள்ளது. கிழக்கையும், மேற்கையும் இணைத்து உலகப் பொது மதம் உருவாக அஸ்திவாரம் அமைத்துள்ளது ராமகிருஷ்ண இயக்கம்.

மேலைநாட்டு மக்கள், தத்துவ சிந்தனையாளர்கள் எழுத்தாளர்கள் ஆகியோருக்கு யோகம், வேதாந்தம் ஆகியவற்றை ஜனரஞ்கமாக்கித் தந்த பெருமை ராமகிருஷ்ண இயக்கத்திற்கே உடையது.

**எதிர்கால திட்டங்கள் :**
**ராமகிருஷ்ண இயக்கத்தின் முன் நிற்கும் பணிகள் யாவை ?**

ராமகிருஷ்ண இயக்கம் சாமானிய மக்களிடம் பிரபலமாக வேண்டும். அவர்களிடம்தான் வளமை உள்ளது. அவர்களுடைய ஆதரவு இயக்கத்திற்கு கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். ஏழை மக்களின் உடல் தேவைகளைக் கவனித்து வந்திருக்கும் ராமகிருஷ்ண இயக்கம் அவர்களது ஆன்மிக நலனையும் கவனிக்க வேண்டும். வேதாந்தக் கருத்துக்களை அவர்களிடம் எடுத்துச் செல்வதற்கு திரளான மக்கள் வேண்டும்.

வேலையைப்பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம் மிகப் பெரும் அளவில் ஏற்படுத்தப்பட வேண்டும். வேலையைப் பற்றியும், சமூக பொருளாதார வாழ்க்கையைப் பற்றியும் சுவாமிஜி கூறிய கருத்துக்கள் நன்கு ஆராயப்பட்டு நவீன கொள்கைகளுக்கு ஏற்ப அவை விளக்கப்பட வேண்டும்.

ராமகிருஷ்ண இயக்க உறுப்பினர்களது ஆன்மீக வாழ்க்கை இன்னும் தீவிரமாக்கப்பட வேண்டும்.

ராமகிருஷ்ண இயக்கத்தின் பல்வேறு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, செயல்திறன் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும்.

பல்வேறு கலாசாரங்களும் ஒருங்கிணைய வழிவகுக்க வேண்டும்.

உலக மக்கள் ஒன்றோடு ஒன்று நெருங்கி உறவாட ராமகிருஷ்ண இயக்கம் முக்கிய பங்கு ஆற்றவேண்டும்.

உலகளவில் ராமகிருஷ்ண இயக்கம் ஆற்ற வேண்டிய பணி உள்ளது. அது தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.


எதிர்கால மனித சமுதாயத்தின் நம்பிக்கையின் ஆரம்பப் பள்ளியாக விளங்கும் ராமகிருஷ்ண இயக்கத்திடம் ஸ்ரீராமகிருஷ்ணரும், அன்னை சாரதா தேவியாரும், சுவாமி விவேகானந்தரும் இக் காலத்திற்குரிய மகோன்னதமான சில குறிக்கோள்களைப் பிதுரார்ஜிதமாக வழங்கியுள்ளார்கள். இதுவே உலகளவில் வளருமானால் உலகமே ஒரே சமுதாயமாகும். அந்த சமுதாயத்தின் ஆன்மீக இல்லமாக ராமகிருஷ்ண இயக்கம் ஆகும்.

ஆங்கில மூலத்தின் மொழிபெயர்ப்புத் தொகுப்பு :
**ஆர். விட்டல்**

இந்த இயக்கம் (ராமகிருஷ்ண மிஷன்) பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருமேனியே அன்றி வேறில்லை. இதில் அவர் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த இயக்கம் ஒருமித்த குரலில் இடுகின்ற ஆணை ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆணையே. இந்த இயக்கத்தை வழிபடுபவர்கள் அவரை வழிபடுகிறார்கள்; இதனை அவமதிப்பவர்கள் அவரை அவமதிக்கிறார்கள்.

யாரெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு, இல்லை, ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இல்லை, அவருடைய குழந்தைகளான பாமரர்களுக்கு, ஒடுக்கப்பட்டவர்களுக்கு, பாவிகளுக்கு, நோயில் துடிப்பவர்களுக்கு தொண்டு செய்யத் தயாராக இருக்கிறார்களோ அவர்களிடத்தில் அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். அவர்களின் நாவில் அறிவு தெய்வமான சரஸ்வதியே நடம்புரிவாள்! எல்லா ஆற்றல்களின் வடிவமான அன்னை பராசக்தி அவர்களுடைய இதயத்தில் கோயில் கொண்டிருப்பாள்.

*- சுவாமி விவேகானந்தர்*




## இந்தியாவில் ராமகிருஷ்ண மிஷனின் மையங்கள் உள்ள இடங்கள்

**ஆந்திரபிரதேசம் :** ஹைதராபாத், ராஜமந்திரி, விசாகப்பட்டினம்.

**அருணாசலபிரதேசம் :** அலாங், நரோத்தம்நகர், நியு ஈடாநகர்.

**அஸ்ஸாம் :** குவாஹாட்டி, கரிம் கான்ஞ்ச், சில்சார்

**பிஹார் :** தேவ்கர், ஜம்ஷெட்பூர், ஜாம்தரா, காட்டியார், பாட்னா, ராஞ்சி (மொராபாடி ஆச்ரம், டி.பி. சேனிடோரியம்)

**தில்லி :** புதுதில்லி

**குஜராத் :** ராஜ்கோட், லிம்டி, போர்பந்தர்

**கர்நாடகம் :** பெங்களூர், மங்களூர், மைசூர், பொன்னம்பேட்

**கேரளம் :** காலடி, கோழிக்கோடு, திருவல்லா, திருச்சூர், கொயிலண்டி, பாலை, திருவனந்தபுரம்

**மத்தியபிரதேசம் :** ராய்ப்பூர், நாராயண்பூர்

**மேகாலயம் :** சிரபுஞ்சி, ஷில்லாங்

**மஹாராஷ்ட்ரம் :** மும்பை, நாக்பூர், பூனா

**ஒரிஸா :** புவனேஸ்வரம், பூரி, சக்ரதீர்த்தம் (பூரி)

**பஞ்சாப் மற்றும் ஹரியானா :** சண்டிகர்

**ராஜஸ்தான் :** கேத்ரி, ஜெய்பூர்

**தமிழ்நாடு :** செங்கல்பட்டு, கோயம்புத்தூர், காஞ்சிபுரம், சென்னை (மடம், மாணவரில்லம், சாரதா வித்யாலயா, மாணவர் விடுதி, விவேகானந்த கல்லூரி) நாட்ராம்பள்ளி, உதகமண்டலம், சேலம், மதுரை.

**உத்தரபிரதேசம் :** அலகாபாத், அல்மோரா, கான்பூர், கன்கல், கிஷன்பூர், லக்னௌ, மாயாவதி, சியாமளதால், வாராணாசி (சேவாச்ரம், அத்வைத ஆச்ரம்) பிருந்தாவனம்.

**மேற்கு வங்காளம் :** அசங்சல், பங்கூரா, பேலூர், பெல்கேரியா, கல்கத்தா: அத்வைத ஆச்ரம் கிளைகள், பாக்பஜார் மடம், பராநகர், காசிப்பூர் மடம், கதாதர் ஆச்ரம், இன்ஸ்டியூட் ஆஃப் கல்ச்சர், சேவாபிரதிஷ்டான், காங்குர்காச்சி யோகத்யான் ஜல்பாய்குரி, கமார்புகூர், மானஸத்வீப், மால்தா, மிதினிப்பூர், நரேந்திரப்பூர், புருலியா, ராஹ்ரா, ராம்ஹரிப்பூர், சார்காச்சி, சரிசா, டாக்கி, தும்லுக்.

# ராமகிருஷ்ண மிஷனின் உலகளாவிய பணிகள்

### ஒரு கண்ணோட்டம்

ராமகிருஷ்ண மிஷனில் பலவிதமான பணிகள் உள்ளன. புத்தக வெளியீட்டு நிலையங்கள், கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்பள்ளிகள், கிராமப்புற முன்னேற்ற செயல் திட்டங்கள், பொறியியல் நிறுவனங்கள், மருத்துவமனைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்பு நிலையங்கள்; இவை தவிர புயல், வெள்ளம் மற்றும் பஞ்ச நிவாரணம் போன்ற பணிகளிலும் துறவிகளும் தொண்டர்களும் ஈடுபடுகிறார்கள்.

இவற்றோடு ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளில் கிளைகள் அமைத்து அறிஞர்களிடையிலும், பொதுமக்கள் மத்தியிலும் சொற்பொழிவு மற்றும் ஆன்மீக வகுப்புகள் நிகழ்த்துதல், புத்தகங்கள் மற்றும் மாத இதழ்கள் வெளியிடுதல் போன்ற பணிகள் மூலமும் ஆன்மீகத்தைப் பரப்புகிறார்கள்.

**ராமகிருஷ்ண மிஷனின் கிளைகள் :**

ராமகிருஷ்ண மிஷனின் தலைமையகம் வங்காளத்தில், கல்கத்தாவிலிருந்து நான்கு மைல் தொலைவில் கங்கைக் கரையில் பேலூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. தலைமையகத்தையும் 26 கிளை நிலையங்களையும் *(Sub Centres)* தவிர இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமாக மொத்தம் 135 கிளைகள் உள்ளன.

**இந்தியாவில் :**

அசாம் – 3, அந்தமான் தீவுகள் – 1, அருணாசலப்பிரதேசம் – 3, ஆந்திரப்பிரதேசம் – 3, உத்திரப்பிரதேசம் – 11, ஒரிசா – 3, கர்நாடகம் – 4, குஜராத் – 3, கேரளா – 7, டில்லி – 1, தமிழ்நாடு – 12, திரிபுரா – 1, பஞ்சாப் –1, பீகார் – 7, மகராஷ்டிரம் – 3, மத்தியப்பிரதேசம் – 2, மேகாலயா – 2, மேற்கு வங்காளம் – 32, ராஜஸ்தான் –2.

**வெளிநாடுகளில்**

அமெரிக்கா – 12, அர்ஜன்டைனா – 1, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து, நெதர்லான்ட்ஸ், பிரான்ஸ், பிஜி தீவுகள், மொரீஷியஸ், ரஷ்யா, இலங்கை, ஜப்பான் போன்ற நாடுகளில் ஒவ்வொரு நிலையங்களும் உள்ளன. வங்காளதேசம் – 10.

**பணிகள் :**

## 1. ஆன்மீகம்

ஆன்மீகம், கலை, கலாச்சார, பண்பாட்டுக் கருத்துக்களைப் பரப்புவது ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் தலையாயப் பணியாகும்.

பூஜை, விழாக்கள், பொதுக்கூட்டங்கள், வகுப்புகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றின் மூலம் ஜாதி, மத, இன வேறுபாடின்றி மக்கள் கலந்துறவாட ராமகிருஷ்ண மிஷன் கிளைகள் வழி வகுக்கின்றன.

## 2. நூல் வெளியீடு

ஆன்மீக, சமய மற்றும் பண்பாட்டு நூல்களை வெளியிடுவதன் மூலம் ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன் சிறப்பான சேவை செய்து வருகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம், வங்காளம், மராத்தி, கன்னடம், மலையாளம், குஜராத்தி மற்றும் சம்ஸ்கிருத மொழிகளில் நூல்கள் வெளியிடப்படுகின்றன.

இவற்றுள் அனேகமாக எல்லா மொழிகளிலுமே பத்திரிகைகள் வெளியாகின்றன.

### மிஷனில் வெளியிடப்படும் மாதாந்தரப் பத்திரிகைகளின் விபரம்

| வ.எண். | பெயர் | மொழி |
|---|---|---|
| 1. | வேதாந்த கேசரி | ஆங்கிலம் |
| 2. | பிரபுத்த பாரதம் | ஆங்கிலம் |
| 3. | ராமகிருஷ்ண விஜயம் | தமிழ் |
| 4. | ராமகிருஷ்ண பிரபா | தெலுங்கு |
| 5. | பிரபுத்த கேரளம் | மலையாளம் |
| 6. | விவேக ஜோதி | இந்தி |
| 7. | ஜீவன் விகாஸ் | மராத்தி |
| 8. | உத்போதன் | வங்காளம் |
| 9. | ராமகிருஷ்ண ஜோதி | குஜராத்தி |
| 10. | வேதாந்தா | ஆங்கிலம் |
| 11. | ராமகிருஷ்ண மிஷன் கலாச்சார நிலைய செய்தி | ஆங்கிலம் |

## 3. மருத்துவம்

**(1995–96 ஆம் ஆண்டுக்குரிய விபரங்கள்)**

மருத்துவமனைகள் (Hospitals) - **14.**

சிகிச்சை பெற்றோர் :

தங்கிச் சிகிச்சை பெற்றோர் (Indoor Patient) - **75,284**

வெளிநோயாளர் (Outdoor Patient) **-22,80,469**

மருந்தகங்கள் (Dispensaries) – **95**

சிகிச்சை பெற்றோர் : **27,73,201**

நடமாடும் மருத்துவமனைகள் (Mobile Dispensaries) - 28

சிகிச்சை பெற்றோர் : **7, 66, 678**

**17** கண் சிகிச்சை முகாம்கள்

**1055** நோயாளர்கட்கு கண்படல (Cotaract) சிகிச்சை அளிக்கப்பட்டது.

பற்சிகிச்சை முகாம்கள்

**2300** நோயாளிகள் பற்சிகிச்சை பெற்றனர்.

தாதிகள் பயிற்சி மையங்கள்

**408** பேர்களுக்கு தாதிகள் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆண்களுக்காக இரண்டு முதியோர் இல்லங்களும் பெண்களுக்கென ஒரு முதியோர் இல்லமும் நிர்வகிக்கப்படுகின்றன. இவற்றில் முறையே **68** ஆண்களும் **36** பெண்களும் பராமரிக்கப்படுகின்றனர்.

காச நோயாளர்கட்கு இரண்டு கிளினிக்குகள் (Clinic) மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.

இரண்டு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல பிரிவுகள் சிறந்த முறையில் செயற்படுகின்றன. மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் ஒரு பிரிவு செயற்படுகிறது.

மேற்கூறப்பட்ட பணிகளுக்காக மிஷன் கடந்த ஆண்டு ரூ. **14.97** கோடி செலவிட்டது.

## 4. கல்வி

| வ.எண். | கல்வி நிறுவனம் | எண்ணிக்கை | மாணவர் தொகை |
|---|---|---|---|
| 1. | பட்டப் பயிற்சிக் கல்லூரிகள் | 5 | 5,272 |
| 2. | சம்ஸ்கிருத கல்லூரி | 1 | 29 |
| 3. | ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் | 5 | 687 |
| 4. | இடைநிலைப் பயிற்சி நிறுவனங்கள் | 5 | 152 |
| 5. | மேல்நிலைப் பாடசாலை | 13 | 15,811 |
| 6. | இடைநிலைப் பாடசாலை | 32 | 22,545 |
| 7. | சம்ஸ்கிருதப் பாடசாலை | 2 | 375 |
| 8. | பலநிலைப் பாடசாலை | 133 | 28,795 |
| 9. | மாணவர் விடுதிகள் | 97 | 10,222 |
| 10. | அனாதை இல்லங்கள் | 5 | 851 |
| 11. | விவசாயப் பயிற்சி நிலையங்கள் | 2 | 2,228 |
| 12. | பன்மொழிப் பயிற்றுப்பள்ளிகள் (Schools of Languages) | 2 | 7,434 |
| 13. | கணினிப் பயிற்சி நிலையம் | 1 | 550 |
| 14. | பார்வையற்றோர் பாடசாலை | 1 | 160 |
| 15. | நூலகர் பயிற்சி நிலையம் | 1 | 30 |
| 16. | கிராம மேம்பாட்டு பயிற்சிநிலையம் | 4 | 11,883 |
| 17. | முறைசாரா கல்வி நிலையம் | 2,639 | 57,283 |
| 18. | பாலிடெக்னிக் கல்லூரிகள் (Polytechnic) | 4 | 3,570 |
| 19. | இளம் பொறியியல்–தொழிற்கல்வி கல்லூரிகள் | 7 | 689 |
| | தொகை | 2,959 | 1,68,566 |

மேற்கூறப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கான இந்த ஆண்டுச் செலவு ரூ. 40.99 கோடி.

மிஷனால் நடத்தப்படுகின்ற கல்விநிலையங்களில் கல்விகற்கும் மாணவர்கள் கல்வி, விளையாட்டு, ஓவியம், சங்கீதம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல வெற்றிகளைக் குவித்துள்ளார்கள். இக்கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் பலர் "சிறந்த ஆசிரியர்" களுக்கான தேசிய மற்றும் மாநில மட்டத்திலும் பரிசுகளைப் பெற்றுள்ளார்கள்.

## சிறுவர் மற்றும் இளைஞர்கட்கான பணிகள்

மிஷனின் சில கிளைகளினால் வாலிபர் சங்கம், பாலர் சங்கம் போன்ற அமைப்புகள் இளைஞர்கட்கென்றே இயங்கி வருகிறது. ஆக்கப்பூர்வமான பொழுதுபோக்கு, கலை, இலக்கியம், பாடல்கள், பாராயணம் போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும் அவ்வப்போது சமயக்கருத்துக்கள், விளையாட்டு, அறிவியல், ஆரோக்கியம் பற்றியும் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. மிஷன் நடத்தும் கல்வி நிறுவனங்கள், மற்றும் பயிற்சி நிலையங்களில் 1995–96 ஆம் ஆண்டு 1,08,228 மாணவர்கள் கல்வியும் ஏனைய பயிற்சியும் பெற்றார்கள்.

## பெண்களுக்கான பணிகள் :

மகப்பேறு இல்லங்கள், தாய்சேய் நல பராமரிப்பு மையங்கள், முதியோர் இல்லம், மாணவிகளுக்கான ஆரம்ப, மேனிலைப் பாடசாலைகள், தாதிகள் பயிற்சி நிலையங்கள், சுயதொழில் வாய்ப்பு பயிற்சி நிலையங்கள் முதலியன பெண்கள் மேம்பாட்டுக்காக இயங்கி வருகின்றன. 1995–96 கணிப்பின் அடிப்படையில் ராமகிருஷ்ண மிஷன் நடத்தும் பெண்களுக்கான பாடசாலை மற்றும் பயிற்சி நிறுவனங்களில் 60, 338 மாணவிகள் கல்வியும் ஏனைய பயிற்சியும் பெறுகிறார்கள்.

## கிராமப்புற அபிவிருத்தித் திட்டம் &
## மலைவாழ் பழங்குடியினருக்குச் செய்யும் பணிகள் :

கிராம மற்றும் பழங்குடியினருக்குச் செய்யும் பணிகளைப் பின்வரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. பொதுவான சேவை, 2. விவசாயம், 3. கல்வி, மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டம், 4. மருத்துவம் போன்ற பல பிரிவுகள் மூலம் நிறைய பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

### 1. பொதுப்பணி

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குச் சுற்றுப்புற சுகாதாரம் தூய்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், குடிநீர் வசதியற்ற இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல், வீடுகள் அமைத்துக் கொடுத்தல், மலசல கூடங்கள் அமைத்தல் முதலியன. இது போன்ற பணிகள்மூலம் கிராமிய மற்றும் மலைவாழ் பழங்குடியினரின் செம்மையான

வாழ்வுக்கு அடிகோலுதலாகும். சமய மற்றும் அறநெறி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கலை நிகழ்ச்சிகளும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகின்றன.

## 2. விவசாயம்

விவசாயிகளுக்கு இலவச மண்பரிசோதனை செய்தல், மற்றும் அதிக விளைச்சலை தரக்கூடிய முறைகளைக் கற்றுக்கொடுத்தல். விவசாய உபகரணங்களும் மற்றும் பண உதவியும் செய்யப்படுகிறது.

## 3. கல்வி மற்றும் சுயவேலை வாய்ப்புத் திட்டம்

சேரிவாழ் குழந்தைகளுக்கென்று இலவச பாடசாலைகள் நடைபெறுகின்றன. அக்குழந்தைகளுக்குத் தேவையான பாட நூல்கள் உணவு, உடை, உறையுள் போன்றனவும் அளிக்கப்படுகின்றன. முதியோர் கல்வி மற்றும் முறைசாராக் கல்வியும் வழங்கப்படுகிறது. இரவுப் பள்ளிகள் மூலம் தொழிலாளர்களும் பணிபுரியும் சிறுவர்களும் பெரும் பயன் அடைகிறார்கள். தச்சு வேலை, தேனீ வளர்த்தல், பால்பண்ணை, கோழி வளர்ப்பு, நெசவுத் தொழில், ஊதுவத்தி செய்தல் போன்ற பயிற்சிகள் மூலம் கிராமிய மற்றும் பழங்குடி மக்கள் சுயவேலை வாய்ப்பு பெற சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

## 4. மருத்துவம்

மருத்துவ வசதிகள் கிடையாத கிராமங்கள் மற்றும் மலைப்பிரதேசங்களில் நடமாடும் மருத்துவமனைகள் மூலம் இலவச மருந்து மாத்திரைகள், உடல் பரிசோதனை, கண் அறுவை சிகிச்சை, பற்சிகிச்சை முதலியன செய்யப்படுகின்றன. பெருமளவில் பாமர மக்களும், பழங்குடியினரும் இப்பணிகள் மூலம் பயனடைகிறார்கள். சுகாதார அறிவுறுத்தல்கள் மூலம் நோய்த்தடுப்பு மற்றும் ஆரோக்கிய வாழ்வுபற்றி விளக்கமும் கொடுக்கப்படுகிறது.

### நிவாரணம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் :

இப்பணியில் மிஷனின் தலைமைப் பீடமும் ஏனைய கிளை நிலையங்களும் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. புயல் நிவாரணம், வறட்சி நிவாரணம், தீ சேதங்கள், வெள்ள நிவாரணம், குளிர்கால நிவாரணம் போன்ற பணிகளைக் கடந்த ஆண்டு மிஷன் பெருமளவில் ஆற்றியிருக்கிறது. இப்பணிகளுக்காக ரூ. 1.22 கோடி செலவிடப்பட்டுள்ளது.

அரிசி, பயறு வகைகள், கோதுமை, எண்ணெய், சர்க்கரை, குழந்தைகளுக்கான பால்மா, துணிமணிகள், குளிர்கால கம்பளி ஆடைகள், மருந்துகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள், முதலியன பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. மொத்தம்

ரூ. 38.75 லட்சம் பெறுமதியான பொருட்கள் சென்ற வருடம் வழங்கப்பட்டன. அண்மையில் மஹாராஷ்டிர மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மூன்று கிராமங்கள் முழுமையாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டன. வீடுகள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், குழந்தைகள் பூங்கா, பாதைகள் அனைத்தும் அடங்கிய கிராமமாக மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

## ஆன்மீகம் மற்றும் கலாச்சாரப் பணிகள் :

சனாதன தர்மத்தின் உயர்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதிலும் மிஷன் முக்கிய கவனம் எடுத்துக் கொள்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை சாரதாதேவியார் மற்றும் சுவாமி விவேகானந்தரின் உலகம் தழுவிய சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பது மிஷனின் தலையாய பணியாகும்.

ராமகிருஷ்ண மிஷனில் ஏறக்குறைய 10 நூல் வெளியீட்டகங்கள் இயங்குகின்றன. மிஷன் வெளியிடும் நூல்கள் அனைத்தும் உலகெங்கிலுமுள்ள மிஷன் கிளைகள் மூலம் மக்களைச் சென்றடைகின்றன. பெரும் எண்ணிக்கையில் புத்தகங்களைக் கொண்ட 180 வாசகசாலைகளை மிஷன் நடத்துகிறது. பன்னிரெண்டு மாதாந்தரப் பத்திரிகைகள் பல மொழிகளில் வெளியாகின்றன.

அனைத்து நிலையங்களிலும் துறவிகளால் வாராந்தர ஆன்மீக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவ்வப்போது பக்தர்களுக்கான அந்தர் யோகங்கள் (Retreat), இளைஞர், மாணவர்களுக்கான மாநாடுகள், கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, கவிதை, நாடகம் போன்ற துறைகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மிஷனின் கிளை நிலையங்களில் அமைந்துள்ள ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் மக்கள் இன, மத, ஜாதி வித்தியாசம் இன்றி கலந்து மகிழ்கிறார்கள்." எத்தனை மதங்களோ அத்தனை வழிகள்" என்பது ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசம். எந்த வித்தியாசமுமின்றி அனைவரையும் ஒன்றாக இணைக்கும் சக்தியாக இந்நிறுவனம் செயல்படுகிறது. "ராமகிருஷ்ண மடத்திலிருந்து நற்பண்புகள் மிக்கோர் பலர் புறப்பட்டு, உலகம் முழுவதையுமே ஆன்மீகப் பெருவெள்ளத்தால் நிரப்புவார்கள். இந்த ஆன்மீகப் பேரெழுச்சியைத் தொடர்ந்து பல துறைகளிலும் முன்னேற்றம் தோன்றும்" என்ற சுவாமி விவேகானந்தரின் தீர்க்கதரிசன வார்த்தைகள் மெதுவாக ஆனால் உறுதியுடன் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

## வெளிநாட்டுப் பணிகள் :

கீழைநாட்டுப் பணிகளிலிருந்து மேலை நாட்டுப் பணிகள் வேறுபட்டவை. அங்கு மருத்துவமனைகள் நடத்துவதோ, பாடசாலைகள் நிர்வகிப்பதோ, நிவாரணப்பணிகள் செய்வதோ அவசியமில்லை. மேலை நாட்டவர்கள் இந்திய நாட்டு சமயத் தத்துவங்கள், தியானம், யோகம் முதலியவற்றில் பெரும் நாட்டம் கொண்டுள்ளார்கள்.


வேகமான நவீன வாழ்வின் தீய விளைவுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மேலைநாட்டவர்களுக்கு வேதாந்தக் கருத்துக்கள் ஆத்ம திருப்தியைக் கொடுக்கின்றன. நவீன விஞ்ஞான உண்மைகளோடு பழமையான வேதாந்த சிந்தனைகள் இணைந்து போவதால் மேலை நாட்டு அறிஞர்கள் பலர் இதன்பால் கவரப்பட்டுள்ளார்கள். பல பல்கலைக்கழகங்களில் வேதாந்தத்துறை முக்கிய இடத்தைப் பெறுகிறது.

மேலை நாடுகளிலுள்ள ராமகிருஷ்ண இயக்கங்கள் அந்நாட்டு மக்களின் தேவைக்கேற்ப பணிபுரிகின்றன. வகுப்புகள், சொற்பொழிவுகள், சர்வமத உரையாடல்கள், தனிப்பட்ட பேட்டிகள் மற்றும் வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் அங்கே துறவிகள் பணியாற்றுகிறார்கள். சில கிறிஸ்துவ தேவாலயங்கள், பல்கலைக்கழகங்கள், மற்றும் வேறு சமய நிறுவனங்கள் ராமகிருஷ்ண சங்கத் துறவிகளை அழைத்து சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். நூல் நிலையங்கள், ஆன்மீகப் புத்தக விற்பனை நிலையங்கள் மூலமாகவும் சிறந்த பணியாற்றுகிறார்கள். அவ்வப்போது கருத்தரங்குகள், அந்தர்யோகம், வாராந்தரக் கூட்டுவழிபாடு போன்ற நிகழ்வுகளில் பெரும் தொகையானோர் ஆர்வத்துடன் கலந்து கொள்கிறார்கள். ஒரு சில மேனாட்டவர்களும் ராமகிருஷ்ண மிஷனில் துறவிகளாகவும் சந்நியாசினிகளாகவும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்துள்ளார்கள்.

தொகுப்பு : சுவாமி அஜராத்மானந்தா

ஆதாரம் : (The General Report of Ramakrishna Math & Ramakrishna Mission from April 1995 to March 1996).

> *சிவபெருமானை சிவலிங்கத்தில் மட்டுமல்லாமல் எல்லா இடங்களிலும் காணும்போதுதான் அவரிடம் நீ கொண்ட பக்தி முழுமை பெறுகிறது. ஹரியை ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிலும் யார் காண்கிறானோ அவனே ஹரியின் உண்மை பக்தன். நீ உண்மையான சிவ பக்தனாக இருந்தால் சிவனை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவரிலும் காண வேண்டும். வழிபாடுகள் எந்தப் பெயரில் இருந்தாலும் சரி, எந்த விதத்தில் இருந்தாலும் சரி, அவை அனைத்தும் ஒரே கடவுளுக்குச் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் உணர வேண்டும்.*
>
> \- சுவாமி விவேகானந்தர்
>
> கொழும்பு பிளோரல் மண்டபத்தில் 1897, ஜனவரி 15-ஆம் நாள் பேசியது.




**வெளிநாடுகளில் ராமகிருஷ்ண மிஷனின் மையங்கள் உள்ள இடங்கள்**

**அர்ஜென்டைனா (தென் அமெரிக்கா) :** பியோனஸ் ஏரிஸ்

**வங்காளதேசம் :** பாகர்ஹாட், பாலியட்டி, பரிசல், டாக்கா, தினாஜ்பூர், பரித்பூர், ஹபிகன்ஞ்ச் சில்லேட், மைமன்சிங், நாராயண்கஞ்ச்

**இங்கிலாந்து :** போர்ன் எண்ட்

**பிஜி :** நாடி

**பிரான்சு :** கிரெட்ஸ்

**மொரிசியஸ் :** வாகோஸ்

**சிங்கப்பூர் :** சிங்கப்பூர்

**ஸ்ரீலங்கா :** கொழும்பு, மட்டகளப்பு

**சுவிசர்லாந்து :** ஜெனீவா

**ஜப்பான் :** கனகவ–கென்

**கானடா :** டொரண்டோ

**நெதர்லாந்து :** ஆம்ஸ்டெல்வீன்


**ருஷ்யா :** மாஸ்கோ

**அமெரிக்கா ஐக்கிய நாடுகள் :** பெர்க்லி, பாஸ்டன், சிகாகோ, ஹாலிவுட், நியூயார்க், போர்ட்லாந்து, ப்ராவிடன்ஸ், சேக்ரமெண்டோ, சான்பிரான்சிஸ்கோ, சியேட்டல், செயின்ட் லூயிஸ்.

## கோயில்கள் மூலம் ஆன்மீகப் பணி



பேலூர் மடம்




ராஜ்கோட்




கோயம்புத்தூர்



சேலம்



கங்கல்



செங்கல்பட்டு

கொழும்பு தமிழ்ச் சங்கம்




பூஜை

25745




ஹோமம்


# ஆன்மிகம், கலாச்சாரம், சமயபிரச்சாரம்



இளைஞர் மாநாட்டில் பிரார்த்தனை




இளைஞர் மாநாடு கலந்துரையாடல்



குழந்தைகளுக்கு வகுப்பு




இளைஞர் மாநாடு கலை நிகழ்ச்சிகள்



பிரசாதம் வழங்கல்



இளைஞர் மாநாடு இடைவேளை



பஜனை



அகில இந்திய இளைஞர் மாநாடு கலை நிகழ்ச்சிகள்

# மருத்துவப் பணிகள்



பற்சிகிச்சை




காது சிகிச்சை



ENT பகுதியில் பரிசோதனை



குழந்தைகளுக்கு மருத்துவம்




எக்ஸ்ரே



குழந்தைக்கு சிகிச்சை



ராமகிருஷ்ண மிஷன் சேவா பிரதிஸ்தான்
மருத்துவமனையின் கம்பீரமான தோற்றம்



நோயால் பாதிக்கப்பட்டு புதிதாகப்
பிறந்த பச்சிளங் குழந்தைகளுக்கு வைத்தியம்




கண் அறுவை சிகிச்சை



குழந்தைகளுக்கு நோய் தடுப்பு ஊசி போடல்



சேவா பிரதிஸ்த்தானின் தாதிகள் பயிற்சி நிலையம்



கிராமப்புறங்களில் இலவச கண் சிகிச்சை முகாம்



கிராமத்துக் குழந்தைகளுக்கு பயிற்சி முகாம்


# கல்வி கலாசாரப் பணிகள்




கோயம்புத்தூர் வித்யாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபம்




மாணவர்களின் கலை நிகழ்ச்சி



பெண்கள் உயர்தர பாடசாலையில் வகுப்புகள் –
தியாகராஜா நகர்




சாரதா சேவாஸ்ரமம் ஜெயராம்பாடி – மாணவர் உடற்பயிற்சி




சாரதா வித்யாலயம் பெண்கள் விடுதி, சென்னை



பெண்களுக்கு தையல் (வகுப்பு) பயிற்சி நிலையம்



மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டி



மாணவர்கள் பிரார்த்தனையில்



ராமகிருஷ்ண மிஷன் வித்யாசாலை – மைசூர்
நீச்சல் குளத்தில் பயிற்சி பெறும் மாணவர்கள்



ராமகிருஷ்ணா மிஷன் – குருகுலம் திருச்சூர்
மாணவர்களின் உடற்பயிற்சி



மாணவர் தொழிற்பயிற்சி நிலையம் ஜாம்ஷட்பூர் – பிஹார்



ராமகிருஷ்ண மிஷன் சகோதரி நிவேதிதா பெண்கள் உயர்தர
பாடசாலை, கல்கத்தா ; மாணவிகளின் உடற்பயிற்சி



ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் – கான்பூர் 'மாணவர் அணிவகுப்பு'



வேலையற்ற படித்த பெண்களுக்கு தட்டச்சுப் பயிற்சி நிலையம்

# நிவாரணப் பணிகள்



காஞ்சிபுரம் ஆஸ்ரமத்தில் ஏழைக்குழந்தைகளுக்கு
ஆடைகள் வழங்குதல்



புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு
வீடுகள் கட்டி வழங்குதல்



சேலம் ஆஸ்ரமத்தில் தினமும் அபலிவுள்ள
ஏழைக்குழந்தைகளுக்கு சிற்றுண்டி வழங்கப்படுகிறது




வங்காள தேசத்தில் புயலில் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு வீட்டு உபகரணங்கள் வழங்கல்



வெள்ள நிவாரணப் பணி; உணவு வழங்கல்




மன்னார்



ஆந்திரப்பிரதேசத்தில் புயல் பாதுகாப்புப் புகலிடம்



மகாராஷ்ட்ர மாநிலத்தில் நில நடுக்கத்தால் அழிந்த கிராமத்தில் புதிய விவேகானந்த வித்யாலயா



வெள்ளத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கு புதிய வீடுகள் வழங்கல்



வங்காளத்தில் வெள்ளநிவாரணப் பணி; பாத்திரங்கள், உடைகள், உணவுப் பொருட்கள் வழங்கல்



மகாராஷ்ட்ர மாநிலத்தில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் புனர் நிர்மாணம்





கல்கத்தா கலவர நிவாரணம்


# பழங்குடியினர் மற்றும் கிராம முன்னேற்றப் பணிகள்




பழங்குடி பெண்களுக்கு பயிற்சி வகுப்புகள்




மருத்துவ வசதியற்ற கிராமங்களில் மருத்துவப்பணி



பழங்குடியினரின் பாரம்பரிய வாத்தியக் கருவிகள்



பழங்குடியினருடன் உரையாடல்




மர நிழலில் நடமாடும் மருத்துவ பரிசோதனை




கிராமத்து மக்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு



கிராமப்புறத்தில் மருத்துவசேவை

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



கிராமத்து மக்களுக்கு சூரிய ஒளி
மின்சாரத்திட்டம், நரேந்திரபூர்



கிராமத்து மாணவர்கட்கு நோட்டுப் புத்தகம்
மற்றும் சீருடைகள் வழங்கும் விழா

# விழியற்றோருக்கு வழிகாட்டல்

கோயம்புத்தூர் – ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தினால் நடத்தப்படும் பார்வையற்றோர் பயிற்சி நிலையம்



நோட்டு புத்தகங்கள் பிரிவில்



ஊதுபத்தி தயாரித்தல்



நீலம் தயாரித்தல்



அப்பளம் தயாரித்தல்



நாற்காலி பின்னுதல்


# விழியற்றோருக்கு வழிகாட்டல்


மேற்கு வங்காளம் நரேந்திரபூர்
ராமகிருஷ்ண மிஷன்
வித்யாலயத்தினால் நடத்தப்படும்
பார்வையற்றோர் பயிற்சி நிலையம்













# மேலைநாடுகளில் ராமகிருஷ்ண மிஷன் பணியாற்றும் மையங்கள்



நியூயார்க்



நியூயார்க்



சாரதா கன்யாஸ்திரிகள் மடம்
(சாந்தா பார்பரா, அமெரிக்கா)



லண்டன் ஆலயம்



சியாட்டெல், அமெரிக்கா



டோரன்டோ




பிரேசில்



சான் பிரான்சிஸ்கோ




ராமகிருஷ்ண மிஷன், சிங்கப்பூர்



சிகாகோ




ராமகிருஷ்ண மிஷன் பாலர் பாடசாலை, மொரிஷியஸ்



பார்க்கிளி, அமெரிக்கா



லண்டன்

# இலங்கையில் சுவாமி விவேகானந்தர்

அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இந்து மதத்தின் உயர்ந்த கருத்துகளால் சுவாமி விவேகானந்தர் மக்கள் மனதை வென்றார். அவர் வெற்றி வீரராக இந்தியா திரும்பியபோது அவரை முதன்முதலாக வரவேற்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்குக் கிடைத்தது.

எந்த ஒரு மன்னருக்கோ, அரசியல்வாதிக்கோ அதுவரையில் அளிக்கப்படாத மகத்தான வரவேற்பை இலங்கை வாழ் இந்துக்கள் துறவியாகிய சுவாமி விவேகானந்தருக்கு அளித்தார்கள்! 1897-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் தேதி மாலை 6 மணிக்கு சுவாமி விவேகானந்தர் தமது மேலைநாட்டுச் சீடர்களுடன் கொழும்பு துறைமுகம் வந்தடைந்தார்.

அப்போது இலங்கை சட்டமன்ற உறுப்பினர் பி. குமாரசாமி, பி. அருணாசலம் ஆகியோரின் தலைமையில் வரவேற்புக் குழுவினர் சுவாமிஜியை மலர்மாலை அணிவித்து துறைமுகத்தில் வரவேற்றார்கள்.

பின்னர் இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியில் சுவாமிஜி அமர்ந்திருக்க, அதைத் தொடர்ந்து ஏனைய வாகனங்களும் ஆயிரக்கணக்கான மக்களும் பின்தொடர வாகன ஊர்வலம் தொடங்கியது. அந்த ஊர்வலம் இறுதியில் பாண்ஸ் வீதியில் அமைக்கப்பட்டிருந்த முதலாவது வரவேற்புப் பந்தலை அடைந்தது. அங்கு குதிரை வண்டியிலிருந்து இறங்கிய சுவாமிஜியைப் பூர்ண கும்பம் வைத்து, மேளதாளத்துடன் சம்பிரதாய பூர்வமாக மக்கள் வரவேற்றார்கள்.

மண்டபத்திற்குள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையை சுவாமிஜி அடைந்ததும் அங்கு ஒரு செயற்கைத் தாமரை தனது இதழ்களை விரித்துக் கொண்டது. அதிலிருந்து ஒரு பறவை சிறகடித்துப் பறந்தது. இந்த நிகழ்ச்சி, விவேகானந்தரின் வருகையில் இவ்வளவு காலமும் கூம்பியிருந்த சனாதன தர்மம் மறுமலர்ச்சி பெற்றதுடன், மறைந்திருந்த அதன் பெருமை உலக அரங்கில் சிறகடித்துப் பறக்கிறது என்பதற்கு அடையாளமாக அமைந்திருந்தது.

அங்கு கூடியிருந்த மக்களின் ஆரவாரம் ஒருவாறு அடங்கியதும் தேவார இசையுடன் வரவேற்பு விழா ஆரம்பமாயிற்று. சுவாமி ஜிக்கென்றே இயற்றப்பட்ட சம்ஸ்கிருத ஸ்துதி ஒன்றும் இசைக்கப்பட்டது. கொழும்புவாழ் இந்துப் பெருமக்கள் சார்பாக சுவாமி விவேகானந்தருக்கு ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

வரவேற்புரையை ஏற்றுக்கொண்ட சுவாமிஜி அதிரும் கரவொலிக்கிடையே எழுந்து, எழுச்சிமிக்க ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

மறுநாள் 16-ஆம் தேதி நகரிலுள்ள ஒரு மண்டபத்தில் 'இந்திய புண்ணிய பூமி' என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார்.

17-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரையில் தம்மைக் காண வந்த அன்பர்களோடு சுவாமிஜி உரையாடினார்.

அன்று மாலை கொச்சிக்கடை பொன்னம்பலமாணேஸ்வர் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். சுவாமிஜி ஆலயத்திலிருந்து தமது இருப்பிடம் திரும்பியபோது அங்கு பலர் அவருக்காகக் காத்திருந்தனர். அவர்களுடன் அவர் இரவு இரண்டு மணி வரை உரையாடினார்.

18-ஆம் தேதி செல்லையா என்பவரின் வீட்டிற்கு சிவாமிஜி விருந்தினராகச் சென்றார். அந்த வீட்டில் மாட்டப்பட்டிருந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தை கண்ட சுவாமிஜி எழுந்து தமது அஞ்சலியைச் செலுத்தினார். அங்கு கூடியிருந்தவர்களுக்கு சுவாமிஜி விபூதிப் பிரசாதம் வழங்கினார். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அன்று சில பஜனைப் பாடல்களுடன் அந்த இல்லத்தின் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. அன்று மாலை சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்பதற்காக கொழும்பு பொதுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. அங்கு சுவாமிஜி 'வேதாந்தத் தத்துவம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஜனவரி 19-ஆம் தேதி ஒரு விசேஷ ரயில் மூலம் சுவாமிஜி கண்டிக்குப் புறப்பட்டார். அப்போது பி.அருணாசலம் என்பவரும் சுவாமிஜியுடன் சென்றார். அங்கும் மக்கள் சுவாமிஜியை ஊர்வலமாக அழைத்துச் சென்று மரியாதை செலுத்தினார்கள்.

கண்டிவாழ் இந்து மக்களின் சார்பாக தில்லையம்பலம் முகாந்திரம் என்பவர் சுவாமிஜிக்கு ஒரு வரவேற்புரையை வாசித்தளித்தார். அவர்களுடைய வரவேற்புக்குப் பதிலளித்து சுவாமிஜி ஆசியுரை வழங்கினார்.

சுவாமிஜியும் அவரது குழுவினரும் அன்று மாலையே மாத்தளையைச் சென்றடைந்தனர்.

மறுநாள் காலை 10.30 மணியளவில் அவர்கள் அனுராதபுரத்தை அடைந்தனர். அன்று பிரசித்தி பெற்ற போதி மரத்தடியில் 'வழிபாடு' என்னும் தலைப்பில் சுவாமிஜி ஒரு சொற்பொழிவாற்றினார். அங்கு அவருடைய சொற்பொழிவு உடனுக்குடன் தமிழிலும், சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது.

மறுநாள்காலை சுவாமிஜி யாழ்ப்பாணம் செல்லும் வழியில் வவுனியா மக்கள் அளித்த வரவேற்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டிவிட்டு அவர் தமது பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

யாழ்ப்பாணத்தின் தென் எல்லையாகிய ஆனையிறவில் மக்கள் பெருந்திரளாக வந்து சுவாமிஜியை வரவேற்கத் தொடங்கினார்கள். யாழ்நகரிலிருந்து 12 மைல்களுக்கு முன்னாலேயே யாழ்நகர் பிரமுகர்கள் சுவாமிஜியைச் சம்பிரதாய பூர்வமாக வரவேற்று குதிரை வண்டியில் ஊர்வலமாக யாழ்நகரை நோக்கி அழைத்து சென்றனர்.

சுவாமி விவேகானந்தருக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு விழாவில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் ஆகியோர் மதவேறுபாடின்றி கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

மறுநாள் காலை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சுவாமிஜி 'வேதாந்தம்' என்ற தலைப்பில் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். இலங்கையின் பல பாகங்களிலிருந்து சுவாமிஜிக்குப் பல அழைப்புகள் வந்து குவிந்தன. காலம் போதாமையால் அந்த அழைப்புகளை எல்லாம் சுவாமிஜியால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இவ்விதம் இலங்கையில் 11 நாட்கள் தங்கியிருந்த சுவாமிஜி இலங்கை அன்பர்களிடமிருந்து பிரியா விடைபெற்று தமிழகம் நோக்கிப் பயணமானார்.

# இலங்கையில்
# ராமகிருஷ்ண மிஷன் பணிகள்

## ராமகிருஷ்ண மிஷன்
## கொழும்பு






ஆலயம்



கால்கோள் விழாவிற்கான சமய சடங்குகள்



ஆசிரமத்திற்கு அடிக்கல் நாட்டுதல்



விருந்தினர் விடுதி



ஞாயிறு சமய பாடசாலை மாணவிகளின் வில்லுப்பாட்டு



ஞாயிறு சமய பாடசாலை
மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்



இந்தியாவிலிருந்து
மூத்த துறவியரின் வருகை




சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா மண்டபம்




வாசகசாலை



இந்தியாவிலிருந்து
முத்த துறவியரின் வருகை





# ராமகிருஷ்ண மிஷன் - கொழும்பு

## சில பரிமாணங்கள்

சுவாமி விவேகானந்தர் 1897-ஆம் ஆண்டு ராமகிருஷ்ண மிஷனை நிறுவினார். தனி மனித ஆன்ம விடுதலையும் மனித குலத்தின் மேம்பாட்டுக்காக உழைப்பதும் இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். சேவையும் தியாகமும் இதன் அடிப்படையாகும். இன்று ராமகிருஷ்ண மிஷன் 136 கிளைகள் மூலம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றி வருகிறது.

ராமகிருஷ்ண மிஷனின் பழமையான கிளைகளுள் இலங்கைக் கிளையும் ஒன்றாகும். இந்தியாவின் சனாதனமான ஆன்மீகக் கருத்துக்களால் மேற்குலகை வெற்றிக்கொண்டு, நவயுக நாயகராக சுவாமி விவேகானந்தர் 1897-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி கொழும்புத் துறைமுகத்தை அடைந்தார். கொழும்புவாழ் இந்துப் பெருமக்களால் அவருக்கு வரலாறு காணாத மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயமானது இந்துக்களிடையே பெரும் சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அவரது சிந்தனைகள் சமயத்துறையிலே புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தியது. அவருடைய வருகையானது இந்த நாட்டில் ராமகிருஷ்ண மிஷன் தோன்றுவதற்கு வித்தூன்றியது. ஆர்வம் கொண்ட அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர் தமது சகோதர சீடர்களில் ஒருவராகிய சுவாமி சிவானந்தரை இலங்கைப் பணிக்காக அனுப்பிவைத்தார். சுவாமி விவேகானந்தர் கொடுத்த அறிமுகக் கடிதத்தோடு சுவாமி சிவானந்தர் 1897- ஆம் ஆண்டு ஜூலை மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு வருகைதந்தார்.

அந்த அறிமுகக் கடிதம் பின்வருமாறு:

Almora,<br>30th June, 1897

To

T. Sokanathan, Esqr.

My dear Friend,

The bearer of this note, Swami Shivananda, is sent to Ceylon as promised by me during my sojourn. He is quite fit for the work entrusted to his care, of course with your kind help.

I hope you will introduce him to other Ceylon Friends.

Yours ever in the Lord<br>Vivekananda.

சுவாமி சிவானந்தர் இலங்கையில் 1898-ஆம் ஆண்டு முற்பகுதி வரை தங்கியிருந்து ஆன்மீக வகுப்புகள், உரையாடல்கள், பேட்டிகள் ஆகியவற்றின் மூலமும்

எல்லாவற்றுக்கும் மேலாகத் தம்முடைய ஆன்ம சக்தியால் சுவாமி விவேகானந்தரின் வருகையினால் ஏற்பட்ட ஆர்வக் கனலை மேலும் தூண்டினார். இவ்விரு மகான்களைத் தவிர இலங்கைக்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் வேறு சில நேர் சீடர்களும் வந்துள்ளனர். சுவாமி திரிகுணாதீதானந்தர் 1903-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு பணியாற்றச் செல்லும் வழியில் இலங்கைக்கு வந்தார். அவரைத் தொடர்ந்து 1906-ஆம் ஆண்டு சுவாமி அபேதானந்தரும், சுவாமி ராமகிருஷ்ணானந்தரும் இங்கு வந்தார்கள். சுவாமி அபேதானந்தர் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றினார். மேலை நாடு செல்லும் வழியில் சுவாமி துரியானந்தரும் இலங்கைக்கு விஜயம் செய்தார். சுவாமி விஞ்ஞானானந்தர் 1935-ல் இலங்கைக்கு விஜயம் செய்து பணிகளை ஆசீர்வதித்துள்ளார்.

கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தளை, அநுராதபுரம் போன்ற இடங்களில் விவேகானந்த சபைகள் தோன்றின. சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக விளங்கிய சுவாமி சர்வானந்தர் அன்பர்களின் அழைப்பை ஏற்று இங்கு வந்து நாட்டின் பல பகுதிகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அதனால் இலங்கையின் பல பாகங்களிலும் செயற்பட்டு வந்த விவேகானந்த சபைகள் ஊக்கமும் ஆக்கமும் பெற்றன. வாராவாரம் அன்பர்கள் ஒன்றுகூடி சுவாமி விவேகானந்தரின் நூல்களைப் படித்து தெளிவு பெற்றார்கள். கொழும்பு விவேகானந்த சபை தலைநகரில் சிறந்த பணியாற்றிக் கொண்டிருந்த அதே வேளையில் ராமகிருஷ்ண மிஷன் நாட்டின் ஏனைய பகுதிகளில் தனது கல்விப்பணியை சிறப்பாக விரிவாக்கிக் கொண்டிருந்தது. தலைநகரில் நிரந்தரமான ஆஸ்ரமம் 1930-ஆம் ஆண்டு அமையும் வரை கொழும்பு விவேகானந்த சபையே இலங்கை வரும் ராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளுக்கு மையக் கேந்திரமாக விளங்கியது.

கொழும்பில் ராமகிருஷ்ண மிஷனுக்கு நிரந்தரமான ஆஸ்ரமம் அமைய வேண்டியதின் அவசியத்தை பல அன்பர்கள் உணர்ந்தார்கள். சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி சர்வானந்தரும், சுவாமி பிரணவேஷானந்தரும் கொழும்பு நகரில் புதிய ஆஸ்ரமம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நோக்கோடு 10.10.1930 அன்று கொழும்பை வந்தடைந்தார்கள். வெள்ளவத்தை ஹேமாஸ் எவெனியுவிலுள்ள 48-ஆம் இலக்க வீடொன்று புதிய ஆஸ்ரமத்தின் பணிக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், தூய அன்னை சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு சுவாமி சர்வானந்தர் அவர்களால் சமயபூர்வமான சடங்குகளுடன் ஆஸ்ரமப் பணிகள் 22-10-1930-ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில் நடக்கும் மிஷனின் பணிகள் அனைத்துக்கும் கொழும்பு ஆஸ்ரமம் தலைமையகமாக விளங்கியது. 1932-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஸ்ரீவிக்ரம வீதியில் 49-ஆம் இலக்க வீட்டுக்கு புதிய ஆஸ்ரமம் மாற்றப்பட்டது. இங்கு சில வருடங்கள் ஆஸ்ரமம் சிறப்பாகச் செயற்பட்டது.

**புதிய ஆஸ்ரம வளாகம் :** 1935-ஆம் ஆண்டு மார்ச் மாதம் புதன்கிழமை 6 ஆம் தேதியன்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பிறந்த நூற்றாண்டு ஆரம்ப தினமாகும். அன்று அப்போதைய ஆஸ்ரமப் பொறுப்பாளர் சுவாமி அசங்கானந்தரால் வெள்ளவத்தை 44-ஆம் இலக்க வீதியில் (தற்போது ராமகிருஷ்ண ரோட்) புதிதாக வாங்கிய நிலத்தில் புதிய ஆஸ்ரமத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலயம், பிரார்த்தனை மண்டபம், பொது நிகழ்ச்சிகளுக்கான மண்டபம், அலுவலகம், வதிவிடம் முதலியன கட்டப்பட்டன. பின்னாளில் வாசக சாலையும் நூலகமும் திறக்கப்பட்டன.

**கலாச்சார நிலையமும் விருந்தினர் விடுதியும் :** 1959-ஆம் ஆண்டு கலாச்சார நிலையமும், விருந்தினர் விடுதியும் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றிற்காக அப்போதைய இந்திய குடியரசுத் தலைவர் ஸ்ரீராஜேந்திரப்பிரசாத் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. 1962-ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இங்குள்ள சிறிய மண்டபங்களில் ராமகிருஷ்ண மிஷனாலும், ஏனைய நிறுவனங்களாலும் ஏற்பாடு செய்யப்படுகின்ற கல்வி, கலாச்சார,சமய, கலை தொடர்பான கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. இந்தியாவிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் கொழும்புக்கு வரும் அன்பர்கட்குக் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பும், அமைதியுமான சூழலில் தங்குமிட வசதி அளிப்பது இந்நிலையத்தின் சிறப்பான அம்சமாகும்.

**சுவாமி விவேகானந்த நினைவு மண்டபம் :** சுவாமி விவேகானந்தரின் பிறந்த நூற்றாண்டு விழா (1963-64) ஞாபகார்த்தமாக ஒரு மண்டபம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்திய அரசின் தாராள நிதி உதவியுடன் மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள மிகப் பெரிய மண்டபங்களுள் இதுவும் ஒன்றாகும். கலை, கலாச்சார, கல்வி, சமயம் தொடர்பான நிகழ்ச்சிகள் பல இங்கு நடைபெறுகின்றன.

## நூல் நிலையமும் வாசக சாலையும்

தரமான மொத்தம் 6000 புத்தகங்களைக் கொண்டதாக நூல் நிலையம் விளங்குகிறது. சமய தத்துவங்கள், ராமகிருஷ்ண - விவேகானந்த, வேதாந்த இலக்கியங்கள், புராண இதிகாசங்களையும் உள்ளடக்கியதாக நூல் நிலையம் விளங்குகிறது. வாசக சாலையில் 16 சஞ்சிகைகளும், 7 தினசரி செய்தித்தாள்களும் உள்ளன. இப்பகுதி வாழ் மக்கள் இந்நூல் நிலையத்தை சிறந்த முறையில் பயன்படுத்துகிறார்கள்.

**ஞாயிறு சமயப் பாடசாலை :** இப்பாடசாலை 1952-ஆம் ஆண்டு ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் தொடர்ந்து இயங்கும் பழமையான ஞாயிறு சமயப் பாடசாலைகளுள் இதுவும் ஒன்றாகும். தற்போது இப்பாடசாலையில் 815 மாணவர்கள் சமயக் கல்வி பெறுகிறார்கள். 42 ஆசிரியர்கள் தொண்டு மனப்பான்மையோடு சமயப் பணியாற்றுகிறார்கள். இங்கு மாணவர்கள் வெறும் சமய அறிவைப் பெறுவதோடல்லாது யோகாசனம், தியானம், பஜனை, சிரமதானம் போன்ற

செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள்.இலங்கையிலேயே ஒரு முன்மாதிரியான சமயப் பாடசாலையாக இச்சமயப்பாடசாலை விளங்குகிறது.

**ஏனைய பணிகள் :** கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் ஆஸ்ரமம் தலைநகரில் முக்கியத்துவம் வாய்ந்த ஆன்மீக நிலையமாக விளங்குகிறது. சமயத்தின் உயர்ந்த சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த ஆஸ்மரத்தின் பணிகள் அமைந்துள்ளன. அனைத்து சமயக் கருத்துக்களையும் மதித்துப் போற்றும் சமரச கேந்திரமாக விளங்குகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறந்த நூற்றாண்டு விழாவை (1935-36) முன்னிட்டு இங்கு ஒரு சர்வமத மாநாடு நடைபெற்றது. இலங்கையின் சரித்திரத்தில் நடைபெற்ற முதலாவது அனைத்துச் சமய மாநாடு இதுவாகும்.

இங்குள்ள ஆலயத்தில் தினசரி பூஜை, பஜனை முதலிய வழிபாடுகள் இடம் பெறுகின்றன. வெள்ளிக் கிழமைகளில் விசேட கூட்டுப் பிரார்த்தனையும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இங்குள்ள சுவாமிகளால் ஆன்மீக வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன. பௌர்ணமி நாட்களில் அந்தர்யோகம் நடைபெறுகிறது. இதில் பலர் கலந்து கொள்கிறார்கள். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பிறந்த தின விழாக்களோடு சிவராத்திரி, நவராத்திரி, புத்த ஜயந்தி, கிருஸ்துமஸ் முதலிய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்தியை முன்னிட்டு இந்து, பௌத்த, கிருஸ்துவ, முஸ்லீம் ஆகிய மதங்களைச் சார்ந்த பாடசாலை மாணவர்களால் தத்தம் மதங்களில் உள்ள உயர்ந்த கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.


வெளி மாவட்டங்களிலுள்ள அன்பர்கள் மற்றும் நிறுவனங்கள், அரசாங்க திணைக்களங்கள் முதலியவற்றால் ஏற்பாடு செய்கின்ற சொற்பொழிவு, கருத்தரங்கு அந்தர் யோகம் போன்ற நிகழ்வுகளில் இங்குள்ள சுவாமிகள் கலந்து கொள்கிறார்கள். இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் சமய நூல்களை இங்கு கணிசமான குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. வெளிமாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் இடம் பெறுகின்றன.

இந்தியாவிலிருந்து ராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த துறவிகளும் மற்ற அறிஞர்களும் வரவழைத்து இலங்கையில் வெவ்வேறு மாவட்டங்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு மருத்துவ முகாம்கள், வசதியற்ற மாணவர்களுக்கு பண உதவி மற்றும் துயர் துடைப்பு (Relief) போன்ற பணிகளிலும் மிஷன் ஈடுபடுகிறது. ஆன்ம விடுதலை, உலக மேம்பாடு ஆகிய சுவாமி விவேகானந்தரின் லட்சிய கோட்பாடு இங்கு சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பது மிகையாகாது.

சுவாமி அஜராத்மானந்தா


# ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு



குருகுல மாணவர்களின் யோகாசன பயிற்சி




மாணவிகளுக்கு தையற்பயிற்சி



விவேகானந்த ஜெயந்தி ஊர்வலம்



ஞாயிறு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்



மாணவர்கள் தோட்டச்செய்கை



பூந்தோட்டச்செய்கை




மாணவிகள் பூந்தோட்டச்செய்கை



மாலை தொடுத்தல்




சிறுமிகள் பூங்கா



விவேகானந்தரின் $9\frac{1}{2}$ அடி வெங்கலச்சிலையை
ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜி திறந்து வைத்தல்




ராமகிருஷ்ண ஜெயந்தி



காரைத்தீவு சாரதா மகளிர் இல்லத்தோற்றம்

கொழும்பு தமிழ்ச் சங்
நூலக




மட்டக்களப்பில் விவேகானந்தபுரம்
மாதிரிக்கிராமத் தோற்றம்




விழாவின் போது மாணவர்கள் செய்த அலங்காரம்




சுவாமிகளை வரவேற்றல்



சாராதா இல்ல மாணவிகள் பிரார்த்தனையில்



படிப்பறையில்



குருகுல மாணவர்களின் பிரார்த்தனையில்

# ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு

## சில பணிகள்

கிழக்கு மாகாணத்தில் ராமகிருஷ்ண மிஷனின் நிறுவன ரீதியான பணிகள் 1925 ஆம் ஆண்டுதான் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தன. ...ய லோசனம் வித்யா'' அனைத்துக்கும் கண்ணாயிருப்பது கல்வி என்பது வடமொழி வாக்கியம். ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பது தமிழ் மூதுரை. ராமகிருஷ்ண மிஷன் தனது ஆரம்பப்பணியாக கிழக்கு மாகாணத்துக்கு கல்வி என்னும் ஒளியை எடுத்துச் சென்றது. அறியாமை இருளை அகற்ற அயராது பாடுபட்டது. இப்பணியில் மிஷனின் கருவியாக சுவாமி விபுலானந்தர் தியாக சிந்தையோடு செயற்பட்டார். ராமகிருஷ்ண மிஷன் ஆரம்பித்த இப் பணிக்கு மட்டக்களப்பு நகரம், கல்லடி-உப்போடை, ஆரையம்பதி, காரைதீவு மற்றும் ஏனைய ஊர்களைச் சேர்ந்த சமயப்பற்றும், சமூக உணர்வும் கொண்ட பெருமக்கள் பலர் உதவ முன் வந்தனர்.

## சுவாமி விபுலானந்தரின் வருகை

1925-ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிப் பகுதியில் சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். அப்போது அங்குள்ள அன்பர்கள் சிலர் சுவாமி ஆரம்பிக்கவிருக்கும் பணிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்தார்கள். சுவாமி விவேகானந்தரின் பரந்த சமயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வியின் அவசியத்தை சுவாமி விபுலானந்தர் எடுத்துக் கூறினார். அத்தகைய பாடசாலைகளை ஆங்காங்கு நிறுவும் தனது திட்டத்தையும் அங்கு கூடியிருந்த அன்பர்களுக்கு சுவாமிகள் விளக்கினார்.

மட்டக்களப்பில் ராமகிருஷ்ண - விவேகானந்த பக்தர்கள் விவேகானந்த சபை ஒன்றை நிறுவி சமய கலாச்சாரப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இச்சபையினர் சில பாடசாலைகளையும் நிர்வகித்துக் கொண்டிருந்தனர். 1925-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி விவேகானந்த சபையின் தலைவர் திரு. சின்னையா அவர்களால் ஐந்து பாடசாலைகள் சுவாமி விபுலானந்தர் மூலம் ராமகிருஷ்ண மிஷனுக்கு கையளிக்கப்பட்டது.

## கல்விப்பணி

1926-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி மட்டக்களப்பு நகரில் ஆங்கிலப் பாடசாலையொன்று நிறுவுவதற்காக விவேகானந்தரின் நாமத்தைத்

தாங்கிய மண்டபம் ஒன்றை சுவாமி விபுலானந்தரிடம் ஒப்படைத்தனர். பூர்த்தியடையாத நிலையிலிருந்த அந்த மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. சுவாமி யதீஸ்வரானந்தர் சமயச் சடங்குகளைச் செய்து ஆசி வழங்கினார். அவர் முன்னிலையில் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. மட்டு நகரில் ராமகிருஷ்ண மிஷனுக்கு நிரந்தரமான ஆஸ்ரமம் அமையும் வரை இம்மண்டபமே மிஷனின் சமய கலாச்சார கல்விப்பணிகளின் மையக் கேந்திரமாக விளங்கியது.

ஆண்களுக்கு இணையாக பெண்களும் கல்வியறிவு பெற்று முன்னேற வேண்டும் என்று வலியுறுத்தியவர் சுவாமி விவேகானந்தர். காரைதீவு சாரதா வித்தியாலயமும், ஆனைப்பந்தி விவேகானந்த மகளிர் வித்தியாலயமும், கல்லடி உப்போடை விவேகானந்த மகளிர் வித்தியாலயமும் பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளாகும். கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்துக்கும், காரைதீவு சாரதா வித்தியாலயத்துக்கும், முறையே 1925-ஆம் ஆண்டு நவம்பர் 6-ஆம் தேதியும், அதே ஆண்டு அக்டோபர் மாதம் 28-ஆம் தேதியும் அடிக்கல் நாட்டப்பட்டது.

திரு. கதிர்காமத்தம்பி உடையார் மற்றும் திரு. சபாபதிப் பிள்ளை உடையார் ஆகியோரின் சந்ததியினரால் 15 ஏக்கர் நிலமும், சிவானந்த வித்தியாலய புதிய கட்டடமும், கல்லடி உப்போடை தமிழ்ப் பாடசாலை மற்றும் முறக்கொட்டான்சேனை தமிழ் பாடசாலையும் 1926-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி ராமகிருஷ்ண மிஷனின் சேவைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

1930 ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதி மட்டக்களப்பு பிரதேசத்தின் கல்வி, கலாசார சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டிய காலமாகும். இக் காலகட்டத்தில்தான் முறக்கொட்டான் சேனை, சித்தாண்டி, கல்லடி உப்போடை, ஆரையம்பதி, மண்டூர், களுதாவளை, கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று போன்ற இடங்களில் ஜாதி, மத, இன வேறுபாடு இன்றி பரந்த சமய அடிப்படையில் மிஷன் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன. இவ்வாறு ராமகிருஷ்ண மிஷன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 25 பாடசாலைகளை திறம்பட நிர்வகித்து வந்தது.

## மாணவர் இல்லம்

1926-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6-ஆம் தேதி யாழ்பாணத்தில் வண்ணார் பண்ணையில் வெள்ளிக்கிழமை மடம் என்னும் இடத்தில் நான்கு மாணவர்களுடன் மாணவர் இல்லமொன்று ஆரம்பிக்கப்பட்டது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிவானந்த

வித்தியாலயத்தின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இம்மாணவர் இல்லம் 14-11-1929-ஆம் ஆண்டு மட்டக்களப்பு மிஷனுக்கு மாற்றப்பட்டது. தற்போது ராமகிருஷ்ண மிஷனின் நிர்வாகத்தின் கீழ் மூன்று அனாதை இல்லங்கள் இயங்குகின்றன. ஆண்களுக்கான ஒரு இல்லமும் பெண்களுக்கென இரண்டு இல்லங்களும் இயங்குகின்றன.

## இல்லங்களுக்கான புதிய கட்டிடங்கள் :

01-12-1960-இல் ராமகிருஷ்ண மிஷன் நிர்வகித்து வந்த அனைத்து பாடசாலைகளும் அரசாங்கத்தால் தேசிய மயமாக்கப்பட்டன. ஆகவே மிஷன் தனது பணிகளை வேறு திசையில் திருப்பியது. மாணவ-மகளிர் இல்லங்களின் பணிகளை விரிவுபடுத்துதல் மற்றும் சமய கலாசார பணிகளிலும் ஈடுபட்டது.

உலகளாவிய ராமகிருஷ்ண சங்கத்தின் 10-வது தலைவர் ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தஜீ மகராஜ் அவர்கள் 1968 மே மாதம் 10-ஆம் திகதி மட்டக்களப்புக்கு வருகை தந்தார். அவ்வருகையின் போது புதிய மாணவர் இல்லத்துக்கான கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டி ஆசிர்வதித்தார். இப்புதிய மாணவர் இல்லக் கட்டிடத்தின் திறப்பு விழா 27.05.1972 இல் சிறப்பாக நடைபெற்றது.

அதே போன்று ராமகிருஷ்ணபுரம் சாரதா மகளிர் இல்லத்துக்கான புதிய கட்டிடம் 03-06-1985 இல் அப்போதைய இலங்கைக் கிளைத்தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தஜீ மகராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அம்பாறை மாவட்டம் காரைதீவிலும் மகளிர் இல்லத்துக்கான அழகிய புதிய கட்டிடமொன்றை 27-05-1994 இல் உலகளாவிய ராமகிருஷ்ண சங்கத்தின் பொதுச் செயலாளர் சுவாமி ஆத்மஸ்த்தானந்தஜீ மகராஜ் அவர்கள் குழந்தைகளுக்கு அர்ப்பணித்து ஆசீர்வதித்தார்கள்.

இம் மூன்று இல்லங்களிலும் இன்று சுமார் 225 மாணவர்கள் பராமரிக்கப் படுகிறார்கள். தாய் தந்தையரை இழந்த மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு கடந்த 73 ஆண்டுகளாக மிஷன் இப்பணியை பல சிரமங்களுக்கு மத்தியிலும் தடங்கலின்றி இடையறாது ஆற்றி வருகிறது. சிறுவர், சிறுமிகளுக்கு வசிப்பிடம், உணவு, உடை, போன்ற வசதிகள் அனைத்தும் இலவசமாகவே மிஷனால் வழங்கப்படுகிறது. அத்தோடு அவர்கள் சிறந்த கல்வியை பெறவும் சகல வசதிகளும் அளிக்கப்படுகிறது.

## சமய கலாச்சாரப் பணிகள்

இங்குள்ள மாணவரில்ல ஆலயத்தில் தினசரி காலை மாலை, பூஜை பஜனை முதலியன இடம் பெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் விசேட கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது. இதில் இல்ல மாணவர்களோடு ஏனைய பக்தர்கள் மற்றும் சிவானந்த விடுதி மாணவர்களும் இணைந்துகொள்கிறார்கள்.

பௌர்ணமி தினங்களில் மாலையில் லலிதா ஸஹஸ்ரநாம பாராயணமும் ராமகிருஷ்ணரின் அமுதமொழி வகுப்பும் நடைபெறுகிறது.

அவ்வப்போது சமய நிறுவனங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், அரசாங்க திணைக்களங்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சமய நிகழ்ச்சிகளில் இங்குள்ள சுவாமிகள் கலந்துகொள்கிறார்கள்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர், ஆகியோரின் பிறந்த தினங்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்களில் மட்டக்களப்பு மற்றும் அண்மையிலுள்ள பல பாடசாலை மாணவர்கள் அகண்ட நாம பஜனையில் பங்கு பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏனைய விழாக்களாகிய சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, கிறிஸ்துமஸ், புத்த ஜெயந்தி போன்ற விழாக்களும் விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றன. ஊர்கள் தோறும் அவ்வப்போது புத்தகக் கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. இக்கண்காட்சிகளில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு பெரும் பயனடைகிறார்கள்.

1963-ஆம் ஆண்டு விஜய தசமி தினத்தன்று ஞாயிறு சமயப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இன்று சுமார் 300 மாணவர்கள் இங்கு சமய அறிவு பெறுகிறார்கள். 15 ஆசிரியர்கள் தொண்டாற்றுகிறார்கள். மாணவர்களுக்கு சமய அறிவோடு, மாலை கட்டுதல், கோலம் போடுதல், பஜனை போன்றவற்றிலும் பயிற்சியளிக்கப்படுகிறது.

60 குழந்தைகளையும், 4 ஆசிரியர்களையும் கொண்ட பாலர் பாடசாலை யொன்றும் நடத்தப்படுகிறது. 1970-ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலை இயங்குகிறது.

## நிவாரணப் பணிகள்

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்புக் கிளை மாணவர் இல்லங்களை நிர்வகித்தல், மற்றும் சமய கலாச்சார பணிகளுக்கு மத்தியிலும் பல நிவாரணப்

பணிகளையும் செய்துள்ளது. கடந்த காலங்களில் 1957-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போதும், 1958-ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தின்போது மிஷன் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியது.

1978-இல் ஏற்பட்ட பயங்கர சூறாவளியில் மட்டக்களப்பு பிரதேசமே அழிந்தது. ராமகிருஷ்ண மிஷனின் கட்டடங்கள் அனைத்தும் பெரும் சேதத்துக்குள்ளானது. அந்நிலையிலும் மிஷன் தன்னாலியன்ற நிவாரணப் பணிகளைச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக் காலத்தில் இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 63, 900/- பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழுந்த குடும்பங்களுக்கு ரூ. 2,40,000/- செலவில் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டன. இதே போன்று காரைதீவிலும் வீடுகளை இழந்தவர்கட்கு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டன.

அண்மையில் நாவற்குடாவிற்கு அருகில் 'நொராட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 25 வீடுகள், பாலர் பாடசாலை, சிறுவர் பூங்கா முதலியவற்றைக் கொண்ட விவேகானந்தபுரம் என்னும் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு வசதியற்ற நகரசுத்தி தொழிலாளருக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

வருடம் தோறும் வெவ்வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏழை மாணவர்கட்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவது வழமையான பணியாகும்.

## சுவாமி விஞ்ஞானானந்தரின் வருகை :

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர் சீடர்களில் ஒருத்தராகிய சுவாமி விஞ்ஞானானந்த மகராஜ் அவர்களின் வருகையானது மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு கட்டமாகும். இம்மகானின் வருகையானது இலங்கை ராமகிருஷ்ண மிஷன் பணிகளுக்கு புதிய உத்வேகத்தை அளித்தது.

சுவாமி விஞ்ஞானானந்தஜி மஹராஜ் அவர்களும் அவர்களின் குழுவினரும் 3-1-1934-இல் மட்டக்களப்புக்கு வருகை தந்தனர். இவர்களுக்கு பொதுமக்களால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. சுவாமி அவர்கள் இங்கு தங்கியிருந்தபோது இடம்பெற்ற ஒரு நிகழ்வை சுவாமி நடராஜானந்தர் பின்வருமாறு விவரித்துள்ளார்.

"சுவாமி விஞ்ஞானானந்தஜி மஹராஜ் சிவானந்த வித்தியாலயத்தின் கிழக்குப் புறமாக இருந்த ஒரு விசாலமான மாமரத்தின் கீழ் மெய்மறந்து நின்றார். பரவசம் அடைந்த நிலையில் அவர் தனது இரு கைகளையும் அகல விரித்து "இந்த ஸ்தாபனம் இவ்வாறு வளரும் ... இவ்வாறு வளரும்.. இவ்வாறு வளரும் ... என மீண்டும்மீண்டும் கூறினார். அப்படி அவர் கூறியபோது இந்தப் பிரபஞ்சத்தையே அணைத்துக் கொள்வதுபோல் கைகளை அகல விரித்து நின்றார். அவரின் ஆசீர்வாதத்தின் பின் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனின் பணிகள் பல்வேறு துறைகளில் விரிவடைந்தது. ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த மூத்த துறவிகள் பலர் மட்டக்களப்புக்கு வருகை தந்து பணிகளை ஆசிர்வதித்துள்ளார்கள். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருளாலும், துறவிப் பெருமக்களின் ஆசியினாலும், நல் இதயங்கொண்ட அன்பர்களின் ஆதரவினாலும் இந்நிறுவனம் இன்றும் பல்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

(சுவாமி ஜீவனானந்தர் எழுதிய கட்டுரையை துணையாகக் கொண்டு எழுதியது).


*நாம் துயருறுவதற்கு நாம், நாமேதான் காரணம்; வேறு யாரும் அல்ல. நாமே விளைவுகள், நாமே காரணங்கள். எனவே நாம் சுதந்திரர்கள். நான் துன்பப்பட்டால் அது எனக்கு நானே உண்டாக்கிக் கொண்டது; நான் விரும்பினால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது. நான் தூய்மையற்றவனாக இருந்தால் அதுவும் நான் செய்து கொண்டதுதான். இதுவே, நான் விரும்பினால் தூயவனாக இருக்க முடியும் என்பதையும் காட்டுகிறது. மனித சங்கல்பம் எல்லா சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது. அந்த வலிமையான, உறுதியான, எல்லையற்ற சங்கல்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும், இயற்கையின் ஆற்றல்கள்கூட, கட்டாயம் தலைவணங்கியே தீர வேண்டும், ஒடுங்கியாக வேண்டும், சேவகர்களாக வேண்டும்.*

**– சுவாமி விவேகானந்தர்**

**1897, ஜனவரி 23–ஆம் நாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பேசியது**

**பேலூர் மடத்தில்**
**நூற்றாண்டு விழா**
**நிகழ்ச்சிகள்**





Centenary Celebrations
of
Ramakrishna Mission
(1997- 1998)

CONCLUDING PROGRAMME

**All-India Devotees' Convention**

7 and 8 February 1998
Belur Math



# DAWN OF A NEW ERA

*Swami Bhuteshananda*

Benedictory address delivered at the All India Devotees' convention on 7 February 1998

**Dear devotees of Sri Ramakrishna:**

We have assembled here on a very special occasion, when a hundred years have been lived by the association, legally called the Ramakrishna Mission. Of course, for the devotees and for all those who have respect for Sri Ramakrishna, it is the centenary of an epoch-making personality or *yuga purusha*. The Ramakrishna Mission is the stamp that we have for the whole group of people who hold Sri Ramakrishna in respect as the harbinger of a new era. I use the word 'devotee' in that sense, including everybody as a devotee of Sri Ramakrishna. We have gathered here to commemorate the century of the Ramakrishna mission, but the Ramakrishna order began long ago when the devotees of Ramakrishna began gathering around his feet, and formed the nucleus of the Order. Gradually, that seed grew into a huge tree. It has spread its branches not only throughout India but also to many places beyond the borders of this country.

Sri Ramakrishna is a very difficult person to understand; in the sense that he carried with him different aspects of humanity. As for instance, he was a devotee, a social person, an epoch-making personality whom we call the *yuga purusha*. We consider him sometimes as a great devotee, sometimes as a very humble person , sometimes as one very sympathetic towards people and a store house of spiritual knowledge that he came to spread.

Sri Ramakrishna is the representative of all that was good in the past as also of the future possibilities. Sri Ramakrishna came to show us a new way of life in which we can maintain what is good in the past cultures and give direction to the future.

We have gathered here to pay our homage to Sri Ramakrishna and his foremost disciple, Swami Vivekananda. I do not specially mention the Holy Mother Sarada Devi because hers is a personality which is identical with Sri Ramakrishna. Our respect will go to all of them. Swamiji has said that, the *satya yuga* has begun with

the birth of Sri Ramakrishna. Great personalities like Sri Ramakrishna bring about a new era whenever they appear on the horizon and people start their upward course of evolution. This word evolution is a comprehensive term, and means evolving spiritually, socially and in all other aspects.

When Sri Ramakrishna appeared on the horizon of India, who knew that his influence would spread everywhere and will create a new movement known as the Ramakrishna Movement ? The Movement started with him, is going on and is growing from strength to strength throughout the world. Wherever people have a desire to evolve as spiritual entities, there they constitute the members of this Order.

I pray to Sri Ramakrishna, the Holy Mother Sarada Devi and Swamiji for their grace to be showered on you all who have assembled here and also on those who will come later on, to understand Sri Ramakrishna and be participants in the evolution that has been brought about by Sri Ramakrishna. I convey my best wishes to you all and pay homage to Sri Ramakrishna, the Holy Mother and Swamiji.

Thank you.

*The Ramakrishna Mission, gentlemen, teaches us to do all works with the highest of motives. Are you a house-holder? Then look upon your wife and children as images of God and serve them with your whole heart. Are you a monk? Then look upon all human beings as incarnations of God and serve with all your might, and it will help you to rise to the super-conscious state. Are you a patriot? Then give up all petty jealousies and heart-burnings which limit your vision, and work incessantly to make your country really great by helping to stand on what is true and noble. Thus to reach the super-conscious goal by renunciation and service and to help others to do the same, are what the Mission teaches every one of us.*

**- *Swami Saradananda***





# Centenary Celebrations of Ramakrishna Mission


(1997- 1998)

CONCLUDING PROGRAMME

## All-India Youth Convention

3 and 4 February 1998

Belur Math



25745

# SELF-DEVELOPMENT AND NATIONAL DEVELOPMENT

*Swami Bhuteshananda*

*Benedictory address delivered at the Youth Convention held at the Belur Math on 3 February 1998*

Friends,

It is a matter of joy to see you all assembled here to participate in the two-day Youth Convention, organized on the occasion of the concluding session of the centenary of Ramakrishna mission, on the holy grounds of the Belur Math. Even though most of you are busy preparing for your ensuing examinations, you have responded to our call. I extend my hearty thanks to you all.

Swami Vivekananda had cherished high hopes in the younger generation. A few strong and sincere young persons can revolutionize the world, he used to say. The world is in need of revolution today. I do not mean any political revolution, but it is the cultural and spiritual revolutions that are needed now.

Swamiji travelled throughout the whole of India and also many countries in the West. He understood what the world wanted. India needed ,material upliftment, along with the rejuvenation of its ancient culture and spiritual heritage, in order to regain her past glory. He said on the other hand, that with all its material advancement, the West needed a strong foundation of spiritual culture. Swamiji understood that neither of these constituents of growth can survive in isolation. According to him, a combination of science and spirituality was the panacea for all evils of the world. Therefore, soon after his triumphant return to India from the West, Swamiji established the Ramakrishna Mission for the well - being of the many, for the benefit of the many, to bring about the much needed change in world thought. The ideal of the Mission is to make efforts for not only upliftment of the Indian masses, but the all-round well-being of all people of the world. A hundred years after the establishment of the Mission, we can say that some good work has been done; but a lot remains yet to be accomplished.

These days, much damage has been done to our ethical, cultural and social fabric. Everywhere there is a downward trend in all fields. People are attracted by negative ideas in all avenues of growth. The youth are suffering greatly because of this deplorable situation prevailing everywhere. Due to the constant invasion of

weakening thoughts, the youth have lost all faith in themselves. Not only that; they have discarded the ancient glorious culture of the nation. Once a person loses faith in himself, his traditions and his culture, he is doomed. The tendency will then be for a poor imitation of others. That is what is happening here now. Most of the youth are leading aimless lives.

That is why a revolution is needed. What is this revolution that Swami Vivekananda speaks of and how can this be brought about? By revolution, we do not mean that you should all fight with one another. Perhaps you have all heard the story of a child who rearranged a torn map of India correctly, by properly placing together the picture of the man on the other side. When the man was set right, the map also became all right. So also, if the citizens of a country are great, the nation will also become great; because a nation consists of individuals, and the stronger the individuals the stronger will be the nation. Therefore the youth must develop their character so that the nation is put on the right track.

How to develop character? Each one of you must first of all give up negative thinking. Stop thinking that you are weak and helpless. Have immense faith in your potential qualities. Forget all the past mistakes. Think always about the present condition and the future possibilities. This is the first important step.

Secondly, try to be as much selfless as possible. Try to serve others around you wholeheartedly, with the idea that your country's future depends on all of them. Dedicating yourself for the service of others is the best way to serve yourself and the nation. This is the path Swamiji wanted our younger generation to choose for the upliftment of India.


Let not the advent of Swamiji go in vain. Pledge today that you will work for self-development along the lines Shown by Swamiji. Within a very short time, you will see for yourself what a change has come upon you as well as in the society at large.

Swami Vivekananda calls upon each one of you to work for the good of the country in particular, and the world at large. Please listen to this call and evolve yourselves along the path shown by him. I wish you all success in your endeavour.

May the blessings of Sri Ramakrishna, the Holy Mother and Swami Vivekananda be showered on you all, is my prayer to them.

I wish this convention all success.

Thank you.



மாணவர் இல்லக் கட்டிடமும் ஆசிரமமும் – மட்டக்களப்பு

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

"The poor, the illiterate, the ignorant, the afflicted – let these be your God. Know that service to them is the highest Religion".

- Swami Vivekananda



## சர்வசமய சமரசம்

ஸ்ரீராமகிருஷ்ணரின் காலத்திலேயே வரையப்பட்ட படம் இது. அவர் கேசவருக்கு சமயசமரசத்தைப் போதிப்பதாகக் காட்டப் பட்டுள்ளது. அதுபற்றிய உரையாடல் வருமாறு:

ம—: இந்தப் படம் சுரேந்திரருக்காக வரையப்பட்டது.

ஒரு பக்தர்: அதில் நீங்களும் (ஸ்ரீராமகிருஷ்ணரும்) இருக்கிறீர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (புன்சிரிப்புடன்) : ஆம், அதில் எல்லாம் இருக்கிறது. நவீன யுகத்திற்கான லட்சியம் இதுதான்.

வேதங்களோ, பைபிளோ, குரானோ இல்லாத
ஓரிடத்திற்கு மனித இனத்தை அழைத்துச்
செல்ல நாம் விரும்புகிறோம். ஆனால்
வேதங்களையும் பைபிளையும் குரானையும்
சமரசப்படுத்துவதன்மூலம்
இது செய்யப்பட வேண்டும்.
ஒருமைத் தத்துவமான
ஒரே மதத்தின் பல்வேறு வெளிப்பாடுகளே
உலக மதங்கள், ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற
நெறியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவே
இவ்வாறு பல மதங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை
மனித இனத்திற்குப் போதிக்க வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்